

அலேக் அனுபவங்கள்



எங்கள் Blog

K G கௌதமன்

Contents

அசோக் லேலண்ட் அனுபவங்கள் :: முன்னுரை

அலேக் அனுபவங்கள் என்னும் தலைப்பில் என் அசோக் லேலண்டு அனுபவங்களை, ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் ப்ளாக் வலைப்பதிவில் அவ்வப்போது எழுதிவந்தேன்.

அது வாராவாரம் என்று தொடங்கி, மாதம் ஒன்று என்று ஆகி, பிறகு எப்பவாவது என்று தேய்ந்து போனதால், வாசகர்கள் பலரும் அதைத் தொடர்ந்து படிக்க இயலாமல் போனது. மேலும் ஆரம்பகால வாசகர்கள் போய், இடைக்கால வாசகர்கள் வந்து, தற்போதைய வாசகர்கள் பலர் புதியவர்களாக உள்ளனர்.

அந்தக் கட்டுரைகளை, தேதி வாரியாகத் தொகுத்து மொத்தம் முப்பத்து ஒரு கட்டுரைகள் இருக்கின்றன என்று தெரிந்துகொண்டேன்.

எல்லாவற்றையும் வரிசையாக ஒவ்வொரு நாளும் வெளியிட்டால், படிக்கின்ற புதிய வாசகர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதால், இந்த 'நம்ம ஏரியா '

வலைப்பதிவில் மார்ச் ஒன்று முதல், மார்ச் முப்பத்து ஒன்றாம் தேதி வரை தொடர்ந்து வெளியிடப்போகிறேன்.

மார்ச் மாதம் முழுவதும் ஒவ்வொருநாளும், இந்தத் தொடர்பதிவு, இந்திய நேரப்படி காலை ஐந்து முப்பதுக்கு வெளியாகும்.

நன்றி,
வணக்கம்!

மீண்டும் பகிர்வோம்!

எங்கள் ப்ளாக் வலைப்பதிவில் நான் எழுதிய, கட்டுரைகளின் தொகுப்பு. (மே 2012 முதல் ஆகஸ்ட் 2014 வரை)

K G Gouthaman.

My experiences in Ashok Leyaland (1971 to 2006) Reprints of blogs published in engalblog in 2013.

அலேக் அனுபவங்கள் 00 ::முன்னுரை

அசோக் லேலண்ட் என்னும் சமுத்திரத்தில் ஓர் ஓரத்தில் நின்று சுமார் முப்பத்தைந்து வருடங்கள் காக்காய் குளியல் செய்த என்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல், இந்த ப்ளாக் ஆரம்பித்த நாள் முதல் எனக்கு இருந்து வந்தது.

இதை தொடர் போல எல்லாம் எழுதி, உங்கள் பொறுமையை சோதிக்கும் எண்ணமும் எனக்கு இல்லை. இந்தத் தலைப்பில், வாரம் ஒரு பதிவு போடலாம் என்ற எண்ணம மட்டும் இருக்கின்றது. ஒவ்வொரு பதிவும், ஒவ்வொரு தனி அங்கமாக இருக்கும் (என்று நம்புகின்றேன்!)

முஸ்கி (அதாவது 'டிஸ்கி' க்கு ஆப்போசிட்!) இதில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே .... இல்லை. சில இடங்களில் பெயர் குறிப்பிட்டிருப்பேன். சில இடங்களில் பெயர்கள் கற்பனையாக இருக்கக் கூடும். சில இடங்களில் பெயர் குறிப்பிடாமல் நழுவி விடுவேன். சில இடங்களில் பெயர்களை மாற்றிக் கொடுத்திருப்பேன். பெயர்களா முக்கியம்? (என்ன மோ சி பாலன்....? சரிதானா?)

முஸ்கி இரண்டு: இதில் காணப்படும் கருத்துகள், என்னுடைய பார்வை, என்னுடைய அனுபவம், என்னுடைய புரிதல். உடன் பணிபுரிந்தவர்கள் யாரையும் குறை காண்பதோ / குற்றம் சுமத்துவதோ என்னுடைய எண்ணமோ அல்லது விழைவோ இல்லை. அப்படி ஏதேனும் த்வனி தெரிந்தால், அவ்வப்போது அங்கங்கே கருத்துரைத்து உங்கள் ஐயங்களை தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்.

அன்புடன் (அம்புடன்)

கௌதமன்.

****

கி பி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தொன்றாம் ஆண்டு வந்த சனிப் பெயர்ச்சி, மிகவும் முக்கியமானது (எனக்கு!). புலியூர் பாலுவோ அல்லது காழியூர் நாராயணனோ யாரோ ஒருவர் என்னுடைய தனுசு ராசிக்கு அந்த சனிப் பெயர்ச்சி பெரிய நன்மைகளைக் கொடுக்கும் என்று எழுதியிருந்தார்கள். அதைப் படித்து, என்னுடைய அப்பாவும் நானும் ரொம்ப அகமகிழ்ந்து போனோம்.

அந்த வருடத்தின் ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள், அசோக் லேலண்டுக்கு அப்ரெண்டிஸ் ஆக சேருவதற்கு (ஹிந்து பேப்பர் விளம்பரம் பார்த்து) மனு செய்திருந்த எனக்கு, எழுத்துத் தேர்வு ஒன்றுக்காக சென்னை வந்து சேரும்படி அழைப்பு அனுப்பி இருந்தார்கள்.

உடனடியாக, சென்னை வருவதற்கு, ஒரு ரயில் டிக்கெட் பதிவு செய்தார், அப்பா. முதன் முறையாக, தனி ஆளாக அதிக தூரம் (நாகப்பட்டினத்திலிருந்து, சென்னை வரை)பயணம் செய்தது அப்பொழுதுதான் என்று நினைக்கின்றேன்.



அந்தப் பயணத்தின் போது ஒரு திடுக்கிடும் அனுபவம் ஏற்பட்டது.

மீதி அடுத்த பதிவில்...

= = = = = = =

அலேக் அனுபவங்கள் 01:: படித்த பாடம் என்ன?

'பயணத்தின் போது ஒரு திடுக்கிடும் அனுபவம் ஏற்பட்டது' என்று எழுதியிருந்தேன்.

திடுக்கிடும் அனுபவம் பற்றி, வாசகர்கள் பலரும் பல தினுசாக எழுதியதில் எனக்கே குழம்பிப் போய்விட்டது!

நான் ஒரு முன்-ஜாக்கிரதை முத்தண்ணா. ஆதலால், ரயிலில் எனக்கு ரிசர்வ் செய்யப்பட்ட இருக்கையை விட்டு (ஒரு கையை கூட விடாமல்) இந்தண்டை, அந்தண்டை நகராமல், என்னுடைய மஞ்சள் பையை பத்திரமாக பிடித்திருந்தேன். அம்மா ஏற்கெனவே சொல்லியிருந்தாள் - யாராவது ஏதாவது பேசினால் அதை நம்பி விடாதே.எவனாவது திருடன், "இங்கே பாரு தம்பி / அங்கே பாரு தம்பி என்று போக்குக் காட்டி, பையை, பர்ஸை கவர்ந்து சென்று விடுவான். அப்புறம் நீ அசோக லேலண்ட் போகாமல் சோக லாண்டிங் ஆக வேண்டியதுதான்." என்று. முன் ஜாக்கிரதை முத்தண்ணா, அதி முன் ஜாக்கிரதை அப்பண்ணாவாக மாறி, அப்படி பயணம் செய்தேன்.



ஆனாலும் ஒரு பச்சப் புள்ளை எவ்வளவு நேரம்தான் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டிருக்க முடியும்? இயற்கை என்னும், இளைய கன்னி விடுத்த அழைப்பை (nature's call தான். வேறு ஒன்றும் விபரீதக் கற்பனைகள் வேண்டாம்!) தட்ட முடியாமல், எழுந்தேன். மஞ்சள் பையையும் எடுத்துக் கொண்டு செல்லலாமா என்று ஒரு கணம் யோசித்தேன். அப்பொழுது பக்கத்து சீட்டில் இருந்த துப்பறியும் சாம்பு (நான் வைத்த பெயர்தான்!) "தம்பி ஒன்றுக்குப் போகணுமா? பையை சீட்டுக்குக் கீழே வைத்துவிட்டு, சீட்டுல கர்ச்சீஃப் போட்டுட்டு போங்க. நான் பார்த்துக்கறேன்" என்றார்.



எனக்கு ஒரே சந்தோஷம். வேகமாக கைக்குட்டையை பாண்ட் பையிலிருந்து உருவி வெளியே எடுத்து, சீட்டில் போட்டுவிட்டு, கனவேகமாக இலக்கு நோக்கி சென்றேன். தண்ணீர் பிரச்சனை எல்லாம் எதுவும் இல்லை. :))) கருத்துரைப்பவர்கள் கவனியுங்கள். கழிப்பறையை விட்டு வெளியே வருவதற்கு முன் அங்கிருந்த கண்ணாடியில் பார்த்து, தலை சீவிக் கொண்டு, வாஷ் பேசின் குழாயில் தண்ணீர் பிடித்து, முகம் கழுவி, கர்ச்சீ:ப் தேடி போன கை, பிரேக் போட்டு நின்றது. கர்ச்சீ:பைத்தான் சீட்டில் போட்டுவிட்டு வந்தேனே! சரி, முகத்தில் உள்ள ஈரம காய, டிரெய்ன் கதவின் ஜன்னலுக்கு அருகில் நின்று, ரயில் செல்லும் திசையைப் பார்க்கலாம். முகத்தில் மோதுகின்ற

எதிர்க் காற்றில், ஈரம உலர்ந்துவிடும், என்று நின்றேன்.



அப்பா கூறிய வார்த்தைகள், புத்திமதிகள் எல்லாம் காதில் ஒலித்தது. எக்மோர் ஸ்டேஷனுக்கு உன்னுடைய அண்ணன் நிச்சயம் வந்து, உன்னை புரசவாக்கம் அழைத்துப் போவார். அப்படி வரவில்லை என்றால், கவலைப் படாதே. எக்மோர் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும், ரோடை க்ராஸ் செய்து, செருப்புக் கடைக்கு எதிரில் உள்ள பஸ் ஸ்டாப்பில் போய் நின்று கொள். ரூட் நம்பர் பதினாறு, இருபத்து இரண்டு இரண்டில் எது வந்தாலும் அதைப் பிடித்து, புரசவாக்கம் கங்காதீஸ்வரர் டாங்க் ஸ்டாப்பிங் என்று கேட்டு டிக்கெட் வாங்கிக் கொள். பதினைந்து பைசா தான் டிக்கெட். உன்னுடைய பர்சில் சில்லரையாக இரண்டு பத்து பைசாக்கள், ஒரு ஐந்து பைசா வைத்துக் கொள். மெட்ராஸ்ல பஸ் டிக்கெட் வாங்க சில்லறை இல்லை என்று ரூபாய் நோட்டைக் கொடுத்தோம் என்றால், இரக்கம் பார்க்காமல் இறக்கி

விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இதை நினைத்துப் பார்த்தவாறு கை அனிச்சையாக பாண்ட் பையில் இருந்த பர்ஸை தொட்டுப் பார்க்கச் சென்று, என்னுடைய மூளைக்கு ஒரு அவசரத் தந்தியை அனுப்பியது.



பர்ஸைக் காணோம்.

நான் திடுக்கிட்டேன். (இதுதாங்க திடுக்கிட்ட அனுபவம்!)

அப்புறம் நான் என்ன செய்தேன்? அதை அடுத்த பதிவில் சொல்கின்றேன்.

****

அசோக் லேலண்டில் கற்றது:

அப்ரெண்டிசாக இருந்த காலத்தில், என்ஜின் அசெம்பிளி பிரிவில் ஒரு நாள், என்ஜினை ஓவர் ஹெட் கிரேன் வைத்து தூக்கி, அதை அந்தரத்தில் நிறுத்தி, என்ஜினின் அடிப்பாகத்தில் இருக்கின்ற சம்ப ஸ்க்ரூகளை ரி-டைட் செய்யும் நண்பர் ஒருவர், "நீ சூப்பர்வைசர் ட்ரைனியா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றேன். இந்த கிரேன் சரியா வொர்க் பண்ணலை. அதோ அங்கே என்ஜின் ரெக்டிபிகேஷன் செக்ஷன்ல ஒரு கிரேன் இருக்கு பாரு, அதை இயக்கி, இங்கே கொண்டுவா" என்றார். நான் என்ஜின் ரெக்டிபிகேஷன் சென்று, அந்தக் கிரேன் பக்கத்தில் இருந்த ஒருவரிடம், "நான் கிரேனை எடுத்துச் செல்லலாமா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "ஊஹூம் - கூடாது. எனக்கு அதுல வேலை இருக்கு" என்றார்.

நான் திரும்பி வந்து, முதலில் என்னிடம் கிரேன் கொண்டு வரச் சொன்னவரிடம், "கிரேன் பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர், அது தனக்கு வேண்டும்,

நமக்குத் தரமுடியாது என்கிறார்" என்றேன்.



இவர் என்னைப் பார்த்துச் சொன்னது இன்னமும் கீதோபதேசமாய் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. "தம்பி நீ கம்பெனிக்கும் புதுசு, ஊருக்கும் புதுசு என்று நினைக்கின்றேன். நான் சொல்வதை கவனமா கேட்டுக்க. நமக்கு நம்ம வேலை முக்கியம். நம்மளும் கம்பெனி வேலைதான் செய்கிறோம். அது கம்பெனி கிரேன். அவரு வீட்டிலிருந்து கொண்டுவரவில்லை. இங்கே ரொம்பப் பேருங்களுக்கு ஒரு பழக்கம் உண்டு.

யாராவது அவர்களிடம் போய், ஏதாவது பெர்மிஷன் கேட்டா கெத்தா, 'முடியாது' என்று மறுத்து, நம்மைத் திருப்பி அனுப்பி விடுவார்கள். நீ நேராகப் போய், அந்தக் கிரேனை, யாரிடமும் பெர்மிஷன் கேட்டுக் கொண்டிராமல், 'ரைட் ராயலா' எடுத்துக் கொண்டு வந்துகொண்டே இருக்கணும். நம்ப வேலை முடிந்ததும், அந்தக் கிரேனை, அங்கேயே கொண்டுபோய் விட்டு விடலாம். நம்முடைய நோக்கம் நல்லதாக இருந்தால், நாம் யார் தயவுக்கும், அனுமதிக்கும் காத்திருக்க வேண்டியது இல்லை."

உடனே, வீர நடை போட்டு, கிரேனிடம் சென்றேன், கிரேனை இழுத்து வந்து, அவரிடம் கொடுத்தேன். கிரேனை எடுக்கக் கூடாது என்று கூறியவர், ஒன்றும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்!

****



கொசுறு:

நாற்பதாண்டு கால நண்பன் ராகவேந்திரனிடம், (இப்பொழுது அவர் இருப்பது ஸ்ரீரங்கத்தில்) நேற்று தொலைபேசினேன். "டேய் பார்த்தியா? ஐ பி எல் போட்டிக்கு நடுவே தோனி நம்ப யுனிஃபார்ம் போட்டுகிட்டு வந்து, நம்ப கம்பெனி பத்தி இந்தியில ஏதோ சொல்றாரு!" என்றான்!

அலேக் அனுபவங்கள் 02:: உதவிக்கு யாரையும் எதிர்பார்க்காதே!

பர்ஸ் காணோம் என்று தெரிந்தவுடன், பல கற்பனைகள். ஒரு வேளை அண்ணன் எக்மோர் ஸ்டேஷனுக்கு வரவில்லை என்றால், எப்படி பஸ் பிடித்து புரசவாக்கம் போய் சேருவது? 'புரச --- வா --- come' என்று சொல்லுமா அல்லது 'டேய் .போ .... go ...' என்று சொல்லுமா? பல வித சிந்தனைகளுடன் இடத்திற்கு வந்து, சோகமாக உட்கார்ந்துகொண்டேன்.

என்னுடைய கர்ண கடூரக் குரலில், டிரெயினிலேயே பாட்டுப் பாடி, நாலு காசு சம்பாதிக்கலாம் என்று கூட ஓர் ஐடியா வந்தது. ஆனால்
என்னிடம், கையால் 'டிர்ர்ரக், டிர்ர்ரக்' என்று சத்தம் எழுப்புகின்ற தாளக் கருவி (யார் கண்டுபிடித்திருப்பார்கள் இதை!!) தயாராக இல்லை! ஒரு ரப்பர் பாண்ட் மட்டும் இருந்தது. பக்கத்து சீட்டு சாம்புவிடம், "சார்! ஒரு மாட்ச் பாக்ஸ் இருக்குமா?" என்று கேட்டேன். அவர் திடுக்கிட்டுப் போனார். "லைட்டர்தான்

இருக்கு" என்றார். சொல்லியதுடன் நிறுத்தாமல், அவருடைய பையை சீட்டுக்கு அடியிலிருந்து எடுத்து, அதில் ஏதோ தேட ஆரம்பித்தார்.



"எனக்கு காலி நெருப்புப் பெட்டி இருந்தால் போதும்" என்றேன்.

"அது இல்லைங்க தம்பி. இது என்ன? என் பையில் எப்படி வந்தது? ..." என்று கேட்டார். அவர் கையில் என்னுடைய பர்ஸ் !பர்ஸ் பத்திரமாக இருக்கின்றது என்பது தெரிந்தவுடன், ஒரு கெத்து வந்துடுச்சு பாருங்க. எப்படியும் என்னிடம் வந்துவிடும் என்ற நம்பிக்கை! 'அவரே கண்டு பிடிக்கட்டும் என்னுடைய பர்ஸ்தான் என்பதை' என்று நினைத்து, வாயை மூடிக்

கொண்டு வேடிக்கை பார்த்தேன்.



அவர் பர்சைத் திறந்தார். உள்ளே இருந்த படம் !! ஹி ஹி என்னுடைய படம் இல்லைங்க! சிக்கல் சிங்கார வடிவேலர் படம்!! அந்தப் படத்தைப் பார்த்தவுடன் அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை!

அவர் மேலும் ஆராய்ச்சி செய்து சிங்கார வடிவேலர் படத்துக்கு அடியில் இன்னொரு படம் இருக்கின்றதே, - அது என்ன என்று பார்க்க முயற்சி செய்த போது ... நான் அவசரமாகக் குறுக்கிட்டு "சார் அது என்னுடைய பர்ஸ். நான் நீங்க சொன்னது போல, சீட்டுல கர்ச்சீஃப் போட்டேன் இல்லையா -

அப்போ பர்ஸ் கர்ச்சீஃபோடு வந்து கீழே இருந்த உங்க பைக்குள் விழுந்துடுச்சு போலிருக்கு. பையில விழுந்ததால, சத்தமே வரலை, நானும் கவனிக்கவில்லை." என்றேன்.

நல்ல வேளை - அவர் சி சி படத்துக்குக் கீழே இருந்த படத்தைப் பார்க்கவில்லை. அது என்ன படம் என்று கேட்கின்றீர்களா? (அப்பாதுரைக்கு அஞ்சு சான்ஸ்!)


ஆனால் பர்ஸ், பணம் என்று எதையும் பற்றிக் கவலைப் படத் தேவை இல்லாமல் போய்விட்டது. ஸ்டேஷனுக்கு அண்ணன் வந்திருந்தார், என்னை புரசைவாக்கம் அழைத்துச் செல்ல!

==

அ லே வில் கற்றுக் கொண்ட இரண்டாவது பாடம்:அசோக் லேலண்டில்,'அப்ரெண்டிஸ் ஆக சேருகின்றேன் ' என்றவுடனேயே, ஒவ்வொருவர் அங்கு யாரைத் தெரியும் என்ற விஷயங்கள் நிறைய சொன்னார்கள். அப்படி காற்றுவாக்கில் வந்த ஒரு தகவல்: 'எனக்கு வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக்கில், இரண்டு வருடங்கள் சீனியர் ஆக இருந்த டி எஸ் ராஜகோபாலன் (என்னுடைய அண்ணனின் வகுப்புத் தோழன்) அங்கு ஏற்கெனவே

அப்ரெண்டிஸ் ஆக இருக்கின்றார்' என்பதுதான்.

வேலையில் சேர்ந்த இரண்டு வாரங்களுக்குள், அவர் எந்த டிபார்ட்மெண்டில் இருக்கின்றார் என்ற விவரம் தெரிந்து கொண்டு, அவரைத் தேடித் தேடி, அவரை ஒரு நாள் காண்டீனில் சாப்பாட்டுக் கியூவில் நின்று கொண்டிருக்கும் பொழுது கண்டுபிடித்தேன்.



"விஸ்வேஸ்வரன் தம்பிதானேடா நீ! இங்கே சேர்ந்துட்டியா? வெரி குட். இது நம்ப ஊரு போல இல்லை. எவனும் நமக்கு தேடி வந்து எந்த உதவியும் செய்ய மாட்டான். அவனவன் தன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு, போய்கிட்டே இருப்பான். நீயும் அதே போல இருக்கக் கத்துக்க. மற்றவர்களிடம் எந்த உதவியும் எதிர் பார்க்காதே."நான் அப்படி மற்றவர்களுக்கு எந்த உதவியும் செய்யமாட்டேன் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் 'அவனவன் தன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்க்கினே இருப்பான்' என்று டி எஸ் ஆர் சொன்னது எவ்வளவு

உண்மையான வார்த்தைகள் என்பதை அடிக்கடி உணர்ந்தேன்.

==

கொசுறு:

ஒரு டீ எட்டு பைசா. ஒரு இட்லி எட்டு பைசா. ஒரு வடை எட்டு பைசா. ஒரு பொங்கல் பதினாறு பைசா! ஒரு பூரி செட் பதினாறு பைசா. சாப்பாடு நாற்பது பைசா. நான் சேர்ந்த பொழுதும், அதற்குப் பின் அங்கு நான் வேலையில் இருந்த முப்பத்தைந்து ஆண்டுகளிலும் அதே விலைதான்!



அலேக் அனுபவங்கள் 03 :: அண்ணன் காட்டிய வழியம்மா!

எக்மோரிலிருந்து புரசவாக்கத்திற்கு, ஒரு பஸ் பிடித்து, 'கங்காதீஸ்வரர் டாங்க்' நிறுத்தத்தில் இறங்கி, அண்ணன் வழி காட்ட, சுந்தரம் (பிள்ளைத்) தெருவில் இருக்கின்ற அண்ணன் வீட்டை அடைந்தோம். அந்த வீட்டில் மொத்தம் எட்டுக் குடித்தனங்கள் இருந்த ஞாபகம். நாங்கள் இருந்த முதல் மாடியில் ஐந்து குடித்தனங்கள் இருந்தன.



அண்ணி ஆசிரியை. புரசவாக்கம் முத்தையா செட்டியார் ப்ரிபரேட்டரி ஸ்கூலில் பணிபுரிந்து வந்தார். அங்கு படித்த எல்லோருக்கும் (கமல்ஹாசன், மஞ்சுளா, குமுதம் ஆசிரியர் குழுவில் இருந்த சில ஆசிரியர்களின் குழந்தைகள் என்று பெரிய பட்டியலே சொல்லுவார் என்னுடைய அண்ணி! கொஞ்சம் ரீலும் விடுவார். நான் இவர்களில் யாரையாவது சந்தித்தால் அண்ணி சொன்னது சரிதானா என்று அவர்களிடம் கேட்கவேண்டும் !) கீதா டீச்சரை ஞாபகம் இருக்கின்றதா என்று கேட்டால், அவர்கள் என்

அண்ணியைப் பற்றிக் கூறுவார்கள்!

அசோக் லேலண்டில் பெரிய பதவி வகித்துக் கொண்டிருந்த ஒருவர், (பெயர் தெரியும்; ஆனால் சொல்லமாட்டேன்!) நாகைக்கு லீவில் வந்திருந்தார். அவரை, என்னுடைய அப்பாவின் முதலாளிக்குத் தெரியும். அந்த முதலாளியின் சிபாரிசின் பெயரில், நாங்கள் (அப்பாவும் நானும்) அவரைச் சென்று பார்த்தோம். அவரிடம் அசோக் லேலண்டில் எனக்கு அப்ரெண்டிஸ் ஆக சேர) எழுத்துத் தேர்வுக்கு அழைப்பு வந்துள்ள விவரத்தைக் கூறினோம். (ஹி ஹி கூறினோம் இல்லை - கூறினார், என் அப்பா. எனக்கு அப்பொழுதெல்லாம் அதிகம் பேச வராது!) அவர் என்னிடம் சில கேள்விகள் கேட்டார். அசோக் லேலண்டில் நாங்கள் என்ன உற்பத்தி செய்கிறோம் தெரியுமா? என்று கேட்டார். 'லாரி, பஸ்' என்றேன். "Commercial vehicles. Our product name is Comet. Prepare well for quiz type questions" என்றார். எழுத்துத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்தால்தான் மேற்கொண்டு ஏதாவது செய்யமுடியும்" என்றார்.

அந்தக் காலத்தில், நாகப்பட்டினம் (போன்ற பகுதிகளில்) பாலிடெக்னிக் படித்து, மூன்றாவது ராங்க் எடுத்த எனக்கும், முதல் ராங்க் எடுத்த பக்கிரிசாமி, இரண்டாம் ராங்க் எடுத்த கருணாநிதி

போன்ற என் நண்பர்களுக்கும், competitive exams என்றால் என்ன என்றே தெரியாது. எங்களுக்குத் தெரிந்த கடினமான கணிதக் கேள்வி, காலே அரைக்கால் காசுக்கு நாலே அரைக்கால் வாழைக்காய் என்றால், காசுக்கு எவ்வளவு வாழைக்காய்? என்பதுதான். (இந்தக் கேள்விக்கு பதில் தெரிந்தவர்கள், காசுக்கு எவ்வளவு வாழைக்காய் என்று பின்னூட்டத்தில் சொல்லலாம்). அந்தக் காலத்தில் கால்குலேட்டர்கள் கூடக் கிடையாது! .


அண்ணனிடம், competitive exam விவரங்கள் பற்றி நான் கூறியவுடன், அவருடைய அலுவலகத்தில் (Kilpauk Medical College Hospital Administration) சர்க்குலேஷன் லைப்ரரியில் இருந்து, Competition Success Review புத்தகத்தின் நடுவில், சிறிய அளவில் இருக்கும் பகுதியில் இருக்கின்ற கேள்விகள் எல்லாவற்றையும் என்னிடம் கொடுத்துப் படித்து பதில்கள் அளிக்கச் சொன்னார். அது மாதாந்திர பத்திரிக்கை என்று நினைக்கின்றேன். பழைய CSR பத்திரிக்கைகளின் நடுப் பகுதிகளையும், (சர்க்குலேஷன் முடிந்து புத்தகக் கடைக்கு எடைக்கு போட வைத்திருந்த) புத்தகங்களிலிருந்து கிழித்துக் கொடுத்தார். ஒன்று விடாமல் எல்லாவற்றையும்


ஒரு வாரத்திற்குள் படித்து, தயார் செய்துகொண்டேன்.

அப்ரெண்டிஸ் எழுத்துத் தேர்வுக்கு, இந்த கேள்விகள் எல்லாம் பெரிதும் உதவின. அதே வகைக் கேள்விகள் அந்த Written exam கேள்வித் தாளில் நிறைய வந்திருந்தன. அந்த நாட்களில் Quiz type கேள்விகள் என்றால் என்ன என்றே தெரியாதிருந்த எனக்கு Competition Success Review என்ற புத்தகத்தையும், அதன் நடுப் பகுதியையும், கேள்விகளையும், அறிமுகம் செய்து, அண்ணன் காட்டிய வழி, என் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

====================================

அசோக் லேலண்டின் அசெம்பிளி பிரிவில் எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு. ஸ்டீரிங் பாக்ஸ் அசெம்பிளி பிரிவில், ஜான் என்று வயதான நண்பர்.





ஸ்டீரிங் பாக்ஸ் அசெம்பிளி என்பது பார்ப்பதற்கு சுலபமாகத் தோன்றும். ஆனால், கை சக்கரத்தை (steering wheel) சுற்றும் பொழுது, தரை சக்கரத்தை (Road wheel) இயக்குகின்ற Cam & Roller மெக்கானிசம் சரியாக செட் செய்வது மிகவும் கடினமான வேலை. அந்த வேலைக்கு யாராலும் 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்று செய்முறை எழுதமுடியாது. ஸ்டீரிங் வீலில் இவ்வளவு டார்க் கொடுத்தால், அது இயங்கவேண்டும் (இணைப்புகள் இல்லாத பொழுது, இணைப்புகள் இணைத்த பிறகு, வண்டி முழு லோட் செய்த பிறகு என்று பல கட்டங்கள் உண்டு.) என்று சொல்ல முடியுமே தவிர, அதை எப்படி வரவழைப்பது என்பது யாராலும் சொல்லமுடியாது. அவைகளை சரியாக வரவழைக்க ஜான் ஒருவரால் மட்டுமே முடியும். அதற்கு Shims adjustment என்று பெயர். ஜான் அவர்களின் தாரக மந்திரம், 'கண் குன்சு, கை ஃபீலிங்' என்பது. மனிதர் ஸ்டீரிங் அட்ஜஸ்ட் செய்ய வந்தால், இப்படி ஒரு தட்டு, அப்படி ஒரு தட்டு, இங்கேயிருந்து இரண்டு ஷிம் எடுத்து அந்தப் பக்கம், மீண்டும் சில தட்டுகள், சுத்தியல் கொண்டு ஸ்டீரிங் ஷாப்டில் கொஞ்சம் அடி, ராக்கர் ஷாப்டில் கொஞ்சம் தட்டுவார். ஸ்டீரிங் செட்

ஆகிவிடும்.

ஜான் ரொம்ப வருடங்கள் முன்பே ரிட்டையர் ஆகிவிட்டார். தக்ஷிணாமூர்த்தி என்று ஒரு சிஷ்யரை நன்றாகத் தயார் செய்திருந்தார். அவரும் என்னுடைய நண்பர். விரைவில் நாங்கள் இந்த வகை ஸ்டிரிங் பெட்டிகளுக்கும் ஓய்வு கொடுக்கவேண்டி வந்தது.

ஜான் மாதிரி ஆட்கள், அ லே வில் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு யூனிட்டிலும், உண்டு. அவர்கள்தான் அசோக் லேலண்டின் இராஜ அச்சுகள் (King pins) என்று சொல்லலாம்.

=====================================

கொசுறு:

நேற்று எங்களுக்காக Xylo வாடகை கார் (Taxi for sure) ஓட்டிய பால் என்னும் ஓட்டுனர் என்னிடம் கேட்டார், "சார் நீங்க அசோக் லேலண்ட் எண்ணூர்ல வொர்க் பண்ணிணீங்களா? நான் எர்ணாவூர் பாரதி நகர்தான் சார். அந்நியன் ஷூட்டிங் எடுத்தாங்களே, அந்தப் பாலத்துக்குப் பக்கத்தில்தான் வீடு. உங்களுக்கு

இருதயராஜ் தெரியுமா? என்னுடைய சித்தப்பா சார் அவரு."

நான் சொன்னேன் "எனக்கு அசோக் லேலண்டில் இரண்டு இருதயராஜ் தெரியும். ஒருவர் எலெக்ட்ரிகல் பிரிவு. இன்னொருவர் பைலட் ப்ரொடக்ஷன் பிரிவு கிளார்க். நீங்கள் சொல்வது யாரு". பால் உடனே "அவர் அசோசியேஷன் செக்ரட்டரி சார்!" என்றார். .

எனக்கு இப்போ அசோக் லேலண்டில் மூன்று இருதயராஜ்களைத் தெரியும்!

அலேக் அனுபவங்கள் 04:: அப்பலராஜு

குறிப்பு.: இந்தப்பதிவு முதலில் வெளியாகிய தினம் : 12.06.2012. இது மீள் பதிவு.

அசோக் லேலண்டில் அடியேன் பணிபுரிந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் , சற்றேறக் குறைய, பதினாறு ஆண்டுகள் என்னுடைய பாஸ் ஆக இருந்தவர் திரு பி அப்பலராஜு அவர்கள்.

அவர், (11-06-2012 திங்கட்கிழமையன்று) சென்னை வேளச்சேரியில், காலமானார் என்னும் துயரச் செய்தியை, என்னுடைய நண்பர் தேவதாஸ் அலைபேசியில் அழைத்து, சொன்னார்.



திரு அப்பலராஜு பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். அவருடைய மேலதிகாரிகள் இட்ட பணிகள் எதையும் மிகுந்த ஈடுபாட்டுடன், செய்து முடிப்பார். நான், அவருடைய குழுவில் பல கடினமான பிராஜக்டுகள் செய்ததுண்டு. அது பற்றிய விவரங்கள் பிறிதொரு சமயம் எழுதுகின்றேன்.

அவர் அசோக் லேலண்டில், DGM - Quality Control பதவியில் இருந்து, இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஓய்வு பெற்றார். அதன் பிறகு பல மேனேஜ்மெண்ட் கல்லூரிகளில், பெரிய பதவிகள்

வகித்தார். ஆசான் மேனேஜ்மெண்ட் கல்லூரி டீன் ஆக இருந்தார் என்று இணையம் விவரம் தருகின்றது.

அவருடைய ஆன்மா சாந்தியடைய, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கௌதமன்.
12/06/2012.

அலேக் அனுபவங்கள் 05::உதிரம் கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே!

உலக இரத்த தானம் செய்வோர் தினம். (ஜூன் பதினான்கு)

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று எங்கோ படித்த ஞாபகம் உள்ளது. அதைவிட, 'உதிரம தானம் செய்தோர், உயிர் கொடுத்தோரே' என்று சொல்லிவிடலாம்.

எனக்கு வெகுநாட்கள் வரை இரத்ததானம் செய்வதற்கு பயம் இருந்து வந்தது. என்னுடைய இரத்த வகை என்ன என்று கூட அறியாமல் இருந்து வந்தேன். அசோக் லேலண்டில் குறைந்த பட்சம், வருடம் ஒருமுறையாவது இரத்த தான முகாம் நடைபெறும். அசோக் லேலண்டு தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் இரத்த தானம் செய்வார்கள். சில சமயங்களில், தொடர்ந்து ஒரு வாரம் எங்கள் டிரெய்னிங் சென்டரில், இரத்த தான முகாம்

நடைபெறும்.



இரத்ததானத்தின் சிறப்பு பற்றி எடுத்துக் கூறி, என்னை இரத்த தானம் செய்ய அனுப்பி வைத்தவர், என்னுடைய மறக்க முடியாத இனிய நண்பர், இளவேனில். அவர் அதுவரையிலும், நாற்பதுக்கு மேற்பட்ட முறைகள் இரத்ததானம் செய்தவர். (அவரைப் பற்றிய பல விவரங்கள் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விவரமாகப் பதிவிடுகின்றேன். அவர் அநியாயமாக ஒரு விபத்தில் உயிரிழந்தார்.)



முதல் முறையாக டிரெய்னிங் சென்டரில், நண்பர்

இளவேனிலுடன் சென்று இரத்ததானம் செய்து வந்தேன். அதற்கு ஒரு வாரம் கழித்து, எனக்கு, 'இரத்த தானம் செய்வோர் அடையாள அட்டை' (Voluntary Blood Donors Association Card) வந்து சேர்ந்தது. அதில், என்னுடைய இரத்த வகை A2(-) என்று குறிப்பிட்டிருந்தார்கள். அசோக் லேலண்டின் சிறப்பு இரத்ததானப் பிரதிநிதி ஒருவர் (பெயர் மறந்து போய் விட்டது) இயந்திரப் பழுது பார்க்கும் பகுதியை சேர்ந்தவர் என்று நினைக்கின்றேன் என்னை இன்டர்காமில் அழைத்து, "சார் உங்க பிளட் க்ரூப் ரேர் வகை. இனிமேல் பிளட் டொனேஷன் காமப்களில் இரத்தம் கொடுக்காதீர்கள். அவசியம் ஏற்படும்பொழுது மட்டும் இரத்ததானம் செய்யுங்கள்" என்றார்.



அதற்குப் பிறகு, பொன்னேரி பஸ் ஸ்டாண்ட் அருகே ஸ்வீட் கடை வைத்திருக்கும் ஒருவரின் நான்கு வயது சிறிய பையனுக்காகவும், அண்ணா நகரில்

இருக்கும் ஆஷ்லி என்ற ஒரு குழந்தைக்காகவும், ஆஸ்பத்திரிக்குச் சென்று இரத்ததானம் செய்துவிட்டு வந்தேன்.

இரண்டாவது இரத்ததானம் செய்த சில மாதங்கள் கழித்து, குரோம்பட்டை இராதாநகர் பகுதியில், வேறு ஒரு பிரச்னைக்காக ஒரு (எலும்பு சிகிச்சை) மருத்துவரிடம் ஆலோசனை பெறச் சென்றிருந்தேன். என்னைப் பற்றிய விவரங்களை கேட்ட அவரிடம், யதேச்சையாக இரத்ததானம் செய்தது பற்றியும் கூறினேன். என்னுடைய பிரச்னைக்கு மருந்து எழுதிக்கொடுத்த அவர், நான் இரத்ததானம் செய்பவன் என்ற காரணத்தால், என்னிடம் கட்டணம் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை.



வாசகர்களில், இரத்ததானம் செய்தோருக்கு, செய்வோருக்கு, பல்லாயிரக் கணக்கான இதய

நன்றிகள். இரத்ததானம் பற்றி ஐயங்கள் எதுவும் இருந்தால், பின்னூட்டமாகப் பதியுங்கள்; எங்களுக்குத் தெரிந்த மருத்துவர்கள் யாரையாவது அணுகி, விளக்கம் பெற்று, வெளியிடுகின்றோம்.

உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்.

வாழ்க வையகம்.

அலேக் அனுபவங்கள் 06:: சிபாரிசு தேவையா, இல்லையா?

ஒரு வேலையில் சேரவேண்டும் என்று நமக்கு ஆர்வம் இருக்கின்றது. அந்த வேலையில் சேர, சிபாரிசு என்கிற ஒன்று தேவையா இல்லையா என்று என்னைக் கேட்டால், 'சிபாரிசு நிச்சயம் தேவை' என்று (அடித்துக்) கூறுவேன்.



சில 'ஆட்கள் தேவை' விளம்பரங்களில், 'சிபாரிசு கூடாது; எந்த வகையிலாவது சிபாரிசு செய்ய முயற்சி செய்பவர்களின் விண்ணப்பங்கள் தயவு தாட்சண்யம் இன்றி நிராகரிக்கப்படும்.' என்பது போன்ற எச்சரிக்கைகளை முன் காலத்தில் நிறைய

கண்டது உண்டு.



ஆனால், ஒரு கம்பெனியில் சேர்ந்த பிறகு, அதன் உள்ளே என்ன நடக்கின்றது என்று தெரிந்த பின்னால், அதுவும் அசோக் லேலண்ட் போன்ற ஆயிரக்கணக்கில் பணியாளர்கள் உள்ள ஒரு நிறுவனத்தில், முன்னே பின்னே தெரியாத ஆட்களை, வேலைக்கு எடுத்துக் கொள்வது (மேனேஜர் & மேலே உள்ள லெவல் தவிர) மிகவும் அபூர்வம் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

எழுத்துத் தேர்வு நிலை வரை, கல்லூரியில் நல்ல மதிப்பெண் எடுத்த எல்லோருக்கும் அழைப்பு வரும். அதில் தேறியவர்கள், நேர்முக தேர்வில் வடிகட்டப்

படுவார்கள். இந்த நிலை வரும்பொழுதே, சிபாரிசு செய்யக் கூடியவர்களை அணுகி, அவர் மூலமாக நேர்முகத் தேர்வு செய்பவர்களிடமோ அல்லது எந்தப் பகுதிக்காக நடக்கின்ற நேர்முகமோ, அந்தப் பகுதியின் தலைமை ஆட்களிடமோ நம்மைப் பற்றிச் சொல்லுபவர்கள் கிடைத்தால், மிகவும் நல்லது. (நன்கு கவனிக்கவும் - நான் சொல்வது சிபாரிசுக் கடிதம் யாரிடமிருந்தாவது பெற்று,- To whomsoever it may concern - type அதை இன்டர்வியூ செய்பவரிடம் கொடுப்பது அல்ல.)

இதை நான் என்னுடைய அந்தக் கால அனுபவத்திலிருந்து சொல்கின்றேன். இந்தக் காலத்திற்கும் இது சரியாக இருக்கும் என்றே நினைக்கின்றேன்.



நான் அசோக் லேலண்ட் எழுத்துத் தேர்வுக்காக வந்திருக்கின்றேன் என்று தெரிந்தவுடனேயே

அண்ணன் குடியிருந்த போர்ஷனுக்குப் பக்கத்தில் குடியிருந்தவர்களும், அண்ணனுடைய அலுவலகத் தோழர்களும், அண்ணியுடன் பணி புரிந்த சக ஆசிரியைகளும், மற்றும் என்னுடைய அண்ணன் வீட்டுக்கு விசிட் செய்த நண்பர்களும், உறவினர்களும் கூறிய சில கருத்துகள்:

அங்கே நல்ல சம்பளம் கொடுப்பார்கள்.

நல்ல பெர்சனாலிட்டி இருக்கின்ற ஆட்களைத்தான் அங்கு வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள்.

அங்கே யாராவது தெரிந்தவர்கள் இருந்தால்தான் வேலையில் சேர முடியும்.

அங்கே காண்டீன் உணவு நன்றாக இருக்கும்.

காலங்காத்தால எழுந்து வேலைக்குப் போகத் தயாராயிருக்கணும். நைன் டு பைவ் எல்லாம் அங்கே சரிப்பட்டு வராது!

என்னைப் பொறுத்தவரை, அதிகாலை எழும் பழக்கம் எனக்கு பதின்ம வயதிலேயே தொடங்கிவிட்டது. ஆமாம் - வீட்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற தொழிற்பள்ளிக்கூடம் - காலை எட்டு மணிக்கு

வகுப்புகள் ஆரம்பம். ஏழே முக்காலுக்குள் பள்ளிக்கூடம் சென்றுவிடுவேன். ஆறு மணிக்கு எழுந்து, ஏழு மணிக்குள் வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவேன்.



சிபாரிசுகள் பிடித்த அனுபவங்கள் பலப்பல. எழுத்துத் தேர்வு எழுதி முடித்தவுடன், அந்த எழுத்துத் தேர்வு நடந்த இடம் (சென்னை - புரசைவாக்கம் - சி என் டி இன்ஸ்டிடியூட் - ஜூபிலி ஹால்.) நடந்த தேதி (ஆகஸ்ட் 29 - 1971 என்று ஞாபகம்).

என் பெயர், ஊர், பாலிடெக்னிக், எழுத்துத் தேர்வில் என்னுடைய விடைத் தாளில் நான் எழுதிய சுய

விவரங்கள் எல்லாவற்றையும், விரல் நுனியில் வைத்திருந்தேன். அந்தக் கால கட்டத்தில், யாருடன் பேசினாலும், அவர்களிடம் அறிமுகப் படலம் முடிந்தவுடன், நான் கேட்கும் முதல் கேள்வி, 'உங்களுக்கு அசோக் லேலண்டில் யாரையாவது தெரியுமா? அல்லது உங்கள் நண்பர்களில், உறவினர்களில் யாருக்காவது அ லே வில் தெரிந்தவர்கள் யாராவது உண்டா?'
அவர்களிடமிருந்து 'ஆம்' என்று பதில் வந்தால், நான் கேட்கும் அடுத்த கேள்வி, 'அவரை எனக்கு அறிமுகம் செய்து வைப்பீர்களா? எப்பொழுது அவரை சந்திக்கப் போகலாம்?'

இந்த வகையில் நான் (தெரிந்தவர்கள் மூலம்) வலைவிரித்துப் பிடித்தவர்கள்:

அசோக் லேலண்டில் - உதவி ட்ரைனிங் ஆபீசர் ஆக இருந்த ஒருவர்.

அசோக் லேலண்டில் வெல்ஃபேர் ஆபீசராக இருந்த ஒருவர். (இவர் இப்பொழுதைய அரசியல் பெரும் புள்ளி ஒருவரின் காட் ஃபாதர் லெவலுக்கு இருந்தவர் என்பது பிறகு தெரிந்துகொண்ட விஷயம்)

அசோக் லேலண்டில் இண்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ் டிபார்ட்மெண்ட் இன்சார்ஜ் ஆக இருந்த

ஒருவர்.

அசோக் லேலண்ட் காண்டீனுக்குக் காய்கறி சப்ளை செய்பவர் ஒருவர்.

இதில், முதலில் சொல்லப்பட்ட மூவரின் காதுகளுக்கும், என்னைப் பற்றிய விவரங்கள் கொண்டுபோய் சேர்க்கப்பட்டன.

****

அசோக் லேலண்டில் நான் வாங்கிய முதல் பணக் கவரில் இருந்த தொகை எவ்வளவு தெரியுமா? ஏழு ரூபாய்கள்! ஆம். நான் அப்ரெண்டீசாக வேலையில் சேர்ந்தது டிசம்பர் ஒன்பதாம் தேதி, 1971.





ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் வாரத்தில், அதற்கு முந்தைய ஆண்டில் எடுக்கப்படாத லீவு நாட்களுக்கு என்காஷ்மெண்ட் கொடுத்துவிடுவார்களாம். முதல் மாத சம்பளம் வருவதற்கு முன்பே, லீவ் என்காஷ்மெண்ட் ஆக, ஒருநாள் சம்பளம் கைக்கு வந்து சேர்ந்தது. பேஸிக் நூறு ரூபாய், டி ஏ நூற்றுப் பத்து ரூபாய். மொத்தம் இருநூற்றுப் பத்து ரூபாய். ஒரு நாள் சம்பளம் ஏழு ரூபாய். அந்த சம்பளக் கவரையும், ஐந்து + இரண்டு ரூபாயையும் பல வருடங்கள் அப்படியே வைத்திருந்தேன்!

அலேக் அனுபவங்கள் 07:: அசோக் லேலண்டு முதல் தரிசனம்!

அசோக் லேலண்டு எழுத்துத் தேர்வு முடிந்த இரு மாதங்கள் கழித்து, நேர்முகம் காணலுக்கான அழைப்பு வந்தது.



அதற்குள்ளாகவே நான் சென்னையில் மற்றும் பெங்களூரில் இரண்டு மூன்று கம்பெனிகள் நேர்முகம் சென்று வந்தேன். சென்னை அண்ணா சாலையில் கே சி பி எஞ்சினீரிங் பிரிவுக்கான டிராஃப்ட்ஸ் மேன் வேலைக்கு, பெயர் தெரியாத 'வால்வ்ஸ் அண்ட் பைப் பிட்டிங்க்ஸ்' கம்பெனி ஒன்று, எம் எப் எல், பாம்பே கம்பெனி ஒன்றிற்காக

பெங்களூரில் ஹோட்டல் பிருந்தாவனில் ரூம் போட்டு டெஸ்ட் வைத்து, நேர்முகம் கண்ட கம்பெனி ஒன்று.



ஹிந்து பேப்பரில் ஒரு மருந்து மாத்திரை கம்பெனியில் டி எம் இ படித்த ஆட்கள் வேலைக்கு வேண்டும் என்று எழுதியிருந்ததைப் பார்த்து, அதற்கும் அப்ளிகேஷன் அனுப்பினேன். பதில் வரவில்லை. ஒருவேளை 'டி எம் இ' என்று மருத்துவ சம்பந்தப்பட்ட படிப்பு ஏதேனும் இருந்திருக்குமோ அல்லது டி எம் ஓ (டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர்?) என்பது போன்ற அச்சுப் பிசாசு (பிரிண்டர்'ஸ் டெவில்) செய்த வேலையோ .... தெரியவில்லை! அசோக் லேலண்டு செய்த புண்ணியம் - என்னை

வேறு யாரும் அதற்குள் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை!

நான் பாலிடெக்னிக் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்த போதே, டி என் பி எஸ் சி (தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன்) பரீட்சை எழுதியிருந்தேன்.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் கழித்து, இதே நேரத்தில், என்னை வேலைக்கு வந்து சேரும்படி (மதுரையில், ஷிப்பெர்ஸ் - செய்லர்ஸ் அலுவலகத்தில் எழுத்தராக சேரும்படி) ஒரு சாணிக் கலர் காகிதத்தில் டைப் அடித்து, அனுப்பி வைத்திருந்தார்கள். நான் போய் வேலையில் சேர்ந்தவுடன், அங்கு வேலையில் இருக்கும் 10A1 கிளார்க் ஒருவரை அந்த வேலையிலிருந்து தூக்கிவிடுவார்கள் என்று குறிப்பிட்டு, அவருக்கும் ஒரு நகல் அனுப்பப்பட்டிருந்தது. அவர் அநேகமாக என்னை திட்டிக்கொண்டே இருந்திருப்பார். ஆனால், வேலையில் சேரவேண்டிய கடைசி நாள் வரையில் நான் வந்து சேரவில்லை என்று தெரிந்த பிறகு, என்னை வாழ்த்தியிருப்பார் என்று நினைக்கின்றேன்!

அசோக் லேலண்டு எண்ணூர் பயிற்சி மையத்தில் எனக்கும், மற்ற நண்பர்களுக்கும், நேர்முகம் காணல் நடைபெற்றது. அதுவரையிலும் எனக்கு, எண்ணூர், சென்னையின் எந்தக் கோடியில் இருக்கின்றது என்பது கூட தெரியாது. அண்ணனிடம் இருந்த பழைய சிடி மேப்பில், பொத்தல்களுக்கு நடுவே பார்த்ததில், ஜியார்ஜ் டவுனுக்கு வடக்கே வெற்றுத் தாளாக விட்டிருந்தார்கள். ஒரு அம்புக்குறி போட்டு, ராயபுரம், தண்டையார்பேட்டை, திருவொற்றியூர், எண்ணூர் (செல்லும் வழி) என்று போட்டிருந்தார்கள்.



அண்ணன் குடியிருந்த போர்ஷனுக்குப் பக்கத்துப் போர்ஷனில், தாம்சன், ஜான் என்று இரண்டு நடத்துனர்கள் (சென்னை நகரப் போக்குவரத்து) இருந்தனர். இருவரும் எனக்கும், அண்ணனுக்கும் நண்பர்கள். அதில், ஜான், என்னை அசோக் லேலண்டில் நேர்முகம் காணல் அன்று என்னை அங்கே கொண்டு போய் விடுவதற்கு வந்தார். புரசவாக்கத்திலிருந்து ஒரு பேருந்து பிடித்து தங்கசாலைக்கும், பிறகு அங்கிருந்து வேறு ஒரு பேருந்து பிடித்து, எண்ணூருக்கும் போய்ச் சேர்ந்தோம்.

இந்தப் பயணத்தில் நான் தெரிந்துகொண்ட ஒரு

சிறிய தகவல் - இங்கே எழுதுகின்றேன். ஜானுக்கு டூட்டி பாஸ் இருந்ததால், அவர் எனக்காக (மட்டும்) காசு கொடுத்து, டிக்கெட் வாங்க முற்பட்ட பொழுதெல்லாம், அந்தந்தப் பேருந்தில் இருந்த நடத்துனர்கள், அவரிடம் காசை வாங்காமல், அவரிடமே கொடுத்துவிட்டு, அவரை தோளில் ஒரு தட்டு, என்னை தோளில் ஒரு தட்டு என்று செல்லமாகத் தட்டிச் சென்றனர்! பிறகு ஜான் என்னிடம், அவருடைய யூனியனைச் சேர்ந்த நடத்துனர்கள் என்றால் இப்படி செய்வார்கள் என்றும், வேற்று யூனியன் ஆள் என்றால், எனக்கு பைசா வாங்கிக் கொண்டு, பயணச் சீட்டு கொடுத்திருப்பார் என்றும் சொன்னார்.



அசோக் லேலண்டு வாசலில் நாங்கள் இருவரும் இறங்கியவுடன், கம்பெனி காம்பவுண்டைப் பார்த்ததுமே, ஜான் உறுதியாகச் சொன்னார்: "சாரே! உனக்கு நிச்சயம் இங்கே வேலை கெடச்சிடும்" எனக்கு ஒரே சந்தோஷம்! அவருக்கு நன்றி கூறினேன். பிறகு அவர் விடை பெற்று சென்றார்.

நான் கம்பெனியின் கேட் அருகே சென்று, அங்கு இருந்த செக்யூரிட்டி அலுவலரிடம், என்னுடைய நேர்முகம் காணல் அழைப்புக் கடிதத்தைக் காட்டினேன். அவர் என்னிடம், "இண்டர்வியூவுக்கு வந்திருக்கீங்களா? உள்ளே போய், லெப்டுல திரும்பி கடைசி வரை போங்க. அங்கே லெப்டுல இருக்கு டிரெயினிங் செண்டர்." என்றார். சென்னை மாநகரத்தில், முதன் முதலாக ஒருமையில் பேசாமல், பன்மையில் மரியாதையாக 'நீங்க, வாங்க, போங்க' என்று ஒருவர் பேசியதைக் கேட்டு, எனக்கு மயக்கமே வந்தது.

மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் மீண்டும் தொடர்கின்றேன்!

அலேக் அனுபவங்கள் 08:: இண்டர்வியூ.

நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த நிகழ்ச்சியாக இருந்தபொழுதும், அசோக் லேலண்டில் இஞ்சினீரிங் அப்ரெண்டிஸ் ஆகச் சேருவதற்கு முன் நடந்த நேர்காணலில், என்னென்ன கேள்விகள் கேட்கப்பட்டன, அவற்றிற்கு நான் என்னென்ன பதில்கள் கூறினேன் என்பதெல்லாம் எனக்கு நன்றாக நினைவில் உள்ளன.

இண்டர்வியூ செய்தவர்கள் மூன்று பேர். அவர்களின் பெயர்களை ஞாபகம் வைத்துள்ளேன். ஆனாலும், அவர்களை, வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றேன். அவர்களைத் தெரிந்தவர்கள், பலர் இருக்கின்றார்கள் என்பதால். அவர்களின் புனைபெயர்கள், நந்தா, சென், சாரி என்று வைத்துக் கொள்கிறேன். நந்தா - பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளர். சென் - இஞ்சினீரிங் பிரிவின் அதிகாரி, சாரி - இயந்திரப் பிரிவின் அதிகாரி. (இந்தத் தகவல்கள், இன்டர்வியூவின் பொழுது எனக்குத் தெரியாது, அப்ரெண்டிஸ் ஆக

சேர்ந்த பிறகு தெரிந்து கொண்டேன்.)

=======================

நந்தா: "வாப்பா, உட்கார். உன் பெயர் என்ன?"

நான்: "நன்றி சார். (உட்கார்ந்துகொண்டு) என் பெயர் கே ஜி கௌதமன்."

நந்தா: "உன் பெயரில் உள்ள கே எதைக் குறிக்கின்றது? கான்பூரிலிருந்து வருகின்றாயா? "

நான்: "இல்லை சார்! என் பெயரில் உள்ள கே, என்னுடைய சொந்த ஊராகிய கல்யாணமகாதேவியைக் குறிக்கின்றது. "

நந்தா: "ஜி?"

நான்: "என் அப்பா பெயராகிய, கோபாலனைக் குறிக்கின்றது."

நந்தா: "அப்புறம்?"

நான்: "மீதியுள்ள கௌதமன் என் சொந்தப் பெயர்! "

சாரி: "உங்கள் சர்டிபிகேட்டுகளை இப்படிக் கொடுங்கள். "

கொடுத்தேன்.

என்னுடைய ஒரிஜினல் சர்ட்டிபிகேட்டுகளை நந்தா பார்வையிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில்,

சென் : "டிப்ளமோ பாஸ் செய்ததிலிருந்து இதுவரையில் என்ன செய்துகொண்டிருந்தாய்?"

நான்: "சும்மாதான் இருந்தேன் சார்!"

சென்: "ஆர் கே டிப்பார்ட்மெண்ட் வேலையா?"

நான்: "அப்படி என்றால்?"

சென்: "ரைஸ் கில்லிங் டிப்பார்ட்மெண்ட் வேலையா ...!!!"

வாய் விட்டுச் சிரித்தேன். என் சிரிப்பில் மற்றவர்களும் கலந்துகொண்டார்கள். (காம்பெடிஷன் சக்சஸ் ரிவ்யூ புத்தகத்தில், அன்றைய தேதி வரை ஐ ஏ எஸ் இண்டர்வியூக்கள் பற்றி, பல கட்டுரைகள் படித்திருந்தேன். நேர் காணலில் அவர்கள் சொல்லாமல் நாம் உட்காரக் கூடாது என்பதில் ஆரம்பித்து, தொட்டால் சுணங்கியாக இருக்கக் கூடாது, இண்டர்வியூ செய்பவருடன் விவாதம் / வீண்வாதம் செய்யக் கூடாது, தெரியாதவற்றை, தெரிந்தது போலக் காட்டிக்

கொள்ளக்கூடாது என்று பல உபயோககரமான தகவல்கள் அந்தப் புத்தகத்திலிருந்து தெரிந்து வைத்திருந்தேன்.)

சாரி, சென் இருவரும்: "அட! எழுபத்தொரு சதவிகித மார்க்குகளா! சரி, நீ இந்த மார்க்குகளுக்குத் தகுதி உடையவன்தானா என்று சோதித்துப் பார்த்துவிடுகின்றோம்!"

நான்: சிரித்தபடி, "ஷ்யூர் சார்!"

சாரி: "நாங்கள் உன்னை, எந்த சப்ஜெக்டில் கேள்வி கேட்கலாம்?"

நான்: "மெக்கானிக்கல் இஞ்சினீரிங் ..."

சாரி, சென் இருவரும்: "அது மிக மிக பெரிய ஏரியா - வேறு ஏதாவது அதிலிருந்து சிறிய பகுதி - உன்னுடைய ஸ்பெஷல் ஏரியா ஏதாவது கூறு?"

நான்: "என்னை நீங்கள், என்னுடைய தேர்வு (எலெக்டிவ்) சப்ஜெக்ட் ஆகிய மெஷின்ஷாப் டெக்னாலஜியில் கேள்விகள் கேட்கலாம்!"

சாரி: "ஓ அப்படியா? What is the formula for Tool life?"

Me: "V * T whole power n = C (constant)."

Chari: "What is V, what is T?"

Me: " V is the cutting speed, T is the tool life, n and C are constants found by experiments depending upon the tool material, work piece and feed rate."

Chari: "Very good. Can you draw the sketch of centre-less grinder?"


Me: "Internal or external sir?"

Chari: "Again, very good!. Draw external centre-less grinder."

Me: "I can draw only a schematic diagram - a rough sketch"

Chari: "That is enough for us." என்று சொல்லி, ஒரு பென்சிலையும், நோட்டுப் புத்தகத்தையும் என் கைகளில் கொடுத்தார்.

நான் கீழ்க் கண்டது போல ஒரு படம் வரைந்தேன்.



சாரி: "எல்லாம் சரி, ஆனால், வொர்க் சப்போர்ட் சரியில்லை. வொர்க் பீஸ் முனையில் வி ஷேப் இருக்கவேண்டும்."

நான்: "ஆம். நீங்கள் சொல்வதுதான் சரி."

சாரி: "அதனால் என்ன - பரவாயில்லை!"

என்னுடைய எழுத்துத் தேர்வு மார்க்குகள், அவர்களிடமிருந்த ஒரு கோப்பில் இருந்தன. அதை மூவரும் பார்த்துவிட்டு, திருப்தியாக தலையை ஆட்டிக் கொண்டனர்.

நந்தா: "என்ன விளையாட்டு தெரியும்?"

நான்: " நான் .... என்று ஆரம்பிப்பதற்குள், அவரே மீண்டும், "பம்பரம் விடுவியா? பட்டம் விடுவாயா" கில்லி?" என்றார். எல்லோரும் சிரித்தார்கள்.

நான் ஒருவாறு சிரித்துச் சமாளித்து, "நான் சதுரங்கம் ஆடுவேன்" என்றேன். சாரி மீண்டும் 'வெரி குட்' என்றார்!

சென்: " செஸ் போர்டுல மொத்தம் எவ்வளவு கட்டங்கள்?"

நான்: "அறுபத்துநான்கு"

சாரி: "வாட் ஈஸ் கிராண்ட் ஸ்லாம்?"

அதுவரையில் அந்த சொற்றொடரை நான் கேள்விப் பட்டதே இல்லை. அது செஸ் சம்பந்தப்பட்டதா அல்லது வேறு விளையாட்டுகள் சம்பந்தப் பட்டதா என்று கூடத் தெரியாது. (பிறகு என்னுடைய அப்பா, சீட்டாட்டத்தில் பிரிட்ஜ் ஆட்டத்திலும் கிராண்ட் ஸ்லாம் உண்டு, டென்னிஸ் விளையாட்டிலும் உண்டு என்று கூறினார்.)

மீண்டும் சமாளித்து, "எனக்கு செஸ் விளையாட்டில் பெரிய வார்த்தைகள் எதுவும் தெரியாது,

விளையாடத் தெரியும், விளையாடுவது உண்டு - அவ்வளவுதான்" என்றேன்.

சென் அதற்குள், "பொது அறிவு இருக்கின்றதா என்பதையும் சோதிக்க வேண்டும் என்று சொல்லிருக்கிறார்களப்பா ..." என்று சொல்லியபடி, " வேர் ஈஸ் அவர் ப்ரைம் மினிஸ்டர் நவ்?" என்று கேட்டார்.

அதற்குள் நந்தா குறுக்கிட்டு, "இருங்க முதலில் நம் பிரதமமந்திரி யார் என்று அவரைக் கேளுங்கள். அது தெரிகின்றதா என்று பார்ப்போம்" என்றார்.

நான்: "நம்முடைய பிரதமர், திருமதி இந்திராகாந்தி அவர்கள்."

நந்தா: "ஏன்? நேரு இல்லையா? அவருக்கு என்ன ஆச்சு?"

நான்: "திரு ஜவகர்லால் நேரு ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு மே மாதம் இருபத்தேழாம் தேதி புதன்கிழமை - காலமானார். அவருக்குப் பிறகு, திரு லால்பஹதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமரானார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தாறாம் ஆண்டிலிருந்து, இன்றுவரை திருமதி இந்திராகாந்தி அவர்கள் நம்

பிரதமராக இருக்கின்றார்."

சென்: "அது சரி, அவர் இப்போ எங்கே இருக்கின்றார்?"

நான்: "அவர் புது டெல்லியில்தான் இருக்கின்றார் என்று நினைக்கின்றேன்."

சென்: "நீ அப்படி நினைக்கவில்லை என்றால், எங்கே இருப்பார்?"

நான்: "அப்பொழுதும் புதுடில்லியில்தான் இருப்பார்!"

சென்: "நல்லா குழப்புறேப்பா நீ ... சரி இன்றைய ஹிந்து பேப்பரில் என்ன தலைப்புச் செய்தி?"

நான்: "Thousands of people die in Orissa due to floods"

சென் (யோசனை செய்து பார்த்துவிட்டு,) 'கரெக்ட்' என்றார்.

எல்லோரும்: "எங்களை ஏதாவது கேட்க விரும்புகின்றாயா?"

நான்: "ஒன்றும் இல்லை சார்."

நந்தா : "அப்போ நீ செல்லலாம் - உன் சர்டிபிகேட்டுகளை எடுத்துச் செல்."

நான் : "நன்றி சார்."

அலேக் அனுபவங்கள் 09 :: அசோக் லேலண்டில் நான் செய்துகொண்ட சில அறிமுகங்கள்.

அசோக் லேலண்டில், பயிற்சி ஆண்டுகள் (அதுவரை) மூன்று ஆண்டுகள். எங்கள் (எங்கள் ப்ளாக் அல்ல) குழுவிற்கு இரண்டரையாண்டுகள் ஆக்கப்பட்டு, அதற்கு அடுத்த ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் ஆயிற்று. அதற்குப் பின் ஒரே வருட பயிற்சிக் காலம் ஆகியது என்று ஞாபகம்.

எங்கள் பயிற்சி காலத்தை, மூன்றாகப் பிரித்திருந்தார்கள்.

முதல் ஆறுமாதம் இண்டக்ஷன் ட்ரைனிங் (Induction training) பிறகு ஒன்றரை வருடங்கள் இன்டென்சிவ் ட்ரைனிங். (Intensive Training) இறுதியாக சிறப்புப் பயிற்சி. (Specialisation) முதல் ஆறுமாதப் பயிற்சியில்,

பாக்டரியில் இருக்கின்ற எல்லா டிபார்ட்மெண்ட்களிலும் ஒரு நாளோ அல்லது இரண்டு நாட்களோ இருந்து, அங்கு நடப்பது என்ன, அமைப்பு என்ன நிர்வாக ஏணியமைப்பு என்ன எல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்து கொண்டதை, ஒரு பருமனான வேலைக் குறிப்பு நோட்டுப் புத்தகத்தில் (Work Diary) பதியவேண்டும். பதிந்ததை அந்தந்த டிபார்ட்மெண்டு அதிகாரிகளிடம் காட்டி, கையெழுத்து பெறவேண்டும். பிறகு அதை பயிற்சி மையம் அதிகாரியின் பார்வைக்கு வைக்கவேண்டும். ஒரு பகுதிக்கு பயிற்சிக்கு அனுப்பினால், அந்தப் பகுதியின் பயிற்சிக் குறிப்பை, அடுத்த ஒருவாரத்துக்குள் எல்லா கையெழுத்துகளும் பெற்று, சுபம் பாடி முடித்திருக்கவேண்டும். இல்லையேல் அரியர்ஸ் கதை ஆகிவிடும்.

ஒருமுறை என்னையும் (மாட்டிய) மற்ற ஐந்தாறு பேர்களையும் பயிற்சி மைய தலைமையதிகாரி, கேட்பாஸ் போட்டு, வீட்டுக்கு அனுப்பிவிட்டார். 'போங்க, போய் மீதி இருக்கும் பகுதிகளுக்கான பயிற்சிக் குறிப்புகளை எழுதி முடித்து, நாளைக் காலை என்னிடம் கொண்டுவந்து காட்டுங்கள். அந்தந்த அதிகாரிகளின் கையெழுத்துகளை, நான் இந்த ஒருமுறை, ஆளனுப்பி வாங்கிக்


கொடுக்கின்றேன். உங்கள் பெயர்களை 'பாட்ரிக்'கிடம் கொடுத்துச் செல்லுங்கள். இன்னும் ஒரு தடவை இந்தமாதிரி நிகழ்ந்தால், நான் தயவு தாட்சண்யம் பார்க்கமாட்டேன்' என்றார். பிறகு அந்த நிலை ஏற்படாமல் மிகுந்த கவனம் எடுத்துக்கொண்டேன்.

இந்த வேலைக் குறிப்பு நோட்டு, பயிற்சிக் காலம் முழுவதும் ஒரு பெரும் சுமையாக இருந்தது. இன்டென்சிவ் ட்ரைனிங் என்றால் சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் இரண்டு முதல் நான்கு அல்லது ஆறு வார காலம் பயிற்சி. இறுதியாக ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு வருட காலம் சிறப்புப் பயிற்சி என்று அனுப்பப்பட்டோம் என்றால், அநேகமாக அதுதான் நம்முடைய பெர்மனெண்ட் வேலைக்கான பகுதி என்று முடிவாகிவிடும். பயிற்சிக் கால அளவு, நாட்கள் கொஞ்சம் வித்தியாசப் படலாம். ஆனால் இண்டக்ஷன் / இன்டென்சிவ் / ஸ்பெஷலைசேஷன் என்னும் ஏணிப்படிகளைக் கடந்துதான் மேலே வரவேண்டும்.

நான் அசோக் லேலண்டில் (அப்ரெண்டிஸாக) சேர்ந்த தேதி, 9-12-1971. வியாழக்கிழமை.


குமுதம்
9-12-71







அதே தேதியிட்டு வந்திருந்த குமுதம் இதழில், நான் எழுதியிருந்த ஒரு கடிதம் பிரசுரம் ஆகியிருந்தது. ஏற்கெனவே சுயதம்பட்டம் தட்டுபவன், இதுவும் சேர்ந்துகொண்டவுடன், ஒரே குஷி. இண்டக்ஷன் ட்ரைனிங் செல்லுகின்ற பகுதிகளில், இருப்பவர்கள் யார் கையிலாவது, மதிய உணவு நேரத்தில், குமுதம் பத்திரிகையைக் கண்டேன் என்றால், உடனே

அவரிடம் பேச்சு கொடுத்து, அந்தக் குமுதத்தில், எண்பத்தேழாம் பக்கத்தில், என்னுடைய கடிதம் வெளியாகியிருப்பதைக் கூறுவேன். அவர்கள் ஆர்வத்துடன் கடிதத்தையும் படித்து, என்னுடன் பேசி, நண்பராகிவிடுவார்.

அசோக் லேலண்டில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மாகசீன் சர்க்குலேஷன் க்ளப் உண்டு. அந்த வாரத்தில் அந்தந்தப் பகுதிகளில் யார் கையில் அந்தக் குமுதம் காணப்பட்டதோ அவர்கள் எல்லோரையும் அறிமுகம் செய்துகொண்டேன். அவர்கள் தங்கள் நண்பர்களிடம் எனனை அறிமுகப் படுத்தி வைத்தார்கள். இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட சுயதம்பட்டம், பல நண்பர்களை எனக்கு அசோக் லேலண்டில் பெற்றுத் தந்தது.

அலேக் அனுபவங்கள் 10 :: லஞ்ச எதிர்ப்பு!

இது அசோக் லேலண்டு அனுபவம் இல்லை என்றாலும், அசோக் லேலண்டில் சேருவதற்காக, எனக்கு ஏற்பட்ட அனுபவம் என்ற வகையில் பகிர்கின்றேன்.

அசோக் லேலண்டு இண்டர்வியூ முடிந்து சில மாதங்கள் (!) கழித்து, என்னை, இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன், டிசம்பர் இரண்டாம் தேதி (1971) வந்து பார்க்கும்படி, கடிதம் எழுதியிருந்தனர்.





ஒன்று: மார்புப் பகுதியின் எக்ஸ் ரே படம்.

இரண்டு : வாக்சினேஷன் சான்றிதழ்.

மூன்று : டிப்ளோமா சான்றிதழ் மற்றும் மார்க் ஷீட் ஒரிஜினல்.

அண்ணனுக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் மூலமாக, கீழ்ப்பாக் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடலில், டாக்டர் ப்ரிஸ்க்ரிப்ஷன் இல்லாமல், எக்ஸ் ரே (அதற்குரிய கட்டணத்துடன்தான்!) எடுத்துக் கொண்டேன். நாங்கள் கேட்காமலேயே அதில் ஒரு ரிப்போர்ட் வேறு - கவர் மீது ஒட்டிக் கொடுத்துவிட்டார்கள். அதிலே பார்த்தால் - எனக்கு

பிராங்கிடிஸ் இருப்பதாக கண்டுபிடித்து எழுதியிருந்தார் யாரோ ஒருவர். ('என்னை நீ முன்னே பின்னே பாத்துருக்கியா ஐயா? அப்புறம் ஏன் இந்தக் கொலை வெறி!')

நான் அந்த ரிப்போர்ட்டைப் பார்த்த பிறகு, என்னுடைய கனவில் அடிக்கடி வியட்நாம் வீடு சிவாஜி வந்து இரத்தம் கக்கியபடி " நா ம ஒண்ணு நெனச்சா தெய்வம் வேறு நெனைக்குதே .... நாம என்னப்பா பண்ணமுடியும், என்ன்ன்ன.......ப்ப்ப்பா பண்ண முடியும் ....." என்று வசனம் பேசி மார்பைப் பிடித்துக் கொண்டு 'லொக்கு லொக்கு ..' என்று இருமினார்! !



சரி எப்படியோ போகட்டும் (எப்படிப் போனது என்பதை அடுத்த பதிவில் பார்ப்போம்!) - அடுத்த விஷயம் இன் தி அஜெண்டா ஈஸ் - வேக்சினேஷன் சான்றிதழ்.

எனக்கு வேக்சினேஷன் செய்யப்பட்டது, கடலூரில் ரெட்டிச் சத்திரத் தெருவில், குடியிருந்த வீட்டில், நான் தவழ்ந்து முடிந்து, தத்தித் தத்தி நடக்க ஆரம்பித்திருந்த நாட்களில். அப்போ யாரோ வீட்டுக்கு வீடு வந்து, குழந்தைகள் எல்லோரையும் கட்டாயப் படுத்தி அம்மை ஊசி குத்தி சென்றார்கள் என்று அம்மா சொன்ன ஞாபகம். அது மட்டும்

அல்ல, அம்மை ஊசி குத்தப்பட்ட இடம் கையில் (இரண்டு கைகளிலும்) புஜ பல பராக்கிரமன் போல வீங்கிக் கொண்டு, என்னுடைய அம்மா ரயில் ஓடு, மண்டை ஓடு என்று கிடைத்த ஓடுகளை எல்லாம் இழைத்து போட்டு அந்தக் காயங்களை ஆற்றினார்கள் என்பதும் வரலாறு. தினமும் நான் வலி பொறுக்காமல் அழும்போதெல்லாம், அம்மா அம்மை ஊசிக் குத்தியவர்களை அர்ச்சனை செய்துகொண்டே இருப்பார்கள். இப்போ போய் அவர்களைப் பார்த்து எனக்கு வேக்சினேஷன் சான்றிதழ் வேண்டும் என்று கேட்டால் - அவர்கள் என்னை துரத்தித் துரத்தி அடிக்க மாட்டார்களோ!



புரசைவாக்கத்தில், எதிர் போர்ஷனில் குடியிருந்த எவர்சில்வர் கோபால் (பெரம்பூர் பாரக்ஸ் ரோடில்

எவர்சில்வர் பாத்திரங்கள் செய்கின்ற சிறிய தொழிற்சாலை வைத்திருந்தார்) எளிய யோசனை ஒன்று கூறினார். 'கங்காதீஸ்வரர் டாங்க் பக்கத்தில் சென்னை கார்ப்பொரேஷன் ஹெல்த் செண்டர் ஒன்று இருக்கின்றது. அங்கே போய் சுலபமாக சான்றிதழ் பெற்று வரலாம்' என்றார்.

நவம்பர் இருபத்தொன்பதாம் தேதி, திங்கட்கிழமை. காலை இராகு காலத்தில், அந்த அலுவலகம் சென்றேன். அங்கே ஒரு செவிலி உள்ளும் புறமும் வேகமாக நடந்துகொண்டே இருந்தார். எதையோ எடுத்து வருவார். அதை வைத்துவிட்டு வேறு எதையோ எடுத்துச் செல்வார். முகத்தில் ஒரு கடு கடு. என்னைப் பார்த்ததும், "என்ன வேண்டும்?" என்று கேட்டார், கடு கடு குறையாமல்.

நான் சற்றுத் தயக்கமாக, 'வேக்சினேஷன் சர்டிபிகேட்' என்றேன்.

"எப்போ அம்மை குத்திகிட்டே?"

"ரொம்ப நாள் (!) முன்னாடி."

"எங்கே?"

"கையில"

"அத்த கேக்கல ... எந்த ஊருல?"

"க .. க ... கடலூருல ...."

"வெளையாடுறியா? இங்க குத்திகினாதான் நாங்க சர்டிபிகீட்டு அல்லாம் குடுப்போம்."

"சரி. குத்திக்கிறேன்."

" செத்த நேரம் குந்து. ஆபீசரு ஒம்பது மணிக்கு வருவாரு. அவரு சொன்னாதான் குத்துறது, சர்டிபிகேட்டு எல்லாம்...."

குந்தினேன்.

ஆபீசர் வந்தார். நீல பாண்ட் வெள்ளை சட்டை. நர்சிடம், என்னைக் காட்டி ஏதோ கேட்டார். நர்ஸ் ஏதோ ஜாடை காட்டி ரகசியமாக கூறினார். ஆபீசர்

ஜாடை காட்டி என்னை தன் மேஜைக்கருகே அழைத்தார். சென்றேன். பேரு என்ன? எங்கேயிருந்து வாறீங்க? விலாசம்? போன்ற கேள்விகளுக்கு பதில் சுலபமாக சொல்லிவிட்டேன்.

"வேலை பாக்குறீங்களா?"

"இல்லை."

"எதுக்காக சர்டிபிகேட்டு?"

(மாட்டிகிட்டேனோ? - அசோக் லேலண்டில் வேலையில் சேர என்று சொன்னால் - முதல் மாத சம்பளத்தை லஞ்சமாகக் கேட்பாரோ என்றெல்லாம் பயம் வந்துவிட்டது.)

"வேலை தேடி அலைந்து கொண்டிருக்கின்றேன். இண்டர்வியூ செய்பவர்கள் என்னுடைய எல்லா சர்டிபிகேட்டுகளையும் பார்க்க ஆசைப் படுகின்றார்கள். வேக்சினேஷன் சர்டிபிகேட் மட்டும்தான் இல்லை; மீதி எல்லாம் இருக்கு. அதனாலத்தான் ..." என்றேன். அவர் நம்பியதாகத் தெரியவில்லை.

"இங்கே யாரோடு தங்கி இருக்கின்றீர்கள்?"

"அண்ணனோடு."

"அவர் எங்கே வேலை பார்க்கின்றார்?"

"கீழ்ப்பாக் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடல்."

"டாக்டரா?"

"இல்லை"

கொஞ்ச நேரம் என் முகத்தைப் பார்த்தார். நானும் பேசாமல் அவர் முகத்தைப் பார்த்தேன். சரி இந்த ஆளை வேறு விதத்தில் மடக்கலாம் என்று தீர்மானித்து விட்டார் போலிருந்தது.

"இன்றைக்கு வேக்சினேஷன் போட்டுகிட்டா அடுத்த வாரம்தான் சர்டிபிகேட் கிடைக்கும்."

பதறிப் போய்விட்டேன். "இல்லை சார். எனக்கு இன்றைக்கே சர்டிபிகேட் வேண்டும்."

அவர் வெற்றிப் புன்னகையுடன், "அதற்கு பீஸ் கொடுக்கணும்" என்றார்.

"எவ்வளவு?" என்றேன்.

அவர் கண்களைத் தாழ்த்தி ... "ஏதோ நீங்க இஷ்டப்பட்ட அமௌண்ட்..." என்றார்.

அப்போதான் எனக்கு, 'இது சம்திங் விவகாரம்' என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. சென்னை மாநகரத்திலே எனக்கு அறிமுகமான முதல் லஞ்ச லாவண்ய நிகழ்வு இதுதான்.

"ஓ கே" என்றேன்.

அவர் சந்தோஷமாக, "போய் வாக்சினேஷன் குத்திக்குங்க. நான் சர்டிபிகேட் தாறேன்." என்றார்.

என் சட்டைப் பையில் அப்பொழுது இருந்தது ஒரே

ஒரு எட்டணா காசுதான். ஆனாலும் என்ன தைரியம்!

நான் ஆறாம் கிளாஸ் படிக்கும் பொழுது கூட அம்மை ஊசி குத்திக் கொண்டது அப்போ ஞாபகம் வந்தது. கையில் முழங்கை பகுதி மடியும் இடத்தில், இரண்டு இடங்களில் ஓரங்குல இடைவெளியில் அம்மைப் பால் வைப்பார்கள். பிறகு சின்னச் சின்ன ஊசியாக கால் அங்குல வட்டத்தில் அமைந்த ஓர் ஊசியை அம்மைப் பால் புள்ளிகளுக்கு மேலே வைத்து, கொஞ்சம் அமுக்கி ஒரே ஒரு சுற்று சுற்றுவார்கள். லேசாக எறும்பு கடித்தது போல இருக்கும். அவ்வளவுதான்.

கடு கடு நர்சும் இப்படிச் செய்வார் என்று (நம்பி) கையை நீட்டினேன்.

இரண்டு சொட்டு அம்மைப் பால் வைக்கும் வரை எல்லாம் எதிர்பார்த்தபடி நடந்தது.

அப்புறம் ..... ஐயோ கொடுமை! கூரான கோணூசி (போன்ற) ஒன்றை எடுத்துக் கொண்டு, 'சைக்கோ' படத்தில் நடக்கின்ற கொலை போல, 'சதக், சதக்,

சதக்' என்று ஒவ்வொரு இடத்திலும் ஐந்து சதக்குகள் ... குத்திவிட்டார் கடு கடு.





'ஹூம் முன்பாவது எட்டணா கொடுக்கலாம் என்று நினைத்தேன் - பாவிகளா - இந்த சைக்கோ கொலைக்கு நான் ஒன்றும் தரமாட்டேன்' என்று முடிவெடுத்தேன்.

நர்ஸ் சென்று, ஆபீசர் தயாராக வைத்திருந்த சர்டிபிகேட்டைக் கொண்டு வந்து கொடுத்தார்.

அதை நான்காக மடித்து, பாண்ட் பைக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டு, "தாங்க்ஸ்" என்று கூறியபடி, வாயிலை நோக்கி வேகமாக நடந்தேன்.

ஆபீசர், நர்சிடம், 'என்ன சொல்லிவிட்டுப் போறாரு

அந்த ஆளு?' என்று கேட்டது மங்கலாகக் காதில் கேட்டது.

நர்ஸ் ஏதோ சொல்லிவிட்டு, 'துரத்திப் பிடிக்கட்டுமா' என்று கேட்டது போல இருந்தது.

"வேண்டாம் - போகட்டும். விட்டுடுங்க...."

அலேக் அனுபவங்கள் 11 :: மருத்துவப் பரிசோதனை.

டிசம்பர் இரண்டாம் தேதி, ஆண்டு 1971. அவர்கள் கேட்டிருந்தபடி, எல்லா சான்றிதழ்களும் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். புறப்படுவதற்கு முன்பு, என்னுடைய எக்ஸ்-ரே யை, ஒரு புதிய மஞ்சள் நிற காகித கவரில் போட்டு, ரிப்போர்ட் இருந்த கவரை வீட்டிலேயே விட்டு, கிளம்பினேன்.



மருத்துவப் பரிசோதனைக்கு மொத்தம் ஐந்து பேர்

வந்திருந்தனர். கௌதமன், பாஸ்கர், அனந்தராமன், விஸ்வநாதம் (ஆமாம் - தம் தான்) ஷ்யாம் சுந்தர் ரெட்டி - என்று ஞாபகம். ஐந்தாவது நபர் சரியாக ஞாபகம் இல்லை.

எல்லோரையும் மருத்துவ மையம் வாசலில் நிறுத்தி, எக்ஸ் ரே மற்றும் வாக்சினேஷன் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு, பெயர்கள் எழுதிக் கொண்டு, உள்ளே ஒரு அறையில் சென்று அமரச் சொன்னார்கள். அனைவரும் உள்ளாடை மட்டும் அணிந்து, ஒரு வெள்ளை நிற பெஞ்சில் உட்கார வைக்கப்பட்டோம்.

ஒரு மணி நேரம் இப்படி சங்கோஜமான நிலைமை. அவ்வப்போது கையில் / காலில் அடிபட்டு, டிஞ்சர் போட்டுக் கொள்ள வந்த இரண்டொரு தொழிலாளர்கள், அதிசயமாக எங்களைப் பார்த்து, அருகில் இருந்த கம்பவுண்டரிடம், 'யாரு இவங்க எல்லாம்? ஏதேனும் திருடிட்டு செக்யூரிடி அலாரம்ல மாட்டிகிட்டான்களா?' என்று ரகசியமாகக் கேட்டார்கள். கம்பவுண்டர், அவர்களிடம், 'இல்லைபா, சூப்பர்வைசர் ட்ரைனிங் கு புதுசா சேர வந்திருக்கின்ற ஆளுங்க.அவங்களுக்கு மெடிக்கல்

எக்சாமினேஷன்" என்றார்.

ஒவ்வொருவரையும் எடை மெஷினில் நிறுத்தி எடை பார்த்தார்கள். நான் முப்பத்தைந்து கிலோதான் இருந்தேன். எடை பார்த்தவர், "வரும்பொழுது நிறைய வாழைப் பழம் சாப்பிட்டு வந்திருக்கக் கூடாதா? வெயிட் கொஞ்சம் அதிகமாகக் காட்டியிருக்குமே " என்று கேட்டார். 'முன்னரே சொல்லியிருக்கக் கூடாதா' என்று நினைத்துக் கொண்டேன். அதற்குப் பிறகு ஆளுக்கு ஒரு சோதனைக் குழாயைக் கையில் கொடுத்து அந்தப்புரத்திற்கு அனுப்பினார்கள். 'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி' என்று மனதினுள் பாடியபடி சென்றேன்.

பிறகு நடந்தது என்ன என்றால் ...



அட! பதிவுல சென்சார் புகுந்து சில பகுதிகளை கட் செய்துவிட்டார்கள்!

டாக்டரை சந்திக்க ஒவ்வொருவரும் தனித் தனியே

அழைக்கப்பட்டார்கள் (ஆமாம், ஆமாம் உள்ளாடை மட்டும்தான் - இப்பவும்) ஒவ்வொருவருக்கும் பத்து முதல், பதினைந்து நிமிடங்கள் ஆயின. என்னுடைய முறை வந்ததும், அறையினுள் சென்றேன்.

டாக்டர் வயதானவர். உயரமாக, புன்னகை தவழும் முகத்தோடு, வழுக்கைத் தலையுடன், வெள்ளைக் கோட்டு, வெள்ளை பாண்ட் அணிந்து, பருமனான மனிதராக இருந்தார். (பெயர் தெரியும். சொல்ல மாட்டேன்!) என்னை நூறு சதவிகிதம் தேகப் பரிசோதனை செய்த பின், என்னுடைய எக்ஸ்-ரேயை அங்கிருந்த ஒளி பொருந்திய ஸ்டாண்டில் மாட்டினார். எக்ஸ்-ரே யை சில வினாடிகள் உற்றுப் பார்த்தார்.

பக்கத்து அறையில் இருந்த அவருடைய உதவியாளரை, சத்தமாக அழைத்தார். (உதவியாளர் பெயர் ஞாபகம் இல்லை). என்னுடைய சப்த நாடிகளும் ஒடுங்கிப் போயின.

டாக்டர், 'ஹியர் இஸ் எ கேஸ் ஆப் அக்யூட் பிராங்கிடிஸ் விச் மே டெவலப் இண்டு எ சீரியஸ் அண்ட் மாலினன்ட் ஒன் அண்டர் அனட்டென்டட்

சர்க்கம்ஸ்டான்சஸ் ....' என்று சொல்லி, உதவியாளர் உதவியோடு, என்னை ஆம்புலன்சில் ஏற்றி, சென்னைப் பொது மருத்துவமனைக்கு கொண்டுபோய் விட்டு விடுவாரோ என்ற பயம் வந்துவிட்டது, எனக்கு.



உதவியாளர் வந்தார் .....

மீதி அடுத்த பதிவில் பார்ப்போம்.

அலேக் அனுபவங்கள் 12:: அசோக் 'பில்லர் டு போஸ்ட்! '

உதவியாளர் உள்ளே வந்தார்.

முதலில், 'கையது கொண்டு, மெய்யது போர்த்தி' நின்றுகொண்டிருந்த என்னைப் பார்த்தார். பிறகு, டாக்டரைப் பார்த்து, பார்வையாலேயே 'என்ன?' என்று கேட்டார்.

டாக்டர், அவரை ஒரு வினாடி நோக்கிவிட்டு, பிறகு என்னுடைய எக்ஸ் ரேயைப் பார்த்தவாறு, கேட்டார், " டீ வந்துடுச்சா?"



உதவியாளர் சொன்னார், " இன்னும் வரலை"

டாக்டர் : "என்ன பண்றாங்க இந்த கேண்டீன்காரங்க? ரொம்ப அநியாயமாக இருக்கே? மெயின் கேட்டுக்குப் பக்கத்தில், காண்டீனுக்கு கிட்டக்க இருக்கின்ற நமக்கு கடைசியாக டீ கொண்டுகிட்டு வராங்க, மத்த டிபார்ட்மெண்டுக்கெல்லாம் முதலில் கொண்டு போயிடராங்க! வெல்ஃபேர் ஆபிசரை ஃபோனில் கூப்பிடு, நான் பேசறேன்!" என்றார்.

உதவியாளர் அங்கிருந்து அகன்றதும், சூட்டோடு சூடாக என் பக்கம் திரும்பி, "நீ யாரு? ஏன் இங்கே ஜட்டியோட நின்னுகிட்டு இருக்கே?" என்று கேட்டார்!

நான் குழம்பிப் போய் - "சார், நான் இன்ஜினீரிங் அப்ரெண்டிஸ் - இன்டர்வியூ, மெடிக்கல் டெஸ்ட், நீங்க எக்ஸ் ரே - வாக்சிநேஷன் ... " என்று தந்தியடித்தேன்.

டாக்டர் சட்டென்று நினைவுக்கு வந்தவராக, " ஓ அயம் சாரி!" என்று சொல்லியபடி, எக்ஸ்-ரே இருந்த கவரை எடுத்து, தலை கீழாக திருப்பி உதறினார். ஒன்றும் நிகழவில்லை. என்னிடம் "ஊது" என்றார்.

எங்கள் ஊர் பக்கமெல்லாம் பாண்டிச்சேரி / காரைக்கால் பகுதியிலிருந்து பஸ்ஸில் வருபவர்களை, எல்லையில் நின்று கொண்டிருக்கும் போலீசார், முகத்துக்கு அருகே வந்து, மோப்பம் பிடித்தபடி "ஊது" என்பார்கள். மத்யபானம் குடித்திருப்பவர்கள் ஊதினால், 'ம்ம்ம்ம் மாட்டிக் கொள்வார்கள்!'



எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாதே! டாக்டர், என்னை ஏன் இந்த சோதனை செய்கிறார்? என்று சந்தேகத்தோடு, வாயை 'உப்' பென்று வைத்துக் கொண்டு அவர் முகத்தை நோக்கி முன்னேறினேன். அவர் தன் கையில் இருந்த எக்ஸ்-ரே கவரை, என் முகத்துக்கு எதிரே நீட்டினார்.

அப்போதான் என் மரமண்டைக்கு உரைத்தது - அவர் எக்ஸ்-ரே கவரைத்தான் ஊதித் திறக்கச் சொல்லியிருக்கிறார்! (அவர் வாயில் வெற்றிலைப் பாக்கு?)

நாகைக்கு வருகின்ற புயல் எல்லாம் திசை மாறி, ஆந்திரா அல்லது ஒரிசா பக்கம் அடித்து ஓய்வதைப் போல், நான் அவருடைய வாய்ப் பக்கம் அடிக்க இருந்த புயலை, கவரின் வாய்ப் பக்கமாக அடித்து கரையைக் கடக்க வைத்தேன்.



கவரின் உள்ளே ஒன்றும் இல்லை என்பது

உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெரிந்தது.

"எக்ஸ் ரேயோடு ரிப்போர்ட் ஒன்றும் தரவில்லையா? எங்கே ரிப்போர்ட்?" என்று கேட்டார், டாக்டர்.

"சார்? ரிப்போர்ட் கொடுத்தார்கள். ஆனால், மெடிக்கல் டெஸ்டுக்கு அழைத்திருந்த கடிதத்தில், மார்புப் பகுதியின் எக்ஸ்-ரே என்று மட்டும் இருந்ததால், ரிப்போர்ட்டை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன்!"

"ரிப்போர்ட்டில் என்ன எழுதியிருந்தது?" என்று கேட்டார் அந்த விடாக்கண்டர்.

"எவ்ரிதிங் நார்மல். நைன்டி எய்ட் பாயிண்ட் சிக்ஸ் டிகிரி ஃபாரன்ஹீட்" (கொடாக்கண்டன்)

டாக்டர் சிரித்துக் கொண்டே "நீ தஞ்சாவூர் ஜில்லாவா? ரொம்பக் குறும்பா பேசுறியே .... " என்றார். தொடர்ந்து, "நானும் தஞ்சாவூர் ஜில்லாதான்.." என்றார்.

மேலும் சிரித்துக் கொண்டே, மெடிக்கல் ரிப்போர்ட்டில் ஏதோ எழுதினார். பிறகு என்னிடம், " நீ ட்ரைனிங் சென்டருக்குப் போ. எல்லோருடைய ரிப்போர்ட்டையும் அங்கே ஆள் மூலமாக அனுப்பிவிடுவோம்." என்றார். "போகும்போது ஞாபகமா பாண்ட், சட்டை எல்லாத்தையும் போட்டுகிட்டுப் போ." (ரொம்ப முக்கியம்! அவனவன் உடுத்த மறந்து போய்தான் வந்து இவரு முன்னால காபரே ஆடுகின்றான் என்று நினைத்துவிட்டார் போலிருக்கு!)

(கீ சா மாமியின் மருத்துவப் பரிசோதகர் போல இவரும் நல்லபடியாக ரிப்போர்ட் எழுதியிருப்பார் என்று நினைத்த என்னை, பயிற்சி மைய பொறுப்பாளர் அழைத்துக் கூறியது அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.)



"உன்னுடைய மெடிக்கல் ரிப்போர்ட்டில், 'அண்டர் வெயிட்' என்று எழுதி இருக்கிறார், டாக்டர். என்ன செய்யப் போகிறாய்?"

நான் ஏதோ கூறுவதற்கு முற்படும் முன்பாக அவரே, பயிற்சி மைய அலுவலக உதவியாளரை (பாட்ரிக் ஆண்டனி) அழைத்து, என்னை அறைக்கு வெளியே அனுப்பிவிட்டு, அவரிடம் ஏதோ சொல்லி அனுப்பினார். பாட்ரிக் கையில் என்னுடைய விவரங்கள் கோர்க்கப்பட்ட கோப்புடன் வெளியே வந்தார்.

பாட்ரிக் ஆண்டனி - ஆங்கிலம் பேசினால், நாள் முழுவதும் கேட்கலாம். ஏன் என்றால், நமக்கு ஒன்றுமே புரியாது! அவர் அறைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த என்னிடம், "மிஸ்டர் கௌதமன், வி ஆர் கோயிங் டு *&^%$^& #@!(*&*) .... ப்ளீஸ் பாலோ மி ... ^&$##(^(&^$#$% ... " அதாவது எனக்குப் புரிந்த வார்த்தைகளை மட்டும் புரிகின்ற எழுத்துகளாக எழுதியிருக்கின்றேன்.

பூசாரியைத் தொடர்ந்து செல்கின்ற ஆடு போல அவரைப் பின் தொடர்ந்து சென்றேன்.



அவர் சென்றது - பெர்சனல் டிப்பார்ட்மெண்ட் என்றும், அங்கு அவர் சந்தித்தவர்கள் முக்கிய பதவி வகிப்பவர்கள் என்றும், அதில் சிலர் என் பெயரைப் பரிந்துரைத்தவர்கள் என்றும், பிறகு தெரிந்துகொண்டேன். ஒவ்வொரு அறை வாயிலிலும் (கௌதமன், யூ ப்ளீஸ் ஸ்டே அவுட்) சுமார் அரை மணி நேரம் வாயில் காப்போனாக நின்று கொண்டிருந்தேன்.

கடைசி வாயிலில் நான் நின்று கொண்டிருந்த பொழுது, மருத்துவப் பரிசோதனை அறையில் எங்களைப் பார்த்து, எதையாவது திருடிவிட்டு மாட்டிக் கொண்டவர்களோ என்று சந்தேகப்பட்ட அதே தோழர், அந்தப் பக்கமாக வந்தவர், மீண்டும் அங்கே என்னைப் பார்த்தவுடன், தன சந்தேகம் உறுதியான தெளிவோடு என்னைப் பார்த்தவாறு சென்றார்!

பாட்ரிக் நான்காவது நபரை சந்தித்து வெளியே வந்து என்னிடம், "கம் ஆன் கௌதமன், வி வில் கோ பாக் டு ட்ரைனிங் செண்டர் ..." என்றார். பயிற்சி நிலைய

அதிகாரியின் அறைக்குள் நுழைவதற்கு முன்பாக, 'கௌதமன் யூ ப்ளீஸ் .... ' என்று அவர் ஆரம்பிக்கும் முன்பாக நான், "ஐ வில் ஸ்டே அவுட்" என்றேன். அவர் புன்னகையுடன் "தாங்க் யூ " என்று சொல்லி உள்ளே சென்றார்.

ஐந்து நிமிடங்களில் பாட்ரிக் வெளியே வந்து, "கௌதமன் ப்ளீஸ் கம் இன்.." என்றார்.

உள்ளே சென்றவுடன், பயிற்சி நிலைய அதிகாரி, "வாட் மேன்? யூ ஆர் வெரி மச் அண்டர் வெயிட்? .." என்றார்.

"ஐ வில் இம்ப்ரூவ் " என்றேன் மிகவும் தன்னம்பிக்கையுடன்.

"வி வில் நாட் கன்ஃபர்ம் யூ இப் யூ டோன்ட் புட் அப் வெயிட் இன் த்ரீ இயர்ஸ் .." என்றார்.

"ஓ கே " என்றேன்.

"வென் வில் யூ ஜாயின்?"

மிகவும் சந்தோஷமாக உணர்ந்த தருணம் ..... !!

(அந்த சந்தோஷத்தை, அடுத்த அலேக் பதிவு போடுகின்ற வரையிலும் அனுபவிக்கின்றேனே!)

அலேக் அனுபவங்கள் 13:: அ லே க் ஆயுத பூஜை!

வாசக நண்பர்கள், நான் இங்கு பதிவது, நாற்பது வருடங்களுக்கு முந்தைய அனுபவங்களை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். காலப் போக்கில் எவ்வளவோ மாற்றங்கள். இக்காலத்தில், அசோக் லேலண்டில் எவ்வளவோ மாற்றங்கள். நான் அன்றைய சம்பவங்களைப் பகிர்ந்து கொள்வதைப் படிப்பவர்கள், இன்றும் அதே நிலைமை அங்கு இருக்கின்றது என்று தப்புக் கணக்குப் போடவேண்டாம் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

*** ***




அசோக் லேலண்டில் ஆயுத பூஜை என்பது மிகவும் கோலாகலமாக இருக்கும். தொழிற்சாலையின் ஒவ்வொரு பகுதியினரும், தத்தம் பகுதியை சார்ந்த இயந்திரங்களை கழுவி, சுத்தம் செய்து, அலங்கார வண்ணத்தாள்களால் அலங்கரித்து, வைத்திருப்பார்கள். அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், அதிகாரிகளும் ஆயுத பூஜைக்காக பணம் அவரவர்கள் பங்காக செலுத்துவார்கள். இயந்திரப் பகுதி பெரிய பகுதி. இயந்திரப் பகுதி ஒன்று, இ ப இரண்டு என்று அந்த நாட்களிலேயே நான்கு பகுதிகள் உண்டு. ஒவ்வொரு இயந்திரப் பகுதியிலும் பல லைன்கள் (Bay 1,2,3 ...)

உண்டு. ஒவ்வொரு வரிசைக்கும் ஒரு பூஜை இடம் உண்டு! ஆக, இயந்திரப்பகுதி மட்டும் குறைந்தது நாற்பது பூஜைகள்.

இது தவிர, அசெம்பிளி பகுதி, ஸ்டோர்ஸ் பகுதி, இன்ஸ்பெக்ஷன், இஞ்சினீரிங், ஸ்பேர் பார்ட்ஸ், அக்கவுண்ட்ஸ், சேல்ஸ், டிரான்ஸ்போர்ட், மெயிண்டனன்ஸ், டூல் ரூம், பயிற்சி நிலையம், மருத்துவ நிலையம், தீயணைப்பு நிலையம், செக்யூரிட்டி, சிஸ்டம்ஸ், பிளானிங், பர்ச்சேஸ் என்று நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகள். மொத்தத்தில், எண்ணூரில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆயுத பூஜை கொண்டாடப்படும்.



ஒவ்வொரு பூஜை பாயிண்டிலும், விநாயகர், லக்ஷ்மி, சரஸ்வதி திருவுருவப் படங்கள், ஏசு கிறிஸ்து படம், மேரிமாதா படம் எல்லாம் இருக்கும். வெள்ளிக் கிழமைகளிலும், ஆயுத பூஜை சமயத்திலும், இந்த எல்லாப் படங்களுக்கும் பூ சூட்டப்பட்டு, மாலைகள், ஊதுபத்தி சகிதம் தெய்வீகமாக இருக்கும்.

ஆயுத பூஜை சமயத்தில், நிர்வாகம் எல்லோருக்கும் ஒரு ஸ்வீட் கூப்பன் வழங்கும். அந்த ஸ்வீட் கூப்பனை, ஆயுத பூஜையன்று பயிற்சி நிலைய வளாகத்தில் கொடுத்து, ஒரு பெரிய மில்க் ஸ்வீட்

பெட்டியை பெற்று வருவோம். நான் சேர்ந்த காலத்தில் வழங்கப்பட்ட இனிப்புப் பெட்டி ஒரு கிலோ ஆரிய பவன் ஸ்வீட் பெட்டி என்று ஞாபகம். அதில் இருக்கின்ற பால் இனிப்புகள் எல்லாமே மிகவும் சுவையானதாக இருக்கும். வீட்டில் அதை ஒருவார காலம் வைத்து சாப்பிட்டு மகிழ்ந்தது உண்டு.



ஆயுத பூஜை (நவராத்திரியின் ஒன்பதாம் நாள்) ஒரு வருடத்தில் எங்களுக்கு அளிக்கப்படுகின்ற பன்னிரண்டு பண்டிகை விடுமுறைகளில் ஒன்று. அதனால், அசோக் லேலண்டில், ஆயுத பூஜை எட்டாவது நாளே கொண்டாடப்படும். ஆயுத பூஜை

வருவது இன்று போல ஒரு செவ்வாய்க்கிழமையில் என்றால், திங்கட்கிழமை எண்ணூர் தொழிற்சாலை வாராந்திர விடுமுறை நாள் என்பதால், ஞாயிற்றுக் கிழமையே கொண்டாடிவிடுவோம்!



வேலை நேரம் காலை ஏழரை மணி முதல், மாலை நான்கு மணி வரை. ஆயுத பூஜையன்று, உற்பத்தி, மாலை இரண்டு மணியுடன் நிறுத்தப்படும். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பூஜா கமிட்டி இருக்கும். அந்த பூஜா கமிட்டி (ஒருவர் அல்லது இருவர் - அந்தப் பகுதி தொழிலாளர்) ஆயுத பூஜையன்று காலையோ அல்லது மதியமோ பெர்மிசன் வாங்கிக்கொண்டு, பாரிஸ் (ஹி ஹி - நம்ம பாரிமுனைதானுங்க!) போய்விடுவார்கள்.

பூஜைக்கு வேண்டிய வாழைக் கன்று, அவல், பொரிகடலை, பொரி, ஆப்பிள், ஸ்வீட் பாக்ஸ்(பூஜையில் வைக்க ஒன்று, பணம் கொடுத்த அங்கத்தினர்களுக்கு ஆளுக்கு ஒன்று), இன்னும் சர்ப்ரைஸ் கிப்ட், அலங்காரத் தாள்கள், ஊதுபத்தி, சந்தனம், குங்குமம், பூசணிக்காய், எலுமிச்சம்பழம் இத்யாதி இத்யாதிகள் வாங்கிக் கொண்டு, இரண்டு மணி சுமாருக்கு ஆட்டோவில் வந்து சேர்வார்கள். அதுமட்டும் அல்ல, ஆயுத பூஜை வரவு செலவு கணக்கும் - மொத்த கலெக்ஷன் எவ்வளவு, என்னென்ன செலவுகள் (ஆட்டோ வாடகை உட்பட) என்ற வரவு செலவு கணக்கும் அறிவிப்புப் பலகையில், பூஜை கமிட்டி ஆட்கள், கையொப்பமிட்டு, ஒட்டிவிடுவார்கள்.









இரண்டு மணியிலிருந்து மூன்று மணிவரையிலும், குப்பையகற்றல், சுத்தம் செய்தல், குங்குமம் வைத்தல், அலங்கார தாள்கள் ஒட்டுதல் என்று முன்னேற்பாடுகள் நடக்கும். மூன்று மணியிலிருந்து, பத்து நிமிடங்கள் பூஜை. பிறகு பிரசாதம் விநியோகம். பிறகு பாடத் தெரிந்தவர்கள் சில

பாடல்கள் பாடுவார்கள். நான் பணியாற்றிய எஞ்சினீரிங் பகுதியில் அதிக வருடங்கள் பூஜையும் செய்து, பாட்டும் பாடி அசத்தியவர், திரு டி எஸ் ஸ்ரீராம் என்பவர். (இசைமழலை ராம்ஜியின் அண்ணனின் சம்பந்தி). நானும் ஒரே ஒரு பூஜை தினத்தன்று பாடினேன். அதற்குப் பிறகு என்னை யாரும் பாடச் சொல்லவில்லை!



அந்தக் காலத்தில், டூல் ரூம் பகுதி ஆயுத பூஜை மிகவும் பிரசித்தம். ஒவ்வொரு ஆண்டும் சிறப்புப் பரிசுப் பொருளாக, பூஜையில் வைப்பதற்காக அவர்கள், பித்தளைக் குடம், எவர்சில்வர் குடம், அண்டா - குண்டா என்று பிரம்மாண்டமான

பொருட்களை வாங்கி வந்து அசத்துவார்கள். பூஜை செய்வதற்கு ஸ்பெஷல் கேட்பாஸ் போட்டு, ஒரு முறை ஒரு புரோகிதரை அழைத்து வந்தார்கள்!

ஒரு சமயம், எங்கள் எஞ்சினீரிங் பகுதி தொழிலாளர்கள் நடத்திய ஆயுத பூஜை நிதி சிறப்புப் பரிசு, நாங்கள் ஒவ்வொருவரும் கொடுத்த இருநூறு ரூபாயில், ஒவ்வொருவருக்கும் ஐந்து கிராம் தங்கக் காசு.



தொழிற்சாலையின் நிர்வாக அதிகாரி பங்கெடுத்துக் கொள்ளும் பூஜை, மெடிக்கல் செண்டருக்கு முன்பாக ஒரு வண்டியை நிறுத்தி, அதை அலங்கரித்து, அதற்குச் செய்யப்படும் பூஜை. பிறகு அவர் பயிற்சி மையம் நடத்தும் பூஜையிலும், எங்கள் எஞ்சினீரிங்

பகுதி ப்ரோடோடைப் வொர்க் ஷாப் பூஜையிலும் கலந்துகொள்வார். எங்கள் ப்ரோடோடைப் வொர்க் ஷாப்பில் ஒவ்வொரு வருடமும், அந்தந்த வருடத்தில் நாங்கள் செய்த புதிய வண்டி ஒன்று (அல்லது பல) நிச்சயம் இடம் பெறும். பூஜை முடிந்த பிறகு, அந்த வண்டியின் சக்கரங்களுக்குக் கீழே எலுமிச்சம் பழங்களை வைத்து, வண்டியை அவைகளின் மீது ஏற்றி, ஒரு ரவுண்ட் ஓட்டி வந்து திரும்ப நிறுத்துவார்கள். இந்த முதல் ஓட்டத்தின் போது, அந்த வண்டியை உருவாக்கியதில் அதிக அளவு பங்கேற்றுக் கொண்ட தொழிலாளரை அந்த வண்டியை ஓட்ட செய்ததும் உண்டு.

மொத்தத்தில், அசோக் லேலண்டில், ஆயுத பூஜை என்பது அந்த நாட்களில் மிகவும் சுவாரஸ்யமான ஒன்று. அந்தந்த வருடத்து பூஜைக் கொண்டாட்டங்கள், அதற்கு அடுத்த வருட பூஜை தினம் வரையில் நினைவில் நிற்கும்.

அலேக் அனுபவங்கள் 14 :: தீபாவளி நாட்கள்.

முன் காலத்தில், ஆனந்தவிகடன் தீபாவளி மலர் வந்தவுடன், நானும் என்னுடைய அண்ணனும் முதலில் படிப்பது, அதில் சிறுவர் கதைப் பகுதியில் வருகின்ற 'காட்டிலே தீபாவளி' அல்லது 'கரடியார் வெடித்த கேப்பு' அல்லது 'கபீஷ் கொளுத்திய கம்பி மத்தாப்பூ' போன்ற கதைகளைத்தான்! (எழுதியவர் வாண்டு மாமா? ராஜி?) இங்கே அசோக் லேலண்டு தீபாவளி! - கதையல்ல நிஜம்!



ஆயுத பூஜை போல - தீபாவளி நாட்களும் அசோக் லேலண்டில் இனிமையானவை, இனிப்பானவை. எழுபதுகளில், கம்பெனி சார்பில் ஒரு ஸ்வீட் பாக்ஸ் இலவசமாக கிடைக்கும். மேலும் குறைக்கப் பட்ட விலையில் ஒரு ஸ்வீட் பாக்ஸ் - வேண்டும் என்று எழுதித் தருபவர்களுக்கு, சம்பளத்தில் இருபது ரூபாய் பிடித்தம் செய்து கொண்டு, தீபாவளிக்கு ஓரிரு நாட்கள் முன்னதாக ஸ்வீட் பாக்ஸ் கொடுப்பார்கள்.





எனது ஆபீசில், அனந்தநாராயணன் என்று பெயர் கொண்ட (காது கேளாதவர், பேச இயலாதவர்) நண்பர் ஒருவர் எங்களுடன் பணிபுரிந்து வந்தார். (இவருக்காகவே நான், காது கேளாதோரின் சைகை மொழியை, வேறு ஒரு நண்பரிடமிருந்து கற்றுக் கொண்டேன்) இவர், தனக்கு வருகின்ற குறைந்த விலை ஸ்வீட் பாக்ஸ் கூப்பனை / விண்ணப்பத்தை எங்கள் அலுவலகத்தில் இருந்த தலைமை வரைவாளர் ஒருவருக்காக விட்டுக் கொடுப்பது உண்டு. தலைமை வரைவாளர், அதற்குரிய தொகையை சம்பளம் வந்தவுடன் அனந்தநாராயணனுக்குக் கொடுத்துவிடுவார். குறைக்கப்பட்ட விலையில் கிடைக்கின்ற தரமான

ஸ்வீட் என்பதால், அதற்கு அவ்வளவு டிமாண்ட்!



தீபாவளி மாதத்தில், பெஸ்டிவல் அட்வான்ஸ் தொகையாக ஒரு மாத சம்பளம் வழங்கப்பட்டு, பிறகு பத்து மாதங்களில் அந்தத் தொகை பிடித்தம் செய்யப்படும்.

பெஸ்டிவல் அட்வான்ஸ் கையில் கிடைத்தவுடனேயே பெரும்பாலான டிபார்ட்மெண்ட்களில் இருக்கின்ற நண்பர்கள் செய்யும் ஒரு வேலை (நாங்களும் செய்ததுதான்!) என்ன தெரியுமா? ஆளுக்கு நூறு ரூபாய் போட்டு, தீபாவளி வெடி நிதி (Diwali Crackers Fund) ஒன்றை ஆரம்பிப்பார்கள். இருபது நபர்கள் ஒரு நிதி அமைப்பில் இருந்தார்கள் என்றால், இரண்டாயிரம் ரூபாய் மொத்த வசூல்.இந்த நிதி அமைப்பின்

உறுப்பினர்களுக்கு, இந்தத் தொகையிலிருந்து அவசரத் தேவைகளுக்கு கடன் அளிக்கப்படும்.



நூறு ரூபாய் கடன் பெறுபவர்கள், மாதம் ஒன்றுக்கு, ஐந்து ரூபாய் வட்டி செலுத்த வேண்டும். (ஆரம்பத்தில் மாதத்திற்கு மூன்று ரூபாய் வட்டி என்று வைத்திருந்தோம். பிறகு நான்கு ரூபாய் ஆகி, பல வருடங்களுக்கு ஐந்து ரூபாய் வட்டியாகவே இருந்தது என்று ஞாபகம்) நூறு ரூபாய் கடன் கேட்பவர்களுக்கு, தொண்ணூற்றைந்து ரூபாய்தான் கடன் கொடுப்போம். அவர் மறுநாள் தொடங்கி, ஒரு மாதத்திற்குள் எப்பொழுது கடன் திருப்பிக் கொடுத்தாலும் நூறு ரூபாயாகக் கொடுக்கவேண்டும்.

சொன்னால் நம்பமாட்டீர்கள் - இருபது

உறுப்பினர்களில், மூன்று அல்லது நான்கு நபர்கள் மொத்தத் தொகையையும் கடனாக வாங்கிவிடுவார்கள். மாதா மாதம் வட்டித் தொகை செலுத்திக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் குறைந்தது நான்கு தீபாவளி வெடி நிதிக் குழுவாவது இருக்கும்.

ஒரு முறை, நான், என்னுடன் இரயிலில் வந்த குரோம்பேட்டை நண்பர் ஒருவரிடம் கேட்டேன், 'நூறு ரூபாய்க்கு, ஒரு மாதத்திற்கு ஐந்து ரூபாய் வட்டி என்பது அதிகம் இல்லையா?' என்று. அவர் சொன்னார், "நாளை திங்கட்கிழமை, நமக்கு லீவுதானே, காலை நாலரை மணி சுமாருக்கு, ஸ்டேஷன் ஓவர் பிரிட்ஜ் மேலே வந்து கொஞ்சம் நின்று பாருங்கள்."

சென்று பார்த்தேன். அவரும், அவருடைய நண்பர் ஒருவரும், அங்கு நின்றிருந்தனர். அவருடைய நண்பரிடமிருந்து, பத்துப் பதினைந்து பேர் பணம் வாங்கிச் சென்றனர். என்ன விஷயம் என்று பிறகு அவர்கள் சொன்னார்கள். வந்து பணம் வாங்கிச் சென்றவர்கள் எல்லோரும் நடைபாதை காய்கறி வியாபாரிகள். ஒவ்வொருவரும் தொண்ணூற்றைந்து ரூபாய்கள் பெற்றுக் கொண்டு, ரயிலிலோ பஸ்சிலோ கொத்தவால் சாவடி (அப்போ கோயம்பேடு மார்க்கட்

கிடையாது) சென்று காய்கறி வாங்கி வருபவர்கள். காய்கறி வாங்கிக் கொண்டு வந்து,கடை வைத்து, விற்பனை செய்து, வீடு திரும்பும்போது, தொண்ணூற்றைந்து ரூபாய் கொடுத்தவருக்கு நூறு ரூபாய் கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தை தங்கள் குடும்பச் செலவுக்காகக் கொண்டு செல்வார்கள்.

காலைக் கடன் கொடுத்து, மாலை வரவு வைக்கின்ற இவர்கள் கையில் இரண்டாயிரம் ரூபாய் இருந்தால், ஒரு வருடத்தில் அது குறைந்த பட்சம் முப்பத்தாறாயிரத்து நானூறு ரூபாய் ஆகிவிடுமே!



அடுத்த தீபாவளி முன்பணம் பெறும் காலம் வரும்பொழுது, ஒவ்வொரு உறுப்பினர் கணக்கிலும், குறைந்தபட்சம் நூற்று அறுபது ரூபாய் இருக்கும். சிவகாசியிலிருந்து ஒரு லாரி லோடு வெடி வாணம் வாங்குகின்ற ஏஜெண்ட் - சென்னை ஒன்று பகுதியைச் சேர்ந்தவர் (பலர் இருப்பார்கள்), கம்பெனிகளில் இந்த மாதிரி தீபாவளி நிதி நடத்துபவர்களிடம், வெடிகள் வாணங்கள் பட்டியல் கொடுத்து, பட்டியல் நிரப்புகின்ற உறுப்பினர்களின் தேவைகளை ஒன்று சேர்த்து, வரவழைத்துக் கொடுத்துவிடுவார். ஒவ்வொரு நிதிக் குழுவும், உறுப்பினர்களில் யாராவது ஒருவர் வீட்டில் வெடிகளைக் கொண்டு வந்து, பட்டியல் பார்த்து,

பிரித்து, கட்டி, மேலே உறுப்பினர் பெயரை எழுதி வைத்துவிடுவார்கள். அந்தந்த குழு உறுப்பினர்கள், அவரவர்களின் வெடி பாக்கிங்கை அங்கிருந்து பெற்றுச் செல்வார்கள்.





தீபாவளி முடிந்த மறுநாள், அலுவலகத்திற்கு வருகின்ற, (தீபாவளி கொண்டாடிய) எல்லோருமே அவரவர்களின் புது உடையணிந்து வருவார்கள். குடும்பஸ்தர்கள், தங்கள் இல்லங்களில் செய்த இனிப்பு, கார வகைகளை தாராளமாக எடுத்து வந்து, தங்கள் பகுதிகளில் பணிபுரிகின்ற தீபாவளி கொண்டாடாத மற்ற மதத்துத் தோழர்களுக்கும், குடும்பம் இல்லாத பேச்சிலர் மக்களுக்கும் கொடுப்பது உண்டு. ("வீட்டுல செஞ்ச பட்சணம்! - சாப்பிடுங்க!")

அலேக் அனுபவங்கள் 15:: அஞ்சு பீரியட்!

பள்ளிக்கூட நாட்களில், சில உள்ளூர் விசேஷங்களுக்கும், கார்த்திகை தீபம் போன்ற மாலை நேர விழாக்களுக்கும், அஞ்சு பீரியட் பள்ளிக்கூட வகுப்புகள் நடக்கும். பிறகு எல்லோரும் 'வீட்டுக்கு பெல்' அடித்தவுடன், வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாக வீட்டை நோக்கி சந்தோஷமாக ஓடுவோம்.

அசோக் லேலண்டில் வருடம் இரண்டு நாட்கள், நாங்க அஞ்சு பீரியட் என்று அழைக்கின்ற நாட்கள் வரும்.

ஒன்று கார்த்திகை தீபம். இரண்டாவது, கிறிஸ்துமசுக்கு முதல் நாள். இவைகள் வாராந்திர விடுமுறை நாட்களில் இல்லாமல் இருந்தால், அஞ்சு பீரியட் வேலை, அப்புறம் வீட்டுக்கு! இது தவிர, சட்டசபை தேர்தல் நடக்கின்ற நாட்களில் கூட இந்த

வகையில் அஞ்சு பீரியட் கணக்கு உண்டு. ஆனால் என்ன, பெரும்பாலும் நாம் ஓட்டுப் போட சென்று பார்க்கையில், நம்முடைய வோட்டை யாராவது போட்டிருப்பார்கள் (என்று எண்ணி, வோட்டுப் போட செல்லாமலும் இருந்துவிடுவோம்!)



காலை ஏழரை மணி முதல், மதியம் ஒன்றரை மணி வரை வேலை. கம்பெனி பேருந்துகள், மதியம் ஒன்று ஐம்பதுக்கு கிளம்பி, பேருந்து பயண வசதி பெற்றவர்களை, ஏற்றிச் செல்லும்.


இந்த அஞ்சு பீரியட் நாட்களில், காண்டீனில் மதிய

உணவாக சர்க்கரைப் பொங்கல் செய்வார்கள். தனியாக மதிய உணவு நேரம் என்று அந்த நாட்களில் கிடையாது. தாமரை இலையில் கட்டப்பட்ட சர்க்கரைப் பொங்கல், சுடச்சுட பதினொன்றரை மணிக்கு, தொழிற்சாலையின் எல்லா பகுதிகளுக்கும் வந்துவிடும். ஆரம்பத்தில், சில நாட்கள் ஒரு பாக்கெட் பதினாறு பைசா கூப்பன் கொடுத்து வாங்கினோம். போகப் போக, அது இலவசமாகவே கொடுக்கப்பட்டது. ஒருவருக்கு ஒரு பாக்கெட். என்ற வகையில் கியூவில் நின்று வாங்கிக் கொள்வோம். முந்திரியும், திராட்சையும் போட்ட, சர்க்கரைப் பொங்கல். எல்லோருமே விரும்பி சாப்பிடுவோம்.




எண்பதுகளில் ஒரு கார்த்திகை தீப தினத்தன்று, வீட்டுக்கு மாலை வந்துவிடுவேன், பிறகு அகல் விளக்குகள் ஏற்றலாம் என்று கூறி, அலுவலகம் சென்றேன். நான் பணியாற்றிய பகுதியில், என் குழுவிற்கு அப்பொழுது தலைவராக இருந்த ஒருவர், அந்த நாளை, என்னுடைய பொறுமையை சோதித்துப் பார்க்கின்ற நாளாக தேர்ந்தெடுத்துவிட்டார்.

தனியார் நிறுவனங்களில், சாதாரணமாக நிகழ்கின்ற ஒரு விஷயம்தான், இது. ஆண்டு முழுவதும் நாம் செய்யும் பணிகளை அதிகம் கவனியாமல், நம்முடைய ஆண்டு சம்பள உயர்விற்காக படிவங்கள் பெர்சனல் டிப்பார்ட்மெண்ட் அனுப்பும் பொழுது மட்டும் விழித்துக் கொள்வார்கள். இவர், என்னுடைய பேப்பர்கள் வந்த ஆறு மாதங்கள், அதை அனுப்பாமல் வைத்திருந்து, பிறகு, என் பொறுமை குணம் எவ்வளவு என்று தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பமாக இந்த நாளை தேர்ந்தெடுத்தது, என்னுடைய துரதிருஷ்டம் என்றுதான் நினைக்கின்றேன்.



லாரியின் முன் பகுதியில் இருக்கின்ற காபின் பகுதியில், புதிய கியர் பாக்ஸ் பொருத்தினால், அதை இயக்குகின்ற லீவர் பானட்டு கவர் மீது அமைக்க ஒரு பெட்டி. அதை பானட்டு கவர் மீது அமைப்பதற்கு, என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும், என்கிற விவரங்களை ஒரு படமாக வரைய சொன்னார். அப்பொழுது மணி மதியம் ஒன்று பதினைந்து. பதினைந்து நிமிடங்களில் வரைந்து கொண்டு போய் கொடுத்தேன். அவர் ஃபோனில் பேசிக் கொண்டிருந்தார். நான் அவருடைய அறையில் நின்று கொண்டிருந்தேன். நின்று கொண்டே இருந்தேன். கம்பெனி பேருந்துகள் எல்லாம் கம்பெனியிலிருந்து அலுவலர்களை ஏற்றிச்

சென்றன - அவருடைய அறையிலிருந்து எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது. அவரும் அதை உணர்ந்தவராக, கடைசி பேருந்தும் சென்ற பிறகு, போன் பேச்சை முடித்து, நான் வரைந்த படத்தை பார்த்தார். இரண்டு மூன்று மாற்றங்கள் சொன்னார். செய்தேன். மணி இரண்டரை.



மீண்டும் பார்த்து, சில மாற்றங்கள் சொன்னார். செய்தேன். மணி நான்கு. இவ்வாறு மாற்றங்கள் சொல்லி, செய்து, சொல்லி செய்து, ஆறு மணி வரையிலும் இழுத்தடித்தார்.

அதற்குப் பின் நான் வரைந்த படத்திற்கு நகல்கள் தயார் செய்யச் சொன்னார். பிறகு அவருடைய உதவியாளரை அழைத்து, ஒரு கடிதம் டிக்டேட் செய்து, அதிலும் மாற்றங்கள் பல சொல்லி, செய்து, கடிதத்தையும், படத்தையும் கொண்டுபோய் பர்ச்சேஸ் டிப்பார்ட்மெண்டில் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு கிளம்பும் சமயத்தில், அந்த அதிகாரி, 'என்னுடன் வருகிறாயா? பீச் ஸ்டேஷனில் டிராப் செய்கிறேன்?' என்று கேட்டார். எனக்கு இருந்த வெறுப்பில், நான் சிறிய புன்னகை ஒன்றை உதிர்த்து விட்டு, 'இல்லை சார். நான் டிரெயினில் போய்க் கொள்கிறேன்' என்று கூறி விட்டுக் கிளம்பினேன். கத்திவாக்கம் ஸ்டேஷனில் ரயில் ஏறி, சென்டிரல் வரை பிரச்னை இல்லாமல் போய் சேர்ந்தேன்.

ஆனால், அன்றைக்கு சோதனையாக, பார்க் ஸ்டேஷனிலிருந்து கிளம்பிய மின் தொடர், வழியில் ஏதோ பிரச்னையில் நின்று போய், குரோம்பேட்டை சென்றடைய இரவு பதினொரு மணி ஆகிவிட்டது. வீட்டில், மனைவியும், அப்பாவும் மிகவும் கவலையுடன் காத்திருந்தனர். அப்பொழுது வீட்டில் தொலை பேசி, அலை பேசி என்று எந்த தகவல் சாதனமும் கிடையாது. அன்றைக்குப் பார்த்து சென்னை தொலைக்காட்சியில் ஏதோ சோக படம் வேறு போட்டிருந்தார்கள் போலிருக்கு. (தூரத்து இடி முழக்கம்?). மனைவி மிகவும் சோகமாக இருந்தார். என்னைப் பார்த்த பின்தான் அவர்களுக்கு மகிழ்ச்சி திரும்பியது.

அவ்வளவு கஷ்டப்பட்டு, நான் வரைந்த படத்தை, ஒரு வாரம் கழித்துதான், சப்ளையரிடம் பர்ச்சேஸ் டிபார்ட்மெண்டிலிருந்து கொடுத்தார்கள் என்று பிறகு ஒரு நண்பரிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

அலேக் அனுபவங்கள்16:: ஆண்டொன்று போனால் .... !

அசோக் லேலண்டில் நவம்பர் மாதம் வந்ததுமே தொழிலகத்தில் குறிப்பாக எங்கள் இன்ஜினியரிங் பகுதியில் ஓர் எதிர்பார்ப்பு கலந்த, ஆர்வத்துடன் கூடிய, சிறிய பரபரப்பு பற்றிக் கொள்ளும்.

நிர்வாகத்தினர், அடுத்த ஆண்டுக்கான பன்னிரண்டு நாட்கள் பண்டிகை விடுமுறை நாட்கள் என்னென்ன என்று ஒரு வரைவு சுற்றறிக்கை அனுப்புவார்கள். எல்லா பகுதி அறிவிப்புப் பலகையிலும் அந்த அறிவிப்புத் தாள் ஒட்டப்படும்.

தொண்ணூற்றொன்பது சதவிகிதம் அதுவே இறுதி அறிவிப்பாகவும் உறுதி செய்யப்படும். எனக்குத் தெரிந்து, ஒரே ஒரு வருடம் மட்டும் அந்த விடுமுறை நாள் பட்டியலில் இறுதி வடிவம் வரும் பொழுது, ஒரு சிறிய மாற்றம் செய்யப்பட்டது. ஆந்திர மாநில எல்லைக்கருகே அமைந்திருக்கும் தொழிலகம் என்பதால், எண்ணூரில் (என்னைப் போன்ற) மனவாடுகள் அதிகம். அந்த குறிப்பிட்ட வருடத்தில்

தமிழ் வருடப் பிறப்பு தினம் ஒரு திங்கட்கிழமையில் (எண்ணூர் அசோக் லேலண்டுக்கு வாராந்திர விடுமுறை தினம்) வந்ததால், பன்னிரண்டு விடுமுறை நாட்களில் அதை ஒன்றாக சேர்க்காமல், தெலுங்கு வருடப் பிறப்பு தினத்தை அந்த ஆண்டில் விடுமுறை நாளாக அறிவிக்கும்படி ம வா எல்லோரும் சேர்ந்து கேட்டு, வெற்றியும் பெற்றார்கள்.

இதில் வேறொரு சூட்சுமமும் இருக்கின்றது. விடுமுறை நாட்களை யூனியன் தோழர்கள் தேர்ந்தெடுக்கும் பொழுது, இயன்றவரையிலும் சனி அல்லது செவ்வாய்க்கிழமை வருமாறு பார்த்துக் கொள்வார்கள். அந்தக் காலத்தில் ஞாயிறு வேலை நாளுக்கு விடுமுறை விண்ணப்பிக்க வேண்டியது இல்லை. ஞாயிறு வேலைக்கு வரவில்லை என்றால், சம்பளத்தில் உபரியாக வருகின்ற ஞாயிற்றுக் கிழமை சம்பளம் (sixth day salary) வெட்டப்படும். மாதத்தில் நான்கு அல்லது ஐந்து ஞாயிறு வந்தால், அதற்குரிய உபரி சம்பளம் கிடைக்கும்.

சனி அல்லது செவ்வாய்க்கிழமை பண்டிகை விடுமுறையாக அமைந்தால், விடுமுறைக்கு சொந்த ஊர் சென்று திரும்பும் தொழிலாளர்களுக்கு மிகவும்

சந்தோஷமாகிவிடும். மூன்று நாட்கள் தொடர்ந்து விடுமுறை கிடைக்கின்றதே!

விடுமுறை அறிவிப்பு வந்தவுடனேயே எங்கள் பகுதியில் வேலை பார்க்கும் இரண்டு டிரேசர்கள் மும்முரமாக, ஒரு A4 டிரேசிங் பேப்பரில் அடுத்த ஆண்டுக்கான காலண்டர் தயாரிப்பார்கள். (நோ நோ இந்தக் காலண்டரில் கவர்ச்சிப் படங்கள் எதுவும் கிடையாது). சற்றேறக் குறைய, அந்தக் காலண்டரின் அமைப்பு, இந்தப் படத்தில் காணப்படுவது போல இருக்கும்.



டிரேசிங் பேப்பரில் வரையப்பட்ட காலண்டர் என்பதால், இதை வைத்து நிறைய அம்மோனியா பிரிண்ட் எடுக்கலாம். எடுப்போம். எங்கள் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் என்று ஆளுக்கொன்று தருவதற்காக, ஆயிரக் கணக்கில் பிரிண்டுகள் தயாரான வருடங்களும் உண்டு.

என்னுடைய அசோக் லேலண்ட் சர்வீஸ் நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் எல்லாமே ஒரு கோப்பாக வைத்திருந்தேன். 1974 தொடங்கி, 2006

வரை ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தாள். என்னுடைய காலண்டர் தாளில், ஒவ்வொரு நாளும் அலுவலகத்திற்கு நான் எத்தனை மணிக்கு வந்து, எத்தனை மணி வரை இருந்தேன், லீவு என்றால் என்ன லீவு, ஏன் லீவு, வாங்கிய சம்பளம் என்ன, இன்செண்டிவ் என்ன, போனஸ் என்ன போன்ற எல்லா விவரங்களும் எழுதி வைத்திருந்தேன்.

ஏ எம் ஐ ஈ பரிட்சை எழுதிய வருடங்களில், (1977 ~ 1983) summer / winter exams வருகின்ற நாட்களில், பரிட்சைக்குப் படிக்கவும், எழுதவும் ஒவ்வொரு சீசனிலும் இரண்டிரண்டு வாரங்கள் லீவு போட்டுப் படித்து பரிட்சை எழுதுவேன்.

நான்கு பரிட்சை எழுதி இரண்டு அல்லது மூன்று சப்ஜெக்டுகளில் பாஸ் செய்வேன். சில சமயங்களில் வாஷ் அவுட்டும் ஆனது உண்டு. அது தனிக் கதை! காலண்டரை வைத்துக் கொண்டு திட்டம் போட்டு லீவு விண்ணப்பம் அளித்து, படித்து, எழுதுவேன்.

ஏ எம் ஐ ஈ பாஸ் செய்த பிறகு, ஒவ்வொரு வருடமும் கடைசி மாதத்தின் கடைசி இரண்டு வாரங்களோ அல்லது கடைசி பத்து நாட்களோ லீவு போட்டு விட்டு, எல்லா நாட்களையும், மியுசிக் அகடெமி, மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ், பாரதீய வித்யா பவன், தமிழ் இசை சங்கம், இன்னும்

மயிலாப்பூர், மாம்பலம் பகுதிகளில் கச்சேரி நடக்கும் இடங்களாக சுற்றுவேன். வாழ்க்கையின் மகிழ்ச்சியான மார்கழி மாதங்கள்!

அலேக் அனுபவங்கள் 17:: முட்டை போட்டியா?

அசோக் லேலண்டில் அது ஒரு வெயில் கால மதிய நேரம். கால் நடையாக காண்டீன் வரை சென்று, நாற்பது பைசா சாப்பாடு சாப்பிட்டு, கால்நடையாக என் பணி இடம் திரும்பினேன். (இரண்டு பேர்களுக்கு கருத்துரை பதிய பாயிண்ட் கிடைத்து விட்டது என்று நினைக்கின்றேன். பார்ப்போம்!)

வெயில் காலங்களில், வெளியே சுற்றிவிட்டு வந்தால், இரண்டு புகலிடங்கள் அந்த நாட்களில் மிகவும் பிரசித்தம். ஒன்று நகல் யந்திரம் உள்ள அறை. மற்றது மேலாளர் அறை.

அந்த அறைகள் குளிர் பதன எந்திரங்கள் கொண்ட அறைகள் என்பதால், (தமிழ்ல சொன்னா ஏ சி ரூம்!) வெயிலுக்கு இதமாக, சற்று இளைப்பாறலாம்.



மதிய நேர டிஸ்கஷனுக்காக என்றே கூட சில பேப்பர்களை எடுத்து வைத்துவிடுவோம். சில நாட்களில், மேலாளர் சாப்பிட செல்வதற்கு முன்பாகவே போய் சாப்பிட்டு வந்து , அவர் அறையை விட்டு கிளம்புவதற்குள், அங்கே தஞ்சம் புகுந்து, "நீங்க போய் சாப்பிட்டுவிட்டு நிதானமா வாங்க சார், எப்போ ஈ டி (Executive Director) வந்து கேட்டாலும், ' மானேஜர் இப்போதான் சாப்பிடப் போனார்' என்று சொல்லிவிடுகிறேன்!" என்று சொல்லி விடுவேன். மானேஜருக்கும் அந்த டீலிங் ரொம்பப் பிடிச்சிருந்தது!

ஒரு நாள், இப்படி மேலாளர் அறைக்குள் நான் நுழைந்த தருணத்தில், அவர் போனில், "முட்டை

போட்டியா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார். சரி, யாரோ சத்துணவுக்கூட ஆயாவோடு போனில் உரையாடுகிறார் போலிருக்கு என்று நினைத்துக் கொண்டேன்.

தொடர்ந்து அவர், "அதாம்பா எல்லோரும் செய்யறதுதானே. அதைத்தான் கேட்டேன். முட்டை போட்டியா?" என்றார். பிறகுதான் கவனித்தேன் அவர் பேசிக் கொண்டிருந்தது, வெளித் தொலை பேசி இல்லை. டிபார்ட்மெண்டுகளுக்கிடையே பேசப் பயன் படுகின்ற, உள் தொலைபேசி. (internal telephone) 'இதேதடா விசித்திரமாக இருக்கிறதே! அசோக் லேலண்டில், அடை காக்கும் கோழிகளை கூட அப்பாயிண்ட் செய்கிறார்களா' என்று ஆச்சரியத்துடன் அந்த ஆந்திரா யுனிவெர்சிடி அதிகாரியை நோக்கினேன்.



அப்புறம், 'அப்படியே மறுமுனையில் ஒரு கோழி பேசிக் கொண்டிருந்தாலும், இவருக்கு கோழி பாஷை தெரியாதே!' என்று நினைத்தேன். இதற்குள், மறுமுனையில் பேசிக்கொண்டிருந்தவர், இவர் என்ன கேட்கிறார் என்று புரியாமல், பக்கத்தில் யாராவது தமிழ் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களிடம் போனைக் கொடுக்கும்படி கேட்டிருப்பார் போலிருக்கு. அதிகாரி என்னிடம் போனைக் கொடுத்தார்.

நான் போனை கையில் வாங்கி, காதில் வைத்து, 'ஹலோ?' என்று வாயால் கேட்டேன். மறுமுனையில் பேசிக் கொண்டிருந்தவர், 'திட்டமிடுதல்' (Planning Department) பகுதி நண்பர். எனக்கும் தெரிந்தவர்.

என் குரலை அடையாளம் கண்டு கொண்டு, "கௌதமா - அவர் என்ன கேட்குறாருன்னு எனக்குப் புரியல. நீ கேட்டு விளக்கமா சொல்லு" என்றார்.

நான் அதிகாரியை பார்த்தேன். அவர் சொன்னார்: "அவரு திருப்பதி போயிட்டு வந்தாராம். அதுதான், (தலையைக் காட்டி) முட்டை போட்டு வந்தாரா' என்று கேட்டேன்" என்றார்.



நான் போனில், அந்த நண்பரிடம், "அது ஒண்ணுமில்லே சார். நீங்க திருப்பதி போயிட்டு வந்திருக்கீங்களே, மொட்டை போட்டு வந்திருக்கிறீர்களா' என்று கேட்கிறார் சார்" என்றேன்.

அவர் மறுமுனையில் சிரித்த சிரிப்பில், என் கையில் இருந்த ரிசீவர் அதிர்ந்தது.



*************** ************** **************

அதே அதிகாரியின் சம்பந்தப் பட்ட மற்றுமொரு சுவையான அனுபவம்:

எங்களுடைய (பழைய) 370 எஞ்சின் கிராங்க் ஷாப்டில், ஒரு சிறிய மாற்றம் செய்து, அதை ஒரு ட்ரயல் பேட்ச் உற்பத்தி செய்து, தமிழகத்தில் பல பகுதிகளில் அந்த கிராங்க் ஷாப்ட் பொருத்தப்பட்ட எஞ்சின், பேருந்துகளில் சோதனை ஓட்டம் நடந்து கொண்டிருந்தது. எல்லா இடங்களிலிருந்தும் கிடைத்த அறிக்கைகள், சம்பந்தப்பட்ட எஞ்சின்கள்

குறை ஏதுமின்றி, நன்றாக இயங்கிக் கொண்டுள்ளன என்பதுதான்.



மூத்த அதிகாரிகளின் உயர்மட்டக் குழு சந்திப்பின் போது, இந்த விவரங்கள் அளிக்கப்பட்டன.
அப்பொழுது ஒரு (வடக்குப் பகுதி சர்விஸ்) அதிகாரி, இந்த மாற்றம் செய்யப்பட்ட எஞ்சின் உள்ள பேருந்துகள், எங்கே அதிக அளவில் சோதனை ஓட்டம் ஓடிக் கொண்டிருக்கின்றன? என்று கேட்டார்.

இந்த ஆந்திர அதிகாரி, உடனே மீட்டிங் ரூமிலிருந்து, அந்த பிராஜெக்ட் இன்சார்ஜ் (நாராயணசாமி என்று ஞாபகம்) ரூமிற்கு போன் செய்து, விவரங்கள் கேட்டு அறிந்தார். ஒரு காகிதத்தில் விவரங்களை எழுதிக் கொண்டார்.

மீட்டிங் ரூமில் இருந்த அனைத்து உயர்

அதிகாரிகளிடமும், பெருமையாக சொன்னார். "இந்த மாற்றம் செய்யப்பட்ட என்ஜின் உள்ள வண்டிகள், அதிக அளவில் ஓடிக் கொண்டிருப்பது, தஞ்சை பெருமாள் டிரான்ஸ்போர்ட். "



சிலர், சரி என்று தலை ஆட்டி கேட்டுக் கொண்டனர். சிலர் புருவம் உயர்த்தினர். ஒருவர் மட்டும் கேட்டார், "அது என்ன புதுசா இருக்கு? நான் கேள்விப் பட்டதே இல்லையே!"

நம் அதிகாரி, போன் செய்து பிராஜெக்ட் இன் சார்ஜை, மீட்டிங் அறைக்கு உடனே வரும் படி அழைத்தார்.

மீட்டிங் ஹாலுக்கு சென்ற பிராஜெக்ட் இன்சார்ஜிடம், எல்லோரும், "யாருப்பா அந்த தஞ்சை பெருமாள்? நீங்க பாட்டுக்க புதுப் புது ஆட்களிடம் சோதனை வண்டிகளை கொடுத்து சோதனை செய்தால், நாளைக்கு வேறு பெரிய கஸ்டமர்களுக்கு அந்த மாற்றங்கள் நம்பகமானவை என்று எங்களால் எப்படி நிரூபிக்க முடியும்?" என்றெல்லாம் கேள்விகள் கேட்க, பிராஜெக்ட் இன் சார்ஜ் கூறினார். "சார், அது தஞ்சை பெருமாள் டிரான்ஸ்போர்ட் இல்லை; தந்தை பெரியார் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்!"

அலேக் அனுபவங்கள் 18:: பேருந்து நாட்கள்.

\
அசோக் லேலண்டில் பயிற்சி பெற்ற ஆரம்ப நாட்களில், நான் ஒரு பேருந்துப் பயணியாகத்தான் இருந்தேன்.

பாக்டரி வேலை நேரம், காலை ஏழரை மணி முதல், மாலை நான்கு மணி வரையில்.

காலையில் நாலே முக்கால் மணிக்கு எழுந்து, ஐந்தரை மணிக்குள் வீட்டை விட்டுக் கிளம்பி, ஐந்து நாற்பதுக்கு புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் டாங்க் பேருந்து நிறுத்தத்தில், மதார் ஷா கடை வாயிலில், வந்து நின்று கொள்வேன்.



தங்கசாலை செல்லுகின்ற பேருந்துக்காக காத்திருப்பேன். தடம் எண் பதினான்கு, முப்பத்தேழு ஆகியவை தங்கசாலை செல்லுகின்ற வண்டிகள் என்று ஞாபகம். அந்தக் காலத்தில், புரசைவாக்கத்திலிருந்து, தங்கசாலை வரையிலும் பதினைந்து பைசா டிக்கெட் கட்டணம்.. காலை நேரத்தில் கூட்டம் அதிகமாக இருக்காது. நிச்சயம் உட்கார இடம் இருக்கும்.



ஆறு மணிக்குள், தங்கசாலை பேருந்து நிலையம். அங்கேயிருந்து 56A பேருந்தைப் பிடித்து, ஆறு நாற்பது சுமாருக்கு எண்ணூர் அசோக் லேலண்டு வாசலில் இறங்கிவிடுவேன். தங்கசாலையிலிருந்து, அசோக் லேலண்டு வாசல் வரை அம்பத்தஞ்சு

பைசா டிக்கெட். இந்த வழித் தடத்தில், சில மாதங்களுக்கு மாதாந்திர சீசன் டிக்கெட் கூட எடுத்து, பயணம் செய்தேன். பேருந்து எதிலும் காலை நேரத்தில் உட்கார்ந்துகொண்டுதான் பயணம் செய்வேன்.ஏன் பேருந்துகளில் உட்காருவதைப் பற்றி பிரஸ்தாபித்து எழுதுகிறேன் என்பதைக் கூறுகின்றேன்.



பள்ளிக்கூட நாட்களில் பள்ளிக்கூடத்திற்கு முதலில் வருகின்ற பையன், 'ஐ ஃபர்ஸ்ட்' என்று எல்லோரிடமும் பீற்றிக் கொள்வது போல, பல நாட்கள், பாக்டரி கான்டீனுக்குள், முதல் ஆளாக நுழைந்த பெருமை என்னையே சேரும்.



காண்டீனுக்கு, கவுண்ட்டர்களுக்கு சுடச் சுட வருகின்ற அன்றைய தின சிற்றுண்டியை, கூப்பன் கொடுத்து வாங்கி, தட்டில் ஏந்தி, காண்டீன் பெஞ்சுல அமர்ந்து, மேஜை மீது வைத்து, மின் விசிறிக்குக் கீழே அமர்ந்திருந்தாலும், 'உப் ... உப்ப்ப் ' என்று வாயால் ஊதி, சூடாற்றி, சாப்பிட்ட நாட்கள் நினைவுக்கு வருகின்றன.

சிற்றுண்டி மணமும், தேநீர் மணமும் கலந்து, காண்டீன் மணம் அலாதியாக இருக்கும். காலை

சிற்றுண்டி நேரம், மதிய நேரத்தில், உணவு உண்ணும் பொழுதும் மட்டும்தான் எங்களுக்கு உட்கார இடம் கிடைக்கும். அப்ரெண்டிஸ் நாட்களில், பாக்டரி உள்ளே, எங்களுக்கு உட்கார இடம் கிடையாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியில் பயிற்சி. எல்லா இடத்திலும் நிற்க மட்டும்தான் அனுமதி. உட்காருவதற்கு இடம் கிடையாது என்பதும் உண்மை. நேரடி உற்பத்தி இல்லாத பகுதிகளுக்கு பயிற்சிக்கு சென்றால், உட்காருவதற்கு ஒரு ஸ்டூல் கிடைக்கும். (அதற்கு அந்தப் பகுதி நண்பர் யாரும் உரிமை கோராத வரை!)

பயிற்சி பெறுகின்ற கிராஜுவேட் அப்ரெண்டிஸ்கள் அவர்களுக்கு ஒரு ரகசிய இடம் தேர்ந்தெடுத்து வைத்திருந்தார்கள். மதிய நேர உணவுக்குப் பின் யார் கண்ணிலும் படாமல் அரட்டை அடிக்க! மேலும் கிராஜுவேட் அப்ரெண்டிஸ்களை யாரும் அதிகமாக நெருங்கமாட்டார்கள். நாளைக்கு அதிலிருந்து ஒருவர் தமக்கு பாஸ் ஆக வருவதற்கு, சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதால். அதுமட்டும் அல்ல, கிராஜுவேட் அப்ரெண்டிஸ்கள் பயிற்சி முடிந்ததுமே எக்சிகியூடிவ் ஆகிவிடுவார்கள். நாங்கள் கன்ஃபர்ம் ஆகும் பொழுது, யூனியன் கேடர் ஆட்களாக ஆவோம். பாதிக்கப்பட்ட இனமாக இருந்தவர்கள்,

எங்களைப் போன்ற எஞ்சினீரிங் அப்ரெண்டிஸ்கள்தான்!



நாங்களும் எங்களுக்கு உட்கார்ந்து ஓய்வு எடுக்க, ஒரு ரகசிய அரட்டை மூலை ஏற்பாடு செய்துகொண்டோம். ஆனால், ஒருநாள் மாட்டிக் கொண்டோம். எப்படி? பிறகு பார்ப்போம்.


அலேக் அனுபவங்கள் 19:: பிடிபட்டோம்!

போன பதிவில் எழுதி இருந்த அரட்டை மூலை பற்றி மீண்டும் ஞாபகப் படுத்திக்குங்க.

தினமும் சாப்பிட்டு முடித்தவுடன், எங்கள் அணி அப்ரெண்டிஸ் எல்லோரும் சேர்ந்து அமர்ந்து அரட்டை அடிக்க, ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்தோம். ட்ரைனிங் செண்டர் செல்ல வேண்டியவர்கள், கம்பெனி பிரதான வாயிலில் நுழைந்தால், இடதுபுறம் திரும்பி, நீண்ட தூரம் நடக்க வேண்டும்.

பெரும் தலைகள் இருக்கின்ற பகுதி பிரதான வாயிலில் நுழைந்து, சற்று தூரம் நடந்து, வலது புறம் திரும்பினால் போதும்.

ட்ரைனிங் செண்டர் ஆட்கள், பெரும் தலைகள் பெரும்பாலும் வராத இடம், படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீல நிற இடம்.



இந்த இடம்தான் எங்களுடைய சீனியர் அப்ரெண்டிஸ்கள் அரட்டையடிக்க உபயோகித்த இடம் என்று காற்று வழி செய்தியும் உண்டு!

சாப்பாடு முடித்த பின், அரட்டை மூலைக்கு ஒவ்வொருவராக வருவோம். இருவர் அல்லது மூவராக அந்த இடத்திற்கு வந்தால் ஆபத்து. ட்ரைனிங் சென்டரில் இருக்கின்ற பாட்ரிக் என்னும் கழுகு கண்களில் நாங்கள் பட்டுவிட்டால், பேராபத்து. அவர் ட்ரைனிங் ஆபீசரிடம் சென்று, 'தஸ் புஸ்' என்று காற்றோடு ஆங்கிலத்தைக் கலந்து அவர் காதில்

ஊற்றி, எங்களுக்கு உலை வைத்துவிடுவார்!

சற்றேறக் குறைய இரண்டு அல்லது மூன்று மாதங்கள், அரட்டை கச்சேரி (ஒரு நாளைக்கு, குறைந்த பட்சம் பத்து நிமிடங்கள், அதிக பட்சம் முப்பது நிமிடங்கள்) இனிதே நடந்து வந்தது. அந்த நேரத்தில், ஒவ்வொருவரைப் பற்றியும் மற்றவர்கள் பல விஷயங்கள் தெரிந்து கொண்டோம். ஏற்கெனவே ஒரு டிபார்ட்மெண்டுக்கு பயிற்சி சென்றவர்கள், அந்த டிபார்ட்மெண்டில் யார் அப்ரெண்டிஸ்களுக்கு அனுகூலமாக நடந்துகொள்பவர், யாரு கடி மனிதர் என்று மற்றவர்களுக்கு சொல்லுவார்.

மற்றவர்கள் அந்த டிபார்ட்மெண்டுக்கு ட்ரைனிங் செல்லும் பொழுது, எங்கே படலாம், எங்கே தொடலாம், யார் பக்கம் செல்லக்கூடாது என்று நன்கு தெரிந்து வைத்துக் கொள்வோம். மற்ற லோக விவகாரங்களும் பரிமாற்றம் நடைபெறும். (அப்பாதுரை சார்! கற்பனை குதிரையை ரொம்ப மேய விடாதீங்க! எல்லாமே சைவ சிந்தனைகள்தான்)

எப்படி பிடிபட்டோம்?

நாங்கள் பிடிபட்ட நிகழ்ச்சி சற்றும் எதிர்பாராத விதமாக நிகழ்ந்தது. மதிய உணவு வேளை முடிந்ததும், தன்னுடைய வொர்க் டயரியை ட்ரைனிங் ஆபீசர் பார்த்துக் கையெழுத்திட்டதை, திரும்பப் பெற சென்றிருந்தான், எங்கள் அணி நண்பன். அதை வாங்கிக் கொண்டு திரும்ப யத்தனித்தவனை, தடுத்து நிறுத்தியது, ஏ டி ஓ வின் குரல். ஏ டி ஓ = அசிஸ்டன்ட் ட்ரைனிங் ஆபீசர். யாருங்க அது? ஹி ஹி - நம்ம பாட்ரிக் அவர்களுக்கு நாங்க கொடுத்திருந்த பதவிப் பெயர் அது! கிளார்க் என்று சொன்னால் அவர் செய்கின்ற அலம்பல்களுக்கு அது சரியாக இல்லை என்பதால் இப்படித்தான் அழைத்து வந்தோம் அவரை!

"மிஸ்டர் ...... வுட் யூ மைன்ட் கிவிங் பேக் திஸ் டயரி டு மிஸ்டர் .... இப் யூ ஹாப்பென் டு ஸீ ஹிம்?" என்று அரட்டை அணியின் மற்ற நண்பர் ஒருவருடைய டயரியை எடுத்து நீட்டினார். இந்த நண்பன், உடனே, 'எஸ் ஐ ஹாவ் நோ மைன்ட்' என்று பேத்தியவாறு, அதை வாங்கிக் கொண்டு கிளம்பிவிட்டான்.

பாட்ரிக்குக்கு ஒரே அதிசயம்! அப்ரெண்டிஸ்கள் யாரையாவது கம்பெனிக்குள் தேடவேண்டும் என்றால், அவருடைய உதவியின்றி, யாராலும் தேட

இயலாது. யார் யாருக்கு எங்கெங்கே போஸ்டிங் போட்டிருக்கிறோம் என்பது அவருக்கு மட்டும்தான் (தன்னுடைய சித்ரகுப்தன் நோட்டு பார்த்து) தெரியும். அப்படி இருக்கையில், இந்த ஆள் டயரியை எடுத்துக் கொண்டு, எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் போல நடந்து சென்றதைப் பார்த்தவுடன், ஒரு சிறிய சந்தேகம் வந்தது.

பாட்ரிக், அருகில் இருந்த ட்ரேட் அப்ரெண்டிஸ் ஒருவரை அழைத்து, டயரியுடன் செல்கின்ற நண்பர் எங்கே போகிறார் என்று வேவு பார்த்து வந்து தன்னிடம் சொல்லச் சொன்னார். அசோக் லேலண்டில் ஆள்காட்டிகளுக்குப் பஞ்சமே இல்லை. அந்த ஆ.கா. பாட்ரிக் இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு, வந்து, பார்த்து, விவரங்களை பாட்ரிக்கிடம் கூறிவிட்டார்.

நாங்கள் செய்த புண்ணியம், அன்றைக்கு ட்ரைனிங் ஆபீசர் அலுவலகத்தில் மதியம் இல்லை. எங்கோ வெளி வேலையாக சென்றிருந்தார்.

பாட்ரிக் பின் வாசல் வழியாக எங்களின் அரட்டை மூலைக்கு வந்து, பத்து நிமிட கீதோபதேசம் நிகழ்த்தினார். 'மறுபடியும் எங்களில் யாரையாவது ட்ரைனிங் நேரத்தில் அங்கு கண்டால், அதை ட்ரைனிங் ஆபிசரின் கவனத்திற்கு உடனே எடுத்துச்

செல்வதைத் தவிர வேறு வழியிருக்காது' என்று அவர் சொன்னார் என்று அவருடைய தஸ் புஸ் மொழியை உரித்துப் பார்த்துப் புரிந்து கொண்டோம்.

அலேக் அனுபவங்கள் 20 : புதிர் மனிதர்கள் !

அலேக் அனுபவங்கள் தொடரை படிப்பவர்களுக்கு முக்கியமான அறிவிப்பு: இது தொடர் அல்ல, அதனால்தான் நான் ஒவ்வொரு பதிவின் கடைசியிலும் 'தொடரும்' என்று எல்லாம் எதுவும் போடுவது கிடையாது. ஆனால் தொடர்ந்து அடிக்கடி வரும்.

யார் எந்தப் பகுதியையும் எப்பொழுது வேண்டுமானாலும் படிக்கலாம், அல்லலுறலாம்!

ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத கட்டுரைகள். அப்படி தப்பித் தவறி முந்தைய கட்டுரை எதற்காவது தொடர்பு இருந்தால், அந்த இடத்திலேயே சுட்டி கொடுத்துவிடுவேன், முந்தைய கட்டுரைக்கு.

எனக்கு ஆரம்பப் பள்ளி நாட்களிலிருந்து மிகவும் பிடித்த விஷயம், புதிர் கணக்குகள், அறிவை தீட்டிப்

பார்க்கின்ற வினோத கணக்குகள் போன்றவை.

அதனால்தான் வை. கோபாலகிருஷ்ணன் அவர்களின் பதிவில் (முன்பு) கேட்கப்பட்ட புதிர்க் கேள்விகள் எல்லாவற்றிற்கும் விடைகள் பதிந்தேன்.

என்னுடைய அப்பா நிறைய கேள்விகள் கேட்பார். எங்களை எல்லாம் சிந்திக்கத் தூண்டுவார். புகழ் பெற்ற காலே அரைக்கால் காசுக்கு நாலே அரைக்கால் வாழைக்காய் - என்றால் காசுக்கு எவ்வளவு வாழைக்காய் என்ற கேள்வி,

ஒரு குளத்தில் சில தாமரைப் பூக்கள் இருந்தன. சில குருவிகள் அங்கு பறந்து வந்தன, ஒவ்வொரு பூவிலும் ஒரு குருவி உட்கார்ந்தது. அப்போ ஒரு குருவிக்கு உட்கார பூ கிடைக்கவில்லை, எனவே ஒவ்வொரு பூவிலும் இரு குருவிகள் உட்கார்ந்தன, அப்படி உட்கார்ந்தால், ஒரு பூவிற்கு குருவி ஆசனம் ஆகின்ற பாக்கியம் இல்லை. எவ்வளவு பூ, எவ்வளவு குருவிகள் - என்பது போன்ற கேள்விகள் பல அவர் கேட்டு, நாங்கள் பதில் சொன்னது உண்டு.

என்னுடைய நான்கு அண்ணன்களில் இருவர், புதிர் கேள்விகளுக்கு விடை காண்பதில் பயங்கரக் கில்லாடிகள். புதிர் கேள்விகளுக்கு விடை காண்பது

மட்டும் இல்லை, அவர்கள் அந்த வகை கேள்விகளுக்கு, எக்ஸ் ஒய் எல்லாம் உபயோகித்து, விடையை எப்படி கண்டு பிடிக்கலாம் என்று உதாரணங்கள் மூலம் விளக்கிக் கூறுவார்கள்.

அசோக் லேலண்டில், கியர் ஷாப் என்ற இயந்திரப் பகுதி. வண்டியில் பொருத்தப் படுகின்ற பல்சக்கரங்களை உருவாக்குகின்ற எந்திரங்கள் உள்ள பகுதி. இந்தப் பகுதியில் இன்ஸ்பெக்ஷன் பகுதியில் பல இளைஞர்கள் அந்தப் பகுதி பல் சக்கர வேலை உட்பட மற்றும் பல் வேறு துறை ஆர்வம் மிக்கவர்களாக இருந்தார்கள். அந்தப் பகுதியில் ஆர் முரளி என்ற ஒரு நண்பரை சந்தித்தேன். அவர் ஆல் இந்தியா ரேடியோவில் நிலைய வீணை வித்வானாக பணிபுரிந்த திரு ராகவன் என்பவருடைய பையன். ஆர் முரளி, எம் எஸ் கோபாலகிருஷ்ணன் வாசிப்பது போலவே வயலின் வாசிக்கக் கூடியவர்.

அவர் அறிமுகப்படுத்தி, அவருடைய மற்ற நண்பர்களும் எனக்கு அறிமுகம் ஆனார்கள்.

அந்த நண்பர்களில் ஒருவர், ஐ ஏ எஸ் தேர்வுக் கேள்விகள் சில கேட்டார். என்னால் சிலவற்றிற்கு விடை கூற முடிந்தது. பல பதில்கள் தெரியவில்லை!

அவர் ஒரு நாள் என்னிடம் கேட்ட கேள்வி :

A is the father of B. But B is not A's son. Who is B?

கொஞ்சம் யோசித்து, பி இஸ் டாட்டர் ஆப் ஏ. என்றேன்.

இந்த பதிலுக்காகவே காத்திருந்தவர் போல, அவர், ஒரு காகிதத்தில்,

Shivaji is father of Shambaji.

Shivaji is Shambaji's father's -------------------

என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். கோடிட்ட இடத்தில் ஒரே வார்த்தைதான் எழுதவேண்டும் என்று ஒரு கண்டிஷன் மட்டும் போட்டுவிட்டுப் போனார்.

என்னால் உடனே அதற்கு அப்பொழுது விடை எழுத முடியவில்லை. பல மணி நேரங்களுக்குப் பின் விடை கண்டு பிடித்தேன்.


****

இண்டஸ்ட்ரியல் எஞ்சினீரிங் டிப்பார்ட்மெண்டில் எனக்கு பி ராஜேந்திரன் என்று ஒரு நண்பர். புதிர்க் கணக்கு என்று எதை சொன்னாலும் ஆர்வத்துடன்

கேட்டுக் கொள்வார். கேள்வி கேட்டதும், சற்றும் தாமதியாமல், "விடையையும் நீயே சொல்லிடுப்பா" என்பார்! (சென்ற ஞாயிறு பதிவின் முதல் கருத்துரையைப் பார்த்ததும் எனக்கு நண்பர் பி ராஜேந்திரனின் ஞாபகம் வந்தது)

****

புதிர்கள், விடுகதைகள் என்று எதைப் பார்த்தாலும் அவற்றை விடுவிக்கும் பெரு முயற்சியில் ஈடு படுகின்ற என்னை இடறி விழ வைத்தது, இந்தப் புதிர்:



ஆனால் இதனுடைய விடையை. எனக்கு முன்பாக என்னுடைய திருமதி கண்டுபிடித்துவிட்டார்!

அலேக் அனுபவங்கள் 21 :: சின்ன காம்பஸ், பெரிய காம்பஸ்!

அசோக் லேலண்டில், ஆராய்ச்சி & அபிவிருத்திப் பிரிவில், ஒரு வரைவு மனிதனாக (டிராப்ட்ஸ்மேன்) பணியாற்றிய காலம். ('உனக்கு டிராப்ட்ஸ்மேன் என்கிற பதம் சரியில்லை. உனக்கு டிராப்ட்ஸ்பாய் என்பதுதான் சரியான டெசிக்னேஷன் என்று என்னை என் நண்பன் வி. பாஸ்கர் அடிக்கடி கிண்டல் செய்வதுண்டு!)



பக்கத்து வரைவு மேசை/ வரைவுப் பலகையில் பணியாற்றியவர் பெயர் சி.வி. தயாளன். அந்தக் காலத்து ஆர்மி வண்டியில், (4X4 Model) பயன்படுத்தப் பட்ட பல பாகங்களை படம் வரைந்து அதற்கான விவரங்களை அட்டவணை (specifications) இட்டவர் அவர். அந்த வண்டியின் முன் அச்சு பாகங்கள் எல்லாமே அவருக்கு அத்துப்படி.

அவர் பல வருடங்களாக அசோக் லேலண்டில் பணியாற்றி வருபவர் என்பதால், பல்வேறு

டிப்பார்ட்மெண்ட் நண்பர்கள் அவரைத் தேடி வருவதுண்டு. சில சமயங்களில், அவரைத் தேடி வருபவர்கள், அவரின் வேலைக்கு இடையூறாக ஏதேனும் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில், அவர்களை, தவிர்க்க இயலாது திண்டாடுவார், அவர்.

நான் அப்பொழுது பணியாற்றிக் கொண்டிருந்தது, மெட்ரிகேஷன், சஜஷன் ஸ்கீம், ஸ்டான்டார்டைசேஷன் - என்று பல தலைப்புகளில். சஜஷன் ஸ்கீம் சம்பந்தமாக, என்னைக் காணவும் பல வெளி டிபார்ட்மெண்ட் ஆட்கள் வருவார்கள். என்னுடைய வேலையிலும் வருகின்ற விசிட்டர்களால் தாமதம் ஏற்படும்.

வெளியாட்கள் தொந்தரவுகளைத் தவிர்க்க நாங்கள் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டோம்.

தவிர்க்கப்பட வேண்டிய இம்சை அரசர்கள், எங்கள் வரைவு மேஜைக்கு அருகில் வந்து, வேலையை செய்யவிடாமல் போர் அடித்துக் கொண்டிருந்தால், யாருக்கு இம்சையோ, அவர், எங்களில் மற்றவரிடம், "சின்ன காம்பஸ் கொடு" என்று கேட்கவேண்டும். உதாரணத்திற்கு, அவர் இம்சை அரசனால் பாதிக்கப் பட்டு, திணறிக் கொண்டிருந்தால், அவர் என்னிடம் வந்து, சத்தமாக, "கௌதமன், சின்னக் காம்பஸ்

கொடு" என்று கேட்க வேண்டும். நான் உடனடியாக அதை அவருக்குக் கொடுத்து விட்டு, சற்று நேரம் கழித்து, கொஞ்சம் வெளியே உலா போவது போல - அல்லது தொலைபேசி மேஜை அருகே சென்று, தொலைபேசியை எடுத்து, சற்று நேரம் கேட்டுவிட்டு (கேட்பது போல நடித்து) "தயாளன் - போன் கால் ஃபார் யூ" என்று கத்தி சொல்லி, அகன்று விடுவேன். அவர் உடனே ஓடி வந்து போனில் சற்று நேரம் கேட்பது போல நடித்து, "இதோ வருகிறேன் சார்!" என்று பய பக்தியுடன் சொல்லி போனை வைத்துவிட்டு, அவருடைய பாஸ் இருக்கும் அறைப் பக்கம் பார்த்து வேகமாக நடப்பார். நன்றாக நடிப்பார்.



வந்திருக்கும் இம்சை, சாதாரணமாக இந்தக் கட்டத்திலேயே வாபஸ் ஆகி வெளியே சென்றுவிடுவார்கள்.

அப்படியும் அசையாமல் அவர் மேஜைக்கு அருகே இம்சை நின்று கொண்டிருந்தால், நான், அந்த இம்சையிடம், "அவரு பாஸ் கூப்பிட்டிருக்காரு. பாஸ் ரொம்பக் கோபமா இருக்காரு. அது அவரு குரலிலேயே தெரியுது. அவர் திட்டு வாங்கிகிட்டு திரும்ப வரும்போது நீங்க இங்கே இருக்காதீங்க. அனேகமா பாஸ் அவர் கூட சேர்ந்து இங்கே வந்து, படப் பலகையில் இருக்கின்ற படம் குறித்து விவாதிப்பார்கள். இந்த சமயத்தில், நீங்கள் இங்கே இருந்தால், உங்க நண்பருக்கு மிகவும் இக்கட்டான நிலைமை ஏற்படும். ஆகவே சீக்கிரமாக சென்றுவிடுங்கள். பிறகு வந்து பாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிடுவேன்.

நான் தயாளனிடம் 'சின்ன காம்பஸ்' கேட்டாலும் இந்த நாடகங்கள் அரங்கேறும்; நான் இம்சையிலிருந்து காப்பாற்றப் படுவேன்!

இப்படியாக எங்கள் நடிப்புத் திறமையைக் காட்டி

நாங்கள் ஒருவரையொருவர் காப்பாற்றி வந்த நாட்களில் ஒருநாள் ......

"கௌதமன், அர்ஜண்டா சின்ன காம்பஸ் கொடு" என்று பரபரத்தார், தயாளன். அவருடைய மேஜை அருகே யாரும் இல்லை. 'சரி மனிதர் உண்மையிலேயே கேட்கிறார்' என்று நினைத்து, நான் அவரிடம் சின்ன காம்பஸ் கொடுத்துவிட்டு, என் வேலையில் ஆழ்ந்துவிட்டேன்.

சற்று நேரம் கழித்து, மீண்டும் தயாளன். "கௌதமன், பெரிய காம்பஸ் கொடு." கொடுத்தேன்.

சற்று நேரம் கழித்து மீண்டும் அவர். என்னருகே வந்து, "கௌதமன் சின்ன காம்பஸ் கொடு." நான் உடனே "அது உங்களிடம்தானே இருக்கு?" என்று சொன்னேன். அவர், "ஆமாம், ஆமாம். என் 'கிட்டே'தான் இருக்கு. போர்டு கிட்டே வா - ஒரு சந்தேகம்" என்றார்.



சென்று பார்த்தால், வழக்கமாக மேஜை அருகே நின்று போரடிக்கின்ற இம்சை ஒன்று, தயாளனின் டிராயிங் போர்டு பக்கத்தில் ஒரு ஸ்டூலில் அமர்ந்துகொண்டு இருந்தார். அப்போதான் எனக்கு தயாளன் ஏன் இவ்வளவு பதட்டப்பட்டார் என்று தெரிந்தது. அவரை இம்சையிலிருந்து விடுவிக்க எண்ணி, தொலைபேசிகள் இருக்கின்ற மேஜையருகே சென்றேன். நான் அந்த மேஜையருகே சென்றபோது, சரியாக உள்(தொலை)பேசி அடிக்க ஆரம்பித்தது. எடுத்து, "ஹலோ?" என்றேன்.



மறுமுனையில் பேசியவர், தயாளனின் பாஸ். "ஹலோ தயாளனை உடனே வந்து என்னை பார்க்கச் சொல்லு." என்றார், வைத்துவிட்டார்.

நான் உடனே உரத்த குரலில், "தயாளன், கபீர் கால்ஸ் யூ" என்று சொல்லி, என்னுடைய இடத்திற்கு வந்துவிட்டேன். 'அப்பா - இன்று ஒரு நாளாவது உண்மையை உரைத்தோமே!' என்று மனதில் ஒரு திருப்தியும் வந்தது. நான் சொல்வதற்காகவே காத்திருந்தது போல தயாளன் அவசரம் அவசரமாக ஓடினார்.

வந்து உட்கார்ந்திருந்த இம்சை நபரும் ஒருவாறு நிலைமையுணர்ந்து இடத்தை விட்டு அகன்றார்.

பத்து நிமிடங்கள் கழித்து, அங்கே வேகமாக வந்தார் கபீர். "கௌதமன், தயாளன் எங்கே? அவரை என் ரூமுக்கு வரவேண்டும் என்று சொன்னேனே - அவரிடம் சொல்லவில்லையா?" என்று கேட்டார்.

நான் 'பெப்பேப்பே ' என்று விழித்தேன்.

அப்போதான் - உள்பேசியில் நிஜமாகவே ஒரு கால் வந்தது என்பதை தயாளன் கவனிக்கவில்லை என்று தெரிந்துகொண்டேன். வழக்கம்போல அவரை இம்சையிலிருந்து விடுவிக்க நான் சொன்ன பொய்தான் அது என்று நினைத்து, கபீர் ரூம் பக்கம் செல்லாமல் டிப்பார்ட்மெண்டுக்கு வெளியே ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது.

கபீரிடம், 'சொன்னேன் சார். அவர் வயிறு சரியில்லை. அர்ஜெண்டா டாய்லட் போய்விட்டு வந்துவிடுகிறேன் என்று சொன்னார் சார். இதோ வந்துவிடுவார் சார்!" என்றேன். பேசிக் கொண்டே வெளியே தூரத்தில் மரத்தடியில் நின்று கொண்டிருக்கும் தயாளனை கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தேன்.



என் பார்வை போன திக்கில் பார்த்த கபீர், மரத்தடியில் நின்று கொண்டிருக்கும் தயாளனைப் பார்த்ததும், என் பக்கம் திரும்பி, "டிப்பார்ட்மெண்டில் டாய்லட் இல்லையா? அவரு ஏன் மரத்தடிக்கெல்லாம் போயி அசிங்கம் செய்கிறார்?" என்று கேட்டு, சிரித்தவாறு சென்றுவிட்டார்!

அலேக் அனுபவங்கள் 22:: அறுவை சிகிச்சை நிபுணர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து எட்டாம் ஆண்டு. ஏப்ரல் மாதம். அலுவலக மருத்துவர், என்னைப் பரிசோதித்து, ஹெர்னியா உள்ளது; ஆரம்ப கட்டம். அறுவை சிகிச்சை செய்து கொள்வது நல்லது என்றார்.

நான் பல மருத்துவமனைகளையும், மருத்துவர்களையும் தீர யோசித்துப் பார்த்து, குரோம்பேட்டையில் வீட்டுக்கு அருகிலேயே உள்ள மருத்துவமனை ஒன்றில் அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம் என்று தீர்மானித்தேன்.

என்னுடைய அலுவலக நண்பர் எம். முரளி வேறொரு பரிந்துரை கூறினார். செலவுக்கு பயந்து, பெயர் தெரியா மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்காக அணுக வேண்டாம். அஜாக்கிரதையாக ஒரு சிறு பஞ்சு உள்ளே வைத்து

தைத்துவிட்டார்கள் என்றால், பெரும் ஆபத்து ஆகிவிடும்.

வயிறும் வயிற்றுக்குக் கீழும் அறுவை சிகிச்சை என்றால், நூறு சத விகிதம் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை அளித்து வருபவர் இருக்கிறார், அவரைப் போய்ப் பாருங்கள் என்றார் முரளி. முரளியின் மனைவியும் ஒரு டாக்டர். அவருடைய சிபாரிசுதான் இந்த டாக்டர்.

காலை பத்து மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட். நான் ஒன்பதே முக்காலுக்கு மருத்துவமனை சென்றேன். டாக்டர் ஒரு அவசர அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றார். கொஞ்சம் காத்திருங்கள் என்றனர். கொஞ்சம் இல்லை, நிறையவே காத்திருந்தேன்.

பதினொன்றரை மணி சுமாருக்கு டாக்டர் வந்தார். ஆஜானுபாகுவான உருவம். பரிசோதித்தார்.

"டிரிங் பண்ணுவியா?"

"இல்லை சார்."

"ஸ்மோக்?"

"இல்லை சார்."

"அப்புறம் எப்பிடி உனக்கு ஹெர்னியா வந்தது? வெயிட் தூக்குவியா?"

"ஆமாம் சார். குரோம்பேட்டையில் தண்ணீர் கஷ்டம் அடிக்கடி வரும். டிரம் டிரம்மாக தண்ணீர் ஒரு மாடி ஏற்றி கொண்டு போனது உண்டு. அடிக்கடி ஜலதோஷம் வரும், ஒரு நாளைக்கு நாற்பது ஐம்பது தும்மல் போடுவேன்."

பிறகு, ஹெர்னியா என்றால் என்ன, அறுவை சிகிச்சை மூலம் என்ன செய்வார்கள் என்று பொறுமையாக, கம்பீரமான குரலில் கூறி, படம் போட்டு விளக்கினார், டாக்டர்.

'நல்ல நாள் பார்த்து வந்து இங்கே அட்மிட் ஆகிவிடு. இரண்டு நாட்கள் ப்ரிபரேஷன் ட்ரீட்மெண்ட். பிறகு ஆப்பரேஷன். அதற்குப் பிறகு நான்கு நாட்களில் வீட்டிற்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள். பிறகு ஒரு வாரம் கழித்து வா. தையல் பிரித்து விடலாம்'

என்றார்.

நல்ல நாள் பார்த்து, அட்மிட் ஆனேன். ப்ரிபரேஷன் சிகிச்சை எல்லாம் இனிதே நடந்தது.

அறுவை சிகிட்சையன்று காலையில் ஒரு இளநீர் மட்டும்தான் சாப்பிடலாம் என்றார். வயிறு காலியாக இருக்கவேண்டும் என்றார்.

ஆப்பரேஷன் மேஜை. இதுவரை யாரும் என் உடம்பில் கத்தி வைத்தது இல்லை. மயக்க மருந்து சரியாக வேலை செய்யவில்லை என்றால் என்ன ஆகும் என்ற கவலை வேறு. சரியாக மயக்கம் வராமல், பாதி ஆப்பரேஷன் நடக்கும் பொழுது நினைவு வந்துவிட்டால் என்ன ஆகும் என்று வயிற்றில் பட்டாம்பூச்சிகள் வேறு பறந்து கொண்டிருந்தன.

டாக்டர் என் காதுக்கு அருகே வந்து "கௌதமன், உங்க வாயில சொத்த பல்லு இருக்கா?" என்று கேட்டார்.

யோசனை பண்ணிப் பார்த்தேன். ஏதோ ஒன்று இரண்டு தேறும் என்று தோன்றியது. "உம் ..... இருக்கு" என்றேன்.

"எவ்வளவு சொத்தைப் பல்லு? எண்ணிச் சொல்லு" என்றார்.

"ஒன்று .... இரண்டு .... அப்புறம் ...."

மேலே இருந்த விளக்குகள் எல்லாம் ஒரு சுழல் சுழன்றது.

மீண்டும் ஏதோ சொல்ல கண்ணைத் திறந்தால் ஒரே இருட்டு.

கைகளை ஆட்ட முடியவில்லை. யாரோ என் கையில் கட்டெறும்பை விட்டிருந்தார்கள் போலிருக்கு. கட்டெறும்பு கனமாக இருந்தது. அவ் என்று கையில் கடித்தது. அந்த கட்டெறும்பை ஒரேயடியாக நசுக்கி விடலாம் என்று இன்னொரு கையை அதன் அருகே கொண்டு சென்ற போது, என் கையை தடுத்து நிறுத்தியது என் மனைவியின் கை.

"ட்ரிப்ஸ் ஏற்றுகின்ற நீடிலை பிய்க்கக் கூடாது"

"ஆப்பரேஷன் முடிந்து விட்டதா?"

"ஆயிற்று. மாலையே ஆப்பரேஷன் ஓவர். ஆப்பரேஷன் தியேட்டரிலிருந்து உங்களை இங்கே கொண்டு வந்து படுக்க வைத்து, நான்கு மணி நேரம் ஆயிற்று"

கொஞ்சம் கூட வலியே தெரியவில்லை. அப்படியே வலித்தாலும், பொறுத்துக் கொள்ளக் கூடிய சில்லறை வலிதான்

டாக்டர் கூறிய படி எல்லாம் இனிது முடிந்தது. டிஸ்சார்ஜ் ஆகும் பொழுது, டாக்டர் கூறினார். "இப்போ இடது பக்கம் அறுவை சிகிச்சை செய்துள்ளேன். இன்னும் சில வருடங்களில் வலது பக்கமும் செய்யவேண்டி வரும். இந்த கம்ப்ளைண்ட் ஒரு பக்கத்தோடு நிற்காது என்றார். தயங்காமல் சிகிச்சைக்கு வாருங்கள்"

1999. மறுபடி, அதே மருத்துவமனை. அதே டாக்டர். அதே அனுபவங்கள். வலது பக்கமும் ஆப்பரேஷன் செய்து கொண்டு, வெற்றிகரமாக வீடு திரும்பினேன். இந்த தடவை தனியாளாக தைரியமாக போய் நானே அட்மிட் ஆகி, திரும்ப வரும் பொழுது டாக்சி பிடிக்க மட்டும் மனைவி உதவி செய்ய, டாக்சியில் வீடு

திரும்பினேன். ஆப்பரேஷன் முடிந்த இரண்டாவது நாளே யார் உதவியும் இன்றி நடந்தேன்.

இந்த முறை தையல் எதுவும் கிடையாது. தானே கரைந்து போகின்ற ஒரு வகை தையல்.

'இனிமேல் நிச்சயம் உனக்கு ஹெர்னியா தொந்தரவு வராது. நீங்க தைரியமாக வீட்டுக்கு செல்லலாம்' என்றார் அந்த டாக்டர்.

மருத்துவமனை: ஸ்ரீ ரமணா சர்ஜிகல் கிளினிக்.

டாக்டர்: 14 - 07 -2013 அன்று காலமான,

திரு என். ரங்கபாஷ்யம்.



தாங்க் யூ டாக்டர், ஃபார் தி நைஸ் ட்ரீட்மெண்ட்.

(இந்தக் கட்டுரையை அலேக் அனுபவங்கள் என்ற தலைப்பில் ஏன் சேர்த்தீர்கள் என்று ஒரு நண்பர் அலைபேசியில் அழைத்து வினவினார்.

முதல் அறுவை சிகிச்சைக்கான செலவு ரூபாய் பதினைந்தாயிரத்தையும், இரண்டாவது சிகிச்சைக்கான ரூபாய் ஐம்பதாயிரத்தையும், அசோக் லேலண்ட் (மேஜர் மெடிக்கல் பிளான் மூலமாக) முழுவதும் அளித்தார்கள். அசோக் லேலண்டில் மெடிக்கல் லீவு எடுத்து, அப்பொழுது பெற்ற அனுபவங்கள்தாம் இவை!)

அலேக் அனுபவங்கள் 23:: மாடு பிடித்த கதை!

வெகு பழங்காலத்தில், என் உடன் பணியாற்றிய நண்பர், அவருடைய மேலதிகாரி பற்றி, அவரின் விசித்திர பழக்கங்கள் பற்றி, என்னிடம் சில விவரங்களைப் பகிர்ந்து கொண்டார். மதிய உணவு நேர அரட்டை கச்சேரிகளில், மேலதிகாரிகளின் தலைகளை நிறைய உருட்டுவோம்.

பெயர்கள் ஒன்றும் குறிப்பிடாமல், சம்பவங்களை மட்டும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

நண்பரும், அதிகாரியும், ஒரு குறிப்பிட்ட லாரி வகை ஒன்றைப் பார்த்து, அதனுடைய கேபின் வடிவமைப்புப் பற்றி ஆராய்ந்து, சில அளவுகள் எடுப்பதற்காக, அண்ணா சாலையில் உள்ள, ஒரு டீலர் பாயிண்ட்டுக்குச் சென்றிருக்கின்றார்கள்.



டீலர், குறிப்பிட்ட அந்த (போட்டியாளர்) வண்டி, இரவு பதினொரு மணிக்குத்தான் அங்கு வரும் என்று கூறியிருக்கிறார்.

நண்பரும், மேலதிகாரியும் இரவு எட்டு மணிக்கே அங்கு சென்று விட்டதாலும், அதிக நேரம் காத்திருக்க வேண்டும் என்பதாலும், பக்கத்தில்

உள்ள உணவகம் சென்று, அங்கே இரவு உணவை முடித்துக் கொண்டு வந்து விடலாம் என்று சென்றிருக்கிறார்கள்.

இனி நண்பர் கூறியது, அப்படியே:

ஹோட்டலில் நுழைவதற்கு முன்பு, ஹோட்டல் வாசலில் எழுதியிருந்த மெனுவை, நன்கு, ஊன்றிப் படித்து, மனனம் செய்து கொண்டார் அதிகாரி. உள்ளே நுழைந்து, முதலில் ஓரிடத்தில் உட்கார்ந்து பிறகு அந்த இடம் வேண்டாம், சுத்தமாக இல்லை என்று வேறு ஒரு இடத்தில் போய் உட்கார்ந்தார், என்னையும் இழுத்துக் கொண்டு.

அதிகாரி: நீ என்ன சாப்பிடறே?

'எனக்கு நான்கு இட்லிகள் போதும்' என்றேன்.

அவர் சர்வரை அழைத்து, மள மள வென்று, செட் தோசை, சப்பாத்தி, ஆனியன் ரவா, தயிர் சாதம் என்று பெரிய மெனு கொடுத்து, இவருக்கு நாலு இட்லி என்று கூறினார். எல்லாவற்றையும் அவர் சாப்பிட்ட வேகம் அசாத்தியமாக இருந்தது. இதெல்லாம் முடிந்தவுடன், சர்வரிடம், ஒரு பால், ஒரு காபி என்றார்.



"எனக்கு எதுவும் வேண்டாம்." என்று நான் சொல்லிய பொழுது, 'இரண்டுமே எனக்குதான்' என்றார்.

"எதற்கு இரண்டும்?"

"பால் ஹெல்த்துக்காக,காபி தூக்கம் வராமல் இருக்க - வண்டி வந்து, அளவுகள் எடுத்து முடித்து, வீட்டுக்குப் போய்ச் சேரும் வரை தூக்கம் வராமல் இருக்கணுமே!"

"ஓஹோ? சரிதான்!"

அத்தோடு விட்டாரா? ஹோட்டலுக்கு வெளியே வந்ததும், அங்கே இருக்கின்ற கடையில், அரை டஜன் பச்சை வாழைப் பழம் வாங்கினார். சரி, இரவு வெகு நேரம் ஆகிவிட்டால், வயறு காயக்கூடாது என்று, பிறகு கடைகள் மூடிவிடுமே என்ற பயத்தில், முன்னேற்பாடாக வாங்குகிறார் போலிருக்கு என்று நினைத்துக் கொண்டேன்.



"நீ பழம் சாப்பிடுறியா?"

"வேண்டாம்! வேண்டாம்! நாந்தான் சொன்னேனே - இரவு உணவு நான் எப்பவுமே ரொம்ப சிம்பிளாதான் சாப்பிடுவேன்!"

அவர், கடைக்காரர் பழங்களைப் போட்டுக் கொடுத்த கேரி பாகிலிருந்து ஒவ்வொன்றாக பழத்தை எடுத்து, உரித்துச் சாப்பிட்டு, பழத்தின் தோலை, அதே கேரி பாகில் போட்டார். ஆறு பழங்களையும் சாப்பீட்டு முடித்து, பையில் ஆறு பழத்தின் தோல்களையும் பத்திரப் படுத்திக் கொண்டார். இன்னும் ஒரு மணி நேரம் கழித்து அதையும் சாப்பிட்டு விடுவாரோ என்று சந்தேகம் வந்தது.

"இரவு சாப்பாட்டிற்குப் பிறகு, எப்பவும் கொஞ்சம் வாக்கிங் போகணும். அதுதான் ரொம்ப நல்ல பழக்கம் என்று எங்க தாத்தா சொல்லியிருக்கார். வா என்னோடு!"

அவர் பின்னேயே சென்றேன். நேராக ஜெமினி மேம்பாலம் வரை சென்றோம்.

மேம்பாலத்தின் கீழே, சில மாடுகள் உட்கார்ந்து, அசை போட்டுக் கொண்டிருந்தன.



உட்கார்ந்திருந்த ஒரு மாட்டை அவர் சுற்றி வந்தார். மாடு அவரைப் பார்த்து கொஞ்சம் மிரண்டது போல இருந்தது. அதன் முகத்தின் அருகில் போய் நின்று கொண்டார். கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தார். பிறகு, மாட்டின் வால் பக்கம் வந்து, "ஹேய்" என்று லேசாக அதட்டினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. மாட்டிற்கும் ஒன்றும் புரிந்திருக்காது போலிருக்கு. அவரை இக்னோர் செய்து, அசை போடுவதில் கவனமாக இருந்தது.


அடுத்து அவர், தன் வலது கால் ஷூ வை தரையில் சத்தமாக உதைத்து, "ஹேய்" என்றார். மாடு, 'இது ஏதடா இந்த மனுஷன் நம்மை நிம்மதியாக உட்கார்ந்து அசை போட விட மாட்டான் போலிருக்கே' என்று நினைத்து, சிரமப்பட்டு கால்களை ஊன்றி, எழுந்தது. இருட்டில், அந்த மாட்டின் அடிப் பாகத்தை உன்னிப்பாக கவனித்த அதிகாரி, "ச்சே! காளை மாடு" என்று அலுத்துக் கொண்டு அடுத்த மாட்டை நோக்கி நகர்ந்தார்.

அதிகாரி, அப்புறம் சொன்னார், "பழத் தோலை, பசு மாடுகளுக்கு உண்ணக் கொடுத்தால், ரொம்ப புண்ணியம் என்று தாத்தா சொன்னார் .... "


அலேக் அனுபவங்கள் 24:: சினிமா தொடர்பு ... ...

என்னுடைய நண்பர் பி ராஜேந்திரன் என்பவர் பற்றி முன்பு ஒரு பதிவில் குறிப்பிட்டிருந்தேன்.

அவர் 'இண்டஸ்ட்ரியல் மேனேஜ்மெண்ட்' பகுதியில் வேலை பார்த்து வந்தார். அந்தக் காலத்தில் நங்கநல்லூர் பகுதியிலிருந்து வேலைக்கு வந்துகொண்டிருந்தார். அவரும் நானும் பலநாட்கள், சென்னை கடற்கரை நிலையத்திலிருந்து, அவர் இறங்கிச் செல்கின்ற பழவந்தாங்கல் இரயில் நிலையம் வரை பல விஷயங்களையும் பேசிச் செல்வோம்.



அவர் அப்பொழுது வசித்து வந்த நாற்பத்து இரண்டாவது தெரு (என்று நினைக்கின்றேன்) சார்பாக வருடா வருடம் டிசம்பர் முப்பத்தொன்றாம் தேதி இரவு, ஜனவரி ஒன்றாம்தேதி காலை வரை அந்தத் தெருவில் கலை நிகழ்ச்சிகள் நடை பெறும். அதற்காக அவர் பல நிகழ்ச்சிகளை திட்டமிடுவார். அந்த சமயம் அவருக்கு சிறிய நகைச்சுவை உரையாடல்கள், பாடல்கள் எழுதிக் கொடுத்தது உண்டு.



அவருக்கு, அப்பொழுது, ஒரு திரைப்படக் குழுவினரின் அறிமுகம் கிடைத்தது. படம் எடுப்பதில் ஐந்து லட்ச ரூபாய்க்குள் (அந்தக் காலத்தில்) ஒரு படத்தை எடுத்து, அதை விநியோகம் செய்தால் / விற்றால், நிறைய லாபம் சம்பாதித்துவிட முடியும் என்று அந்தக் குழுவினர் அப்பொழுது நம்பியிருந்தார்கள். இவர், அந்தக் குழுவினரின் இயக்குனரை எங்கேயோ சந்தித்து நண்பராகியிருந்தார். இவர், தனக்குத் தெரிந்த இண்டஸ்ட்ரியல் மேனேஜ்மெண்ட் யுக்திகளை (Critical path analysis, Resource scheduling, Planning, Scheduling, Controlling etc) அந்தப் படக் குழுவினருடன் பகிர்ந்து கொண்டு, அந்தக் குழுவின், சம்பளம் பெறாத ஆலோசகராக இருந்தார். அந்தக் குழுவினரோடு சென்று, நடிக நடிகையரை தேர்ந்தெடுத்து, அவர்களை படத்திற்காக புக் செய்து,

அட்வான்ஸ் கொடுத்து, கால் ஷீட் வாங்கி, பல முனைகளிலும் ஆர்வத்தோடு பங்கேற்று வந்தார்.



சில காட்சிகள் படமாக்கப் பட்டுவிட்டன. கதைச் சுருக்கம் தயார். கதாநாயகி - 'அந்த ஏழு நாட்கள்' படத்தில் அம்பிகாவின் தங்கையாக நடித்த மனோஹரி. (மனோஹரியை படத்திற்கு ஒப்பந்தம் செய்யச் சென்று வந்த கதையை அவர் விலாவாரியாகக் கூறினார். அதை இப்போது இங்கே பதியப் போவது இல்லை. பிறகு ஒரு பதிவில் பகிர்கின்றேன்) கதாநாயகன் இன்னும் முடிவாகவில்லை.

அவர் கூறிய கதைச் சுருக்கம்: ஒரு லேடீஸ் ஹாஸ்டல். அங்கே கதா நாயகி, தன் தோழியுடன் தங்கி, படித்து வருகின்றாள். கதாநாயகி எந்த வம்பு தும்புக்கும் போகாத சாது. தோழி அப்படியே ஆப்போசிட். ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று வாழ்கிறவள். தோழி விளையாட்டாக எழுதிய காதல் கடிதம், கதாநாயகன் கைக்குக் கிடைக்கின்றது. அவன் கடிதத்தை எழுதியவள் யார் என்று அறிய வரும்பொழுது, அந்த விலாசத்தில் இருக்கின்ற கதாநாயகியைப் பார்த்து, அவள்தான் கடிதம் எழுதியவள் என்று தவறாக நினைத்து, அவளைக் காதலிக்கத் துவங்குகிறான். இது கதையில் வருகின்ற முடிச்சு. பிறகு என்ன ஆகிறது, எங்கே போகிறது, எப்படி முடி(க்)கிறது என்று என்னைக் கேட்டார். நான் இரண்டு மூன்று கண்டினூயிட்டி நூல் விட்டேன். அது அவருக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதாகத் தெரியவில்லை.



"நீ வந்து தி நகர் ப்ரிவியூ தியேட்டரில் இதுவரை எடுத்துள்ள படத்தைப் பார். அப்போ உனக்கு ஐடியா ஏதாவது வரும் என்றார். தி நகர் பனகல் பார்க் பக்கத்தில் இருந்த பிரிவியூ தியேட்டருக்கு ஒரு திங்கட்கிழமை, என்னையும் அழைத்துச் சென்றார்.



படம் மொத்தம் ஏழு நிமிடங்களே திரையில் ஓடியது. ஏதோ ஒரு மலைச் சாரல். ஒற்றையடிப் பாதை, ஒரு பெண். (மனோஹரி இல்லை) ஒரு பிட் பேப்பரைப் பறக்க விட்டாள். ஒரு வயதான அம்மாள் தலைவிரி கோலமாக தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். மீண்டும் மலைச் சாரல். ஆடுகள், மாடுகள் மேய்ந்தன. கடற்கரை. சூரியோதயம். திடீரென்று ஒரு மரத்திலிருந்து பறவைகள் பறந்தன. அவ்வளவுதான். சவுண்ட் ரெகார்டிங் எதுவும் இல்லை. ப்ரொஜெக்டர் ஓடிய சப்தம் மட்டும் கேட்டது. படக் குழுவினரோடு இந்த மாஸ்டர் பீஸைப் பார்த்துவிட்டு, எல்லோருமாக மூன்று கார்களில் ஏறிக் கொண்டு, நங்கநல்லூரில் உள்ள நண்பர் ராஜேந்திரன் வீட்டுக்குச் சென்றோம்.



படத்தின் டைரக்டர் (பார்ப்பதற்கு இயக்குனர் மகேந்திரன் சாயலில், அவருடைய ஒன்றுவிட்ட, பெரிய சகோதரன் போல இருந்தார்) உதவி இயக்குனர்கள், பாடலாசிரியர், இசையமைப்பாளர் என்று ஒரு ஆறேழு பேர்கள், ஸ்டோரி டிஸ்கஷன் என்று வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். குழுவில் ஒருவர் மூன்று சீட்டுக் கட்டுகளை எடுத்து, ஜமக்காளத்திற்கு நடுவே போட்டார்.

அவ்வளவுதான். ரம்மியாட்டம் ஆரம்பமாகியது. ஆட்டத்துக்கு நடுவே யாரோ ஒருவர்,

இசையமைப்பாளரைப் பார்த்து, அந்த டைட்டில் சாங் பிட்டை சொல்லுங்க என்றார். இசையமைப்பாளர், "தானனனா ..... தனதனனானா .... " என்றார். கவிஞர் அதற்கு, "கற்பனையோ .... கவியுள்ளமோ ... " என்றார். சுற்றியிருந்தவர்கள் "ஆஹா --- ஆஹா " என்றார்கள். திருமதி ராஜேந்திரன் தயாரித்த பஜ்ஜிகள் எல்லோருக்கும் நடுவே ஒரு பேசினில் கொண்டுவந்து வைக்கப் பட்டது. குழுவினர் ஆளுக்கு நான்கைந்து பஜ்ஜிகளை கபளீகரம் செய்தனர். பிறகு ஆளுக்கு ஒரு டம்ப்ளரில் காபி வழங்கப் பட்டது. காபி குடித்த சூட்டுடன் சூடாக ஒருவர் ரம்மி டிக்ளேர் செய்தார். டைரக்டர் அவருக்கு பத்து ரூபாய் கொடுத்தார். மற்றவர்கள், "கணக்குல எழுதிக்க .." என்றார்கள். சீட்டுக் கட்டை எடுத்து அடுத்தவர் கலைக்கத் துவங்கினார்.





இயக்குனர், தொப்பி + கூலிங் க்ளாஸ் அணிந்துகொண்டு, சிறிய குழந்தை ஒன்றை நடந்து வரும்படி கூறுகின்ற பாவத்தில் சில ஸ்டில் படங்கள் என்னுடைய பார்வைக்கு காட்டினார்கள். ஒரு (ப்ரேக்) வாய்ப்புக் கிடைத்தால், அவர் அப்படியே அசத்திவிடுவார் என்று கூறினார்கள் உதவி இயக்குனர்கள்.

நான் வீட்டுக்குக் கிளம்பினேன். ராஜேந்திரன் தன்னுடைய ஸ்கூட்டரில் என்னை பழவந்தாங்கல் இரயில் நிலையத்திற்குக் கொண்டுவந்து இறக்கிவிட்டார்.

"ஐடியா ஏதாவது வந்ததாப்பா?" என்று கேட்டார்.

"உம்ம்ம் .... வந்துவிட்டது."

"என்ன ஐடியா?"

"இந்தக் குழுவிலிருந்து, நீங்களும் நானும் எவ்வளவு விலக முடியுமோ அவ்வளவு விலகி இருப்பது நல்லது என்ற ஐடியா."

அலேக் அனுபவங்கள் 25:: எதிர்பாராத விடுமுறை தினம்.

திங்கட்கிழமைகள் அசோக் லேலண்டு (எண்ணூர்) தொழிற்சாலைக்கு வாராந்திர விடுமுறை.

சாதாரணமாக, ஒவ்வொரு திங்கட்கிழமையும், மற்ற மக்கள் எல்லோரும் பள்ளிக்கூடம், கல்லூரி, அலுவலகம் என்று சென்றுவிடுவார்கள். நான், வெளியூரில் இருக்கின்ற அப்பா, சகோதரர்கள் எல்லோருக்கும் கடிதங்கள் எழுத, இந்த நாளைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தேன்.
புரசவாக்கத்திலிருந்து வேப்பேரி போஸ்ட் ஆபீஸ் வரை நடந்து சென்று, கார்டு, கவர், இன்லண்டு லெட்டர் எல்லாம் வாங்கி வந்து, கை ஓயும் வரை கடிதங்கள் எழுதி, மாலை ராக்ஸி தியேட்டருக்கு எதிரே ஒரு மொபைல் போஸ்ட் வாகனம் வரும், அதிலே போஸ்ட் செய்துவிடுவேன்.



அப்பா நாகையிலும், புரசைவாக்கத்தில் என்னுடன் இருந்த அண்ணன் தவிர மற்றவர்கள் சோலையார், அருவங்காடு, செங்கிப்பட்டி என்று வெவ்வேறு ஊர்களில் இருந்தார்கள். அவரவர்களுக்குத் தகுந்தவாறு கடிதங்கள் எழுதுவேன். எல்லாம் எழுதி மேலும் நேரம் இருந்தால், குமுதம் 'ஆசிரியருக்கு கடிதம்' எழுதுவேன். ஏதோ ஒன்றிரண்டு கடிதங்கள் அந்தக் காலத்தில் குமுதத்தில் பிரசுரம் ஆயின!

அது ஆண்டு 1972. டிசம்பர் மாதம். திங்கட்கிழமை. அசோக் லேலண்டுக்கு வாராந்திர விடுமுறைநாள். அசோக் லேலண்டில் அப்ரசண்டியாக சேர்ந்து ஒரு வருடம் ஆகியிருந்தது. அன்று கிறிஸ்துமஸ் நாளும் கூட. ஒவ்வொரு திங்கட்கிழமையும், என் பேட்சில் என்னுடன் இஞ்சினீரிங் அப்ரண்டிஸ் ஆக சேர்ந்த நண்பன் ராகவேந்திரன் பெரம்பூரிலிருந்து, பஸ் பிடித்து, என் வீட்டிற்கு வந்துவிடுவான்.

இருவரும் சேர்ந்து ஊர் சுற்றக் கிளம்பிவிடுவோம். அன்று அவ்வாறு எங்கே போகலாம் என்று ஆய்வு செய்தோம். நண்பன், ஜான் வெய்ன் என்னும் ஆங்கில(ப் பட) நடிகரின் விசிறி. எனக்கு ஆங்கிலப் படங்கள் அப்போ (இப்போ கூட) அவ்வளவாகப் புரியாது. காசு சுண்டிப் போட்டுப் பார்த்ததில் அவன் ஜெயித்தான். அவன் சொல்லுகின்ற படம் என்று தீர்மானமாயிற்று.

அவன் செலெக்ட் செய்தது, மவுண்ட் ரோடில் ஜெமினி பாலம் அருகே ஒரு தியேட்டரில் ஓடிக் கொண்டிருந்த RIO LOBO என்று ஒரு படம். ஜான் வெயின் நடித்ததாம். போய்ப் பார்த்தோம். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் 'ஆஹா ஓஹோ - இந்த இடத்துல வாத்தியார் நடிப்பைப் பாரு...' என்று

சொல்லிக் கொண்டே படத்தை இரசித்துப் பார்த்தான்.



படம் முடிந்து வெளியே வந்து, ஜெமினி பாலம் அருகே ஓர் ஓட்டலில், டிபன் சாப்பிட சென்று அமர்ந்தோம். ரேடியோவில் எம் எஸ் கோபாலகிருஷ்ணன் + சுபபந்துவராளி இசைத்தார். திடுக்கிட்டு,என்ன விஷயம் என்று உற்றுக் கேட்டோம்.

"சென்னை மாநிலத்தின் முன்னாள் முதல்வராகவும், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகவும் இருந்த சி இராஜகோபாலச்சாரியார் இன்று காலமானார்' என்பதை வருத்தத்துடன்

தெரிவித்துக் கொள்கிறோம்"

"ஹய்யா நாளைக்கு லீவு" என்று சந்தோஷப்பட்டான் நண்பன். எனக்கும் அப்படி ஒரு நொடி தோன்றிய பொழுதும், அவனைக் கண்டித்து, 'சேச்சே அப்படி எல்லாம் பேசக் கூடாது' என்று கூறினேன்.

மறுநாள், ஒரு எதிர்பார்ப்புடன், வேலைக்கு சென்றோம். ஏழரை மணிக்கு எப்பவும்போல, வேலை நேரம் ஆரம்பிக்கின்றதைக் குறிக்கும் வகையில், ஃபாக்டரி சைரன் ஒலித்தது. அப்பொழுது எனக்கு டூல் ரூம் பகுதியில் ட்ரைனிங். தொழிலாளர்கள் ஆங்காங்கே சிறு சிறு கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். சர்க்குலர் ஏதாவது வருகின்றதா என்று நோட்டிஸ் போர்டு பக்கம் அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தோம். ஒவ்வொருவரும் விடுமுறை குறித்து ஆளுக்கொரு யூகம் செய்து, நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டு இருந்தோம்.

எட்டே கால் மணி சுமாருக்கு லாங் சைரன். லாங் சைரன் ஒலித்தால் - 'வீட்டுக்கு பெல்' அடித்தாயிற்று என்று அர்த்தம். அரக்கப் பரக்க எல்லோரும் மெயின்

கேட் வழியாக பஸ் ஸ்டாண்ட், இரயிவே ஸ்டேஷன் பக்கமாக ஓடினோம்.

ராஜாஜி ஹால் பக்கம் சென்று யாராவது ஒரு (இறந்த) தலைவரையாவது பார்க்கவேண்டும் என்று அவ்வப்பொழுது எனக்குத் தோன்றும். நண்பன் ராகவேந்திரன் என்னுடன் வருகிறேன் என்று கூறியதால், நாங்கள் இருவரும் எண்ணூரிலிருந்து பஸ் பிடித்து ராஜாஜி ஹால் சென்றோம். ஏறக் குறைய ஒருமணி நேரம் கியூவில் நின்று, மறைந்த இராஜாஜி அவர்களின் பாதங்களை மிக அருகே சென்று பார்த்து, வணங்கி வந்தோம். கால் கட்டை விரல்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டிப் போடப்பட்ட அந்த வாட்ட சாட்டமான கால்கள் இன்றும் ஞாபகத்தில் உள்ளன.

அலேக் அனுபவங்கள் 26 - விஸ்வநாதம்.

அசோக் லேலண்டில் நிறைய விஸ்வநாதன்கள் உண்டு.

நான் இப்போ குறிப்பிடப்போவது என்னுடன் அப்ரண்டிஸ் ஆகச் சேர்ந்த ஜி விஸ்வநாதம் என்பவர் பற்றி.

நண்பர் திருப்பதி காலேஜில் படித்தவர்.

அப்ரண்டிஸ் ஆகச் சேர்ந்த முதல் நாளே ட்ரைனிங் சென்டரில் காத்திருந்த கொஞ்ச நேரத்தில், பயிற்சி நிலைய வகுப்பில், சிகரெட் பற்றவைத்து, இழுத்து, பாட்ரிக்கைப் பதற வைத்தவர்.

சேர்ந்த புதிதில் அவருக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது. மாம்பலம் ரங்கநாதன் தெருவிற்குப் பக்கத்தில் சரவணா மேன்சன் என்ற இடத்தில்,

பாச்சிலர் குடியிருப்பு ஒன்றில் நண்பர்களோடு தங்கி இருந்தார்.

அறை நண்பர்கள் பல வேறுபட்ட அலுவலகங்களில் பணி புரிபவர்கள். விஸ்வநாதம்தான் எனக்கு ஏ எம் ஐ இ படிப்புக்கு எங்கே, எப்படி அப்ளை செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தவர். காலையில் அலுவலகம் வரும்பொழுது, அவர் ரயிலில் கோட்டை நிலையம் வந்து, அங்கிருந்து ஒரு ஐம்பத்தாறு சி (சிறப்புப்) பேருந்து (அசோக் லேலண்டுக்கு ஆறு ஐம்பத்தைந்துக்கு ஹை கோர்ட் ஸ்டாண்டிலிருந்து கிளம்பி வரும். பெரும்பாலும் அதில்தான் அவர் எண்ணூர் அ லே வரை வருவார்.

நான் சில சமயங்களில் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ரயில் தாமதமானால் அல்லது ரயிலை பிடிக்க நேரம் இல்லை என்றால், கோட்டை ஸ்டேஷனுக்கு வந்து, இந்த சிறப்புப் பேருந்தை பிடித்து செல்லுவேன். அந்தப் பேருந்தில் வழக்கமான பயணிகள் என்று பத்துப் பதினைந்து தொழிலாளத் தோழர்கள் உண்டு. அவர்களில் சிலர் எல்லோரிடமும் மொத்தமாக பயணக் கட்டணம் வசூல் செய்து, கண்டக்டரிடம் கொடுத்து, மொத்தமாக ஐம்பது அறுபது டிக்கெட்டுகள் வாங்கி, காசு கொடுத்த ஒவ்வொருவரிடமும் டிக்கெட்

கொடுப்பார்கள். பயணத்தை நடுவில் நிறுத்தி பயணச் சீட்டு கொடுக்கின்ற நேரத்தை மிச்சப்படுத்தி, சீக்கிரமாக சென்று காண்டீனில் காலைச் சிற்றுண்டி சாப்பிடவேண்டும் என்பதற்காக இந்த ஐடியா.



அப்போ எல்லாம் நண்பர் விஸ்வநாதம் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டுதான் பல தடவைகள் அந்தப் பேருந்தில் பயணித்திருக்கின்றேன். முதல் தடவை அவருடன் பயணித்தபொழுது, அவர் என்னிடம், "போகாதே, எறக்கேறு அவ்வளவுதான் " என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் தொழிலாளர் ஒருவரைச் சுட்டிக்காட்டி, (ஆங்கிலத்தில்) 'அவர் அப்படித்தான் கூறுவார் - நீ வேணா பாரு' என்றார்.

நான் இவர் சுட்டிக் காட்டியவரைப் பார்த்துக்கொண்டே வந்தேன். வண்டி ஐ ஓ பி ஸ்டாப்பிங் வந்ததும் நின்றது. வண்டி எண் ஐம்பத்தாறு சி என்று பார்த்த கூட்டம் ஆவலோடு முண்டியடித்து ஓடி வந்தது. அப்போ அந்தத் தொழிலாளத் தோழர், "அப்பா இது ஸ்பெஷல் பஸ். திருவொற்றியூர் போகாது" என்றார். பிறகு சுருக்கமாக, சத்தமாக, 'போகாது, போகாது' என்று மட்டும் கூறி வந்தார்.

விஸ்வநாதம், "யு ஸீ - ஐ டோல்ட் யு!" என்றார். ஓஹோ இதைத்தான் இவர் 'போகாதே' என்று புரிந்து கொண்டுவிட்டார் போலிருக்கு' என்று தெரிந்துகொண்டேன்.

பிறகு சில நிறுத்தங்களில் அசோக் லேலண்டு ஆட்கள் இந்த பஸ்ஸில் ஏற வரும்பொழுது, படிக்கட்டுகளில் நின்று கொண்டிருப்பவர்களிடம் 'இறங்கி ஏறு, இறங்கி ஏறு' என்று வேண்டுகோள் விடுப்பார்கள். படிக்கட்டுப் பயணிகள் இறங்கி நிறுத்தத்தில் காத்திருந்தவர்கள் உள்ளே அடைந்துகொண்டவுடன், படிக்கட்டுப் பயணிகள் மீண்டும் தொத்திக்கொள்ள, பஸ் தன் பயணத்தை

மீண்டும் தொடரும். இதுதான் அவர் சொன்ன எறக்கேறு என்று தெரிந்துகொண்டேன்.

அவர் அவருடைய ரூம் மேட் பற்றி ஒரு சுவையான சம்பவம் சொன்னார்.

அது என்ன என்று அடுத்த பதிவில் பார்ப்போம்.

அலேக் அனுபவங்கள் 27 - விஸ்வநாதம் (தொடர்ச்சி)

விஸ்வநாதம் என்னிடம் ஒரு நாள் கேட்டார்:

தமிழில் 'நல்லார்க்கு' என்றால் என்ன அர்த்தம்?

ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சொன்னேன்.

'என்னுடைய அறை நண்பன் ஒரு பைத்தியக்காரன்' என்றார்.

ஏன்?



விஸ்வநாதம் கூறியது:

நேற்று ரங்கநாதன் தெரு ஜவுளிக்கடை ஒன்றில், ஒரு போர்வை வாங்கினேன்.

இரவு போர்த்திக் கொள்ள அதை பையிலிருந்து எடுத்தேன். அதைக் கண்ட நண்பன். "நல்லார்க்கு" என்றான். 'அப்படி என்றால் என்ன?' என்று கேட்டேன். அவனும் நீ சொன்ன அர்த்தம்தான் சொன்னான். ஆனால் மேற்கொண்டு, நாம் வாங்கிய பொருளை யாராவது பார்த்து, நல்லா இருக்கு என்று சொன்னால், அதை அவரிடம் கொடுத்து விட வேண்டும்' என்றான்.

'காசுக்கா?' என்று கேட்டேன். 'இல்லை - பைசா

எல்லாம் கேட்கக்கூடாது; ஓசிக்குதான் கொடுக்கவேண்டும்' என்றான்.

எனக்கு இந்த லாஜிக் புரியவில்லை. டெஸ்ட் செய்து பார்ப்போம் என்று நினைத்து அவனிடம், 'உன்னுடைய பைலட் பேனா நன்றாக இருக்கிறது' என்று சொன்னேன். அவன் உடனே ' ஆமாம் சூப்பர் பேனா. என்னுடைய அலுவலக நண்பன் வாங்கினான். நான் ஆசைப் பட்டேன் என்று தெரிந்ததும் எனக்கு கிப்ட் பண்ணிவிட்டான்' என்றான்.

'நீ இந்த மாதம் ஏதாவது புதிதாக வாங்கினாயா?' என்று கேட்டேன்.

'ஒன்றும் வாங்கவில்லை' என்றான்.

மீண்டும் போர்வை பற்றி பேச்சு வந்தது. நான் அவனிடம், இந்தக் கலர், இந்த மெடீரியல் நன்றாக இருக்கிறது, எனக்குப் பிடித்திருக்கிறது என்றுதான் நான் வாங்கினேன். எந்தக் கடையில் வாங்கியது என்றும் சொல்கின்றேன், இதே போல அங்கே நிறையப் போர்வைகள் உள்ளன. நீ அங்கே போய் வாங்கிக் கொள்ளலாமே' என்றேன்.

அவன் கோபமாக, 'அது எனக்குத் தெரியாதா? இதை

நீ எனக்குக் கொடுத்துவிட்டு, நாளைக்குப் போய் வேறு வாங்கிக் கொள்' என்றான்.

எனக்கு அதில் உடன்பாடு இல்லை. 'சரி, நான் பைசா தருகின்றேன், நீ போய் வாங்கிக்கொள்' என்றேன். உடனே அந்த நண்பன் ருத்ரதாண்டவம் ஆடிவிட்டான். நீ எல்லாம் ஆந்தராவிலிருந்து வந்தவன். எங்கள் தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள் உனக்குத் தெரியவில்லை. நீ ஒரு சரியான கஞ்சூஸ், கருமி' என்று திட்டிவிட்டு (நைட் ஷிப்ட்) வேலைக்குக் கிளம்பி சென்று விட்டான்.

**** **** ****

எனக்கும் சென்னை வந்த புதிதில் இந்த மாதிரி அனுபவங்கள் ஒன்றிரண்டு நடந்தன. எப்பொழுதும் யாராவது புதியதாக எதையாவது வாங்கி என்னிடம் காட்டினால், 'நல்லாயிருக்கு' என்று கூறுவேன். அப்படி எதேச்சையாகக் கூறிய ஓரிரண்டு சந்தர்ப்பங்களில், அதை அவர் எனக்குக் கொடுத்துவிட அதை வாங்கிக்கொள்ள மறுப்பது பெரும்பாடாக ஆன சந்தர்ப்பங்கள் உண்டு. பிறகு கொஞ்சம் மாற்றி, 'ஆஹா இது உங்களுக்கு மிகவும் சரியான உடை, நல்ல செலெக்ஷன் என்றெல்லாம் கூறி, 'நல்லா இருக்கு' என்று கூறுவதைத் தவிர்க்க

ஆரம்பித்தேன். நான் வாங்கிய பொருட்களை யார் 'நல்லா இருக்கு' என்று கூறினாலும், பதிலுக்கு 'நன்றி' மட்டுமே கூறுவேன்!

அன்று மாலை நண்பன் வந்த பிறகு என்ன நடந்தது என்று விஸ்வநாதமிடம் பிறகு விசாரிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன், மறந்துபோய் விட்டது!

=============================

அப்ரண்டிஸ் ஆக இருந்தபொழுது, இதே விஸ்வநாதம், அவருடைய பள்ளிக்கூட நாட்களைப் பற்றி சுவையாக பல தகவல்கள் தெரிவித்தது உண்டு. அவருடைய சிறிய தங்கைகள் எப்படி மணலில் வீடு கட்டி விளையாடுவார்கள், பார்த்துக் கொண்டே இருந்த இவர் எப்படி ஓடிப் போய் அவர்கள் கட்டி விளையாடும் கோபுர வீடுகளைக் காலால் உதைத்து சிதைத்து, அவர்கள் கையில் சிக்காமல் ஓடிவிடுவார் என்பதை எல்லாம் ஒருநாள் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது, அவருடைய சிறிய தங்கைகளின் பெயர் என்ன என்று சும்மா கேட்டு வைத்திருந்தேன்.

பிறகு பல வருடங்கள் எங்களுக்குள் அதிகத் தொடர்பு இல்லாமல் இருந்தது.

நாங்கள் இருவரும் கிட்டத் தட்ட பத்து வருடங்கள் கம்பெனியில் குப்பை கொட்டிய பிறகு, ஒருநாள் மின்சார ரயிலில் கடற்கரை நிலையத்திலிருந்து அவர் கோடம்பாக்கம் ஸ்டேஷனுக்கும் நான் குரோம்பேட்டை ஸ்டேஷனுக்கும் பயணித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர் அடுத்த வாரம் லீவில் செல்லப் போவதாகத் தெரிவித்தார்.

'எதற்கு?' என்று கேட்டேன்.

'தங்கைக்குக் கல்யாணம்' என்றார்.

'நான் உடனே அவருடைய இரண்டு தங்கைகளின் பெயரையும் கூறி, இதில் யாருக்குக் கல்யாணம்?' என்று கேட்டேன். (இப்போவும் பெயர்கள் ஞாபகம் உள்ளன. இங்கே குறிப்பிடவில்லை) அவர் அப்படியே ஷாக் ஆகிவிட்டார்.

'ஹவ் டூ யு நோ தி நேம்ஸ் ஆஃப் மை சிஸ்டர்ஸ்?' என்று கேட்டார் ஆச்சரியமடைந்து!

' யு ஒன்லி டோல்ட் மி தெயர் நேம்ஸ் - டென் இயர்ஸ் பேக்' என்றேன்.



அவரால் நம்பவே முடியவில்லை. கோடம்பாக்கம் ஸ்டேஷனில் இறங்க வேண்டியவர், ஸ்டேஷன் வந்த போது, அதை கவனியாமல், ஸ்டேஷனைத் தவற விட்டுவிட்டு, மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கிச் சென்றார்.

அலேக் அனுபவங்கள் 28 :: பி டி சி டெப்போவில்

(குறிப்பு: இது ஒரு டெக்னிகல் பதிவு கிடையாது. சில விஷயங்கள் / சொற்கள் புரியவில்லை என்றால் அவற்றை பொருள் விளங்கா உருண்டையாக முழுங்கிவிட்டுப் படியுங்கள். நான் சொல்ல வருவது ஒரு நான் - டெக்னிகல் மேட்டர்தான்!)

ஒரு பஸ் நூற்று எழுபத்தாறு இஞ்சு சக்கர அடிப்படை அளவு (அதாவது 176 inch wheelbase!!) கேரளா டிரான்ஸ்போர்ட் கேட்டிருந்தது என்று ஞாபகம். சாசிஸ் ஃபிரேம் டிரில்லிங் படம் வரைய நானும் என்னுடைய வரைஞர் (டிராப்ட்ஸ்மேன்) மிகவும் முனைந்து வேலை செய்யவேண்டி இருந்தது.




சாசிஸ் பிரேமில் காற்றுத் தடைக்கான (ஏர் பிரேக் அமைப்புக்கு வேண்டிய சமாச்சாரம்) காற்று உருளைகள் எங்கே பொருத்துவது என்று ஒரு பிரச்னை வந்தது.

பஸ்ஸில் பயணிகள் ஏற, இறங்க இடது புறம் வழிகள் வேண்டும். அந்தப் பாதைகளுக்கு இடையே மூன்று காற்று உருளைகள் பொருத்தப்பட வேண்டும். வலது புறம் டீசல் டாங்கு. எவ்வளவு முட்டி மோதிப் பார்த்தாலும், மூன்று ஏர் சிலிண்டர்கள் (அதாங்க காற்று உருளைகள் - தமிழ் வாழ்க) அமைப்பது மிகவும் கடினமான விஷயமாகப் பட்டது.

அப்போ ஒரு சர்விஸ் இஞ்சினியர், (தமிழில் சேவைப் பொறியாளர்) பல்லவன் டிரான்ஸ்போர்ட்

திருவொற்றியூர் டிப்போவில் ஒரு இருநூற்று மூன்று இன்ச் வீல் பேஸ் வண்டி - டியுவல் ப்ரேக் லைன் வண்டி இருக்கின்றது என்றும், அதில் காற்று உருளைகள் எங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது என்றும் பார்க்கலாம் என்று கூறினார். அதிலிருந்து இருபத்தேழு இஞ்சு கூட்டல் கழித்தல் விவகாரம் செய்துகொள்ளலாம் என்று எங்களுக்கு ஒரு ஐடியா வந்தது.

உடனே நானும் என் உதவியாளரும் ஒரு இன்ச் டேப் எடுத்துக் கொண்டு, திருவொற்றியூர் பல்லவன் டிப்போவிற்கு விரைந்தோம். அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. (எங்களுக்குத் திங்கக் கிழமைகள்தான் வாராந்திர விடுமுறை) திருவொற்றியூர் பணிமனையில் அன்று அதிக ஆட்கள் இல்லை. ஒரு ஜூனியர் எஞ்சினியர் மட்டும் டிப்போ பணிகள் மேற்பார்வை பார்த்துக்கொண்டு இருந்தார்.



அவரிடம் நாங்கள் வந்த விவரம் கூறியதும், ரொம்ப ரொம்ப ரொம்ப தயங்கினார். "சார் டிப்போ மேனேஜர்தான் வண்டிகளைப் பார்க்க அனுமதி வழங்கலாம். என் அளவில் நான் ஒன்றும் செய்யமுடியாது" என்றார்.

"நாங்க ஒன்றுமே செய்யமாட்டோம். சும்மா பார்த்து, சில அளவுகளை, நாங்கள் கொண்டுவந்திருக்கும் பேப்பரில் எழுதிக்கொண்டு செல்வோம். அவ்வளவுதான்" என்று அவரிடம் கூறினேன்.

"இல்லை சார். நாங்க வண்டியில் உங்களிடமிருந்து வாங்கிய பிறகு சில மாற்றங்கள் செய்திருப்போம். அவற்றை நீங்கள் பார்த்தால், வண்டியில் சர்விஸ் கிளைம் செய்வதில் பிரச்னைகள் தோன்றலாம்.

தயவுசெய்து என்னை வம்பில் மாட்டிவிடாதீர்கள்! இன்று போய்விட்டு, அப்புறம் மேனேஜர் இருக்கும்பொழுது வாருங்கள்."

என்ன சொன்னாலும் மசியவில்லை அவர். திரும்பத் திரும்ப கீறல் விழுந்த ரெக்கார்ட் போல, அதே பல்லவி.

அது அலைபேசி, வலைபேசி என்ற சமாச்சாரங்கள் தோன்றியிராத காலம். திடீர் என்று ஒரு மின்னல் வெட்டு ஐடியா வந்தது. "சார் உங்க மேனேஜர் வீட்டுத் தொலைபேசி எண் கொடுங்கள். நான் அவரிடம் பேசி அனுமதி வாங்குகின்றேன்" என்றேன்.

டிப்போ மேனேஜர் வீட்டு தொலைபேசி என்னை ஒரு தாளில் எழுதிக் கொடுத்தார்.

ஜே இ யின் மேஜையில் இருந்த தொலைபேசியை எடுத்து, அவர் கொடுத்த எண்ணைப் பார்த்தபடி, மிகவும் ஜாக்கிரதையாக ஓர் எண்ணை மட்டும் மாற்றி (அதாவது இரண்டு மூன்று என்று வந்த இடத்தில், மூன்று இரண்டு என்று மாற்றி) டயல் செய்தேன்.

மறுபக்கம் எடுத்தவர், நான் பேச ஆரம்பித்தவுடனேயே 'சாரி ராங் நம்பர்' என்று கூறி வைத்துவிட்டார். ஆனால் நான் அந்தப்பக்கம் டிப்போ மேனேஜரிடம் பேசுவது போல பொறுமையாக நான் யார், எங்கிருந்து வருகிறேன், வண்டியில் எந்த விஷயங்களை அளவு எடுத்துக் கொள்ளப்போகின்றேன் என்பதை விளக்கினேன்.

"ஆமாம் சார், ஆமாம் சார். அது மட்டும்தான்."

"இல்லை சார் சேச்சே, அதேதான் உங்கள் ஜே இ யும் சொன்னார். அதுபற்றி எல்லாம் எனக்கு அக்கறை இல்லை. அப்படி ஏதேனும் மாற்றங்கள் என் கண்களில் பட்டால் நான் கண்களை மூடிக் கொள்கின்றேன். எனக்கு வேண்டியதெல்லாம் ஏர் சிலிண்டர் லொகேஷன். அவ்வளவுதான்."

"இதோ இங்கேதான் இருக்கிறார் ஜே இ - பேசறீங்களா? - ஓ கே நானே சொல்லிடறேன் சார். தாங் யு."

போனை வைத்துவிட்டேன்.

ஜே இ க்கு பரம சந்தோஷம். அவர் கிட்டே சொல்லிட்டீங்க இல்லே. அது போதும். இப்போ நீங்க

அளவுகள் எடுத்துக்குங்க. வண்டியை பிட்டில் நிறுத்தச் சொல்கின்றேன்.

எங்களுக்கும் சந்தோஷம். அளவுகள் எல்லாம் எடுத்து, குறித்துக்கொண்டு கிளம்பினோம்.

அப்புறம் அந்த ஜே இ யும், டிப்போ மேனேஜரும் இந்த விவகாரம் குறித்து ஏதேனும் பேசியிருப்பார்களா என்ற சந்தேகம் எனக்கு இன்றும் இருக்கின்றது!

அலேக் அனுபவங்கள் 29 :: முதன் முதலில் வடிவமைத்த....

லேலண்டில் நான் முதன் முதலில் வடிவமைத்த பொருள் என்ன தெரியுமா?

லேலண்டு பஸ்ஸில் நீங்கள் நுழைந்து பார்த்தால், ஓட்டுனர் கைகளில் பிடித்திருக்கும் ஸ்டீரிங் வீலைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஸ்டீரிங் வீலின் நடுவில், ஒரு பிளாஸ்டிக் கவர் இருக்கும். அந்த வட்ட வடிவ நீல நிற பிளாஸ்டிக் கவரின் மத்தியில் L என்கிற ஆங்கில எழுத்து ஒரு லோகோ அமைப்போடு இருக்கும்.



இதுதான் நான் முதன் முதலில் வடிவமைத்த சமாச்சாரம்.

அந்த கவருக்கு Steering Wheel Centre Motif என்று பெயர் வைத்து, அதற்கு F1130660 என்று ஒரு அடையாள எண் கொடுத்து அதாவது பெற்றெடுத்து, பெயர் கொடுத்து ஆளாக்கியவன் நானே!

அதற்கு முன்பு வடிவமைப்பு & அபிவிருத்தி பகுதியில் பல படங்கள் நான் வரைந்திருந்த போதும், அவைகள் என் பங்களிப்பு மிகவும் குறைந்த அளவில்தான் இருந்தது. அதிகாரிகள் சொல்படி, இன்ச் அளவுகளிலிருந்து மெட்ரிக் அளவு முறைக்கு மாற்றியது, யோசனை திட்ட மாற்றங்கள் என்று பல

ரகமான மாற்றங்களுக்கு படம் வரைந்தது உண்டு.

என்னிடம் என்னுடைய மானேஜர் ஒரு ஸ்டீரிங் வீல் கொடுத்து, அதற்கு ஒரு கவர் டிசைன் செய்யச் சொன்னதும் அகமகிழ்ந்து போனேன்.

பிரிட்டிஷ் லேலண்டு டிசைன், ஜெர்மன் டிசைன் என்றெல்லாம் ஏதேதோ மானுவல் எல்லாம் பார்த்து, ஸ்டீரிங் வில் கேவிடி க்ரூவ் அளவுகள் எல்லாம் துல்லியமாக எடுத்து, நிறைய Sine/ cosine, Tan Theta கணக்குகள் எல்லாம் போட்டு, என்னுடனேயே வேலையில் சேர்ந்த நண்பர் தனசேகரன் என்பவரின் (இப்பொழுது இவர் உயிரோடு இல்லை) ஆலோசனையோடு அருமையான டிசைன் ஒன்றை உருவாக்கினேன்.



கருமையான பின்னணியில், வெண்மையான லேலண்டு எம்ப்ளம் மத்தியில் உள்ளது போன்று அமைப்பு. பிளாஸ்டிக்கில் இதை உருவாக்க முடியும் என்று உறுதியாக நம்பினேன்.

Silver foiling, embedded moulding என்று கனவுகள் கண்டு கொண்டிருந்தேன்.

என்னுடைய மேனேஜர் ஒரு சப்ளையரை வரவழைத்தார். Susan Indcom கம்பெனியின் பார்ட்னர் என்று ஞாபகம்.

அவர் படத்தைப் பார்த்தார், பிறகு என்னைப்

பார்த்தார்.

"புதுசா?"

"ஆமாம்"

"எப்போ சேர்ந்தீங்க? "

(ஓஹோ இவர் புதுசா என்று கேட்டது என்னுடைய டிசைனை இல்லையா!)

பதில் சொன்னேன்.

"இது முதல் டிசைனா?"

"ஆமாம்"

அவர் என்னுடைய மேனேஜரின் ரூமுக்குச் சென்று கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு பிறகு வெளியே வந்து, நான் அளவுகள் எடுத்து வைத்திருந்த ஸ்டீரிங் வீலையும் அளவு குறிப்புகளையும் என்னிடமிருந்து அபகரித்துச் சென்றுவிட்டார்.

இரண்டு வாரங்கள் கழித்து, என் மேனேஜர் என்னைக் கூப்பிட்டார். சென்றேன். அவர் மேஜை மீது அந்த சப்ளையர் கொடுத்த 'முழு நீல' கவர்

இருந்தது. "சப்ளையரால் இப்படித்தான் சப்ளை செய்ய முடியுமாம். நீ இதன் அளவுகளைத் துல்லியமாக எடுத்து, நீ வடிவமைத்த படத்தை இதைப் போல மாற்றிவிடு"

மாற்றினேன்.

வடிவமைத்தது ஒன்று, வந்தது முற்றிலும் வேறு ஒன்று.



இப்போ கூட, சத்தமிட்டு என்னைக் கடந்து செல்லும் லாரிகளிலோ அல்லது நான் பயணிக்கின்ற பழைய பேருந்துகளிலோ ஸ்டீரிங் வீலைப் பார்க்கும்போது எனக்கு இந்த நினைவுகள் எல்லாம் ஒருமுறை வந்து போகும்.

நீங்க அடுத்த முறை ஸ்டீரிங் வீலைப் பார்க்கும் பொழுது என்னை நினைத்துக் கொள்ளுங்கள். எனக்குப் புரை ஏறுகிறதா / தும்மல் வருகிறதா என்று பார்க்கிறேன்!

அலேக் அனுபவங்கள் 30 : ஆரம்ப காலத்தில் .....

அப்ரண்டிஸ் ஆக இருந்த பொழுது முதல் இரண்டு அல்லது ஒன்றரையாண்டுகள் பல பிரிவுகளிலும் பயிற்சி. மெஷின் ஷாப் முதல் அக்கவுண்ட்ஸ் செக்சன் வரையிலும் எல்லா பகுதிகளிலும் குறைந்த பட்சம் ஒருநாள் அதிகபட்சம் ஒருமாதம் என்று பயிற்சி உண்டு. (காண்டீனில் மட்டும் பயிற்சி கிடையாது)



ஒவ்வொரு பகுதிக்கும் ட்ரைனிங் சென்ற நாட்களில் அங்கு அரட்டை அடிக்க சில ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வேன். அதற்கு ஆள் பிடிப்பது ரொம்ப ஈசி.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள யாராவது ஒருவர், நீங்கள் யார், பெயரென்ன, எங்கிருந்து வருகிறீர்கள், எந்த ஊர் என்று ஏதாவது கேட்டுவிட்டால் போதும். விலாவாரியாக விவரங்கள் கூறி, அவரைப் பற்றிய விவரங்கள் கேட்டு, அவருடைய இண்டரஸ்ட் என்ன

என்று தெரிந்துகொண்டு, அந்த சப்ஜெக்டிலேயே பந்து போட்டு, பந்தடித்து விளையாட ஆரம்பித்துவிடுவேன்.

ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தபட்சம் ஒரு நண்பர் அதிக பட்சம் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் எல்லோரையும் நண்பராக்கிக் கொண்டுவிடுவேன். சந்தடிசாக்கில் நண்பருடைய பிறந்தநாள் எது என்று தெரிந்து வைத்துக்கொள்வேன். டயரியில் எழுதி வைத்துக்கொள்வேன். பிறந்தநாளில் அவரை நேரில் சென்று கைகுலுக்கி வாழ்த்திவிட்டு வருவேன்.



சூப்பர்வைசர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் (என்னுடைய பேட்ச் ஆட்களைத் தவிர) யாரும் சுலபமாகப் பழகமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் மேலதிகாரிகளுக்கு நிறைய பயப்படுபவர்கள்.

எனவே எனக்கு அதிக நண்பர்கள் தொழிலாளர் வர்க்கத்தினர்தான். அதிலும் குறிப்பாக செமி ஸ்கில்டு / அன் ஸ்கில்டு / காஷுவல் / தொழிலாளத் தோழர்கள் அதிகம். ஜாதி, மத, இன வித்தியாசமே கிடையாது. எல்லோரும் நன்கு பழகுவார்கள்.

நான் வடிவமைப்பு & அபிவிருத்திப் பகுதியில் நிரந்தர வேலை செய்ய ஆரம்பித்த பிறகு கூட, மற்றப் பகுதிகளில் ஏதேனும் வேலை ஆகவேண்டியிருந்தால், (உதாரணத்திற்கு) ஒரு சாம்பிள் பிராக்கெட் செய்ய ஸ்டீல் ப்ளேட் 7" X 8" தேவை என்றால், ஷியரிங் செக்சன் சென்று, அங்குள்ள நண்பரிடம் என் தேவையைக் கூறி, யாரிடம் கேட்டால் காரியம் ஆகும் என்று தெரிந்துகொண்டு அவரின் சிபாரிசோடு வேலையை முடித்துக்கொண்டு வருவேன்.



மெஷின் ஷாப்பில் ஓல்ட் மெஷின்ஷாப், நியூ மெஷின்ஷாப் என்று இரண்டு மெஷின்ஷாப்கள்.

அதில் ஓல்ட் மெஷின்ஷாப்புக்கு ட்ரைனிங் சென்றிருந்த பொழுது அங்கிருந்த ஒரு நண்பர், ஆரம்பக் காலத்தில் (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு / ஐம்பதுகளில்) லேலண்டு கம்பெனி எப்படி இருந்தது என்று விவரமாகச் சொன்னார்.

அதை அடுத்த பதிவில் பார்ப்போம்.

அலேக் அனுபவங்கள் 31 :: இளநீர் செய்த உதவி!

அசோக் லேலண்டு பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள google உதவியுடன் தெரிந்து கொள்ளுங்கள்

ஆனால், அதுவல்ல நான் சொல்ல வந்தது.



மெஷின்ஷாப்பில் வேலை பார்த்த, அசோக் லேலண்டின் ஆரம்ப நாட்களிலிருந்து பணிபுரிந்து வந்த ஒருவர் கூறிய விவரங்கள் அவர் சொன்னது போல, இங்கே பதிகின்றேன்.

" நீ எப்போ பொறந்தே?"

(சொன்னேன்.)

"அப்போவே நான் அசோக் லேலண்டு கம்பெனிலே சேந்துட்டேன், தெரியுமா?"

"ஓ அப்படியா?"

"ஆமாம் - அப்போ எல்லாம் நிரந்தர பணியாளர்கள் யாரும் இங்கே கிடையாது! தெரியுமா?"

ஆச்சரியமாகப் பார்த்தேன்.

"ஆமாம். ஒன்றிரண்டு துரைமாருங்க மட்டும் இருப்பாங்க. பீச் ரோடு (பின் நாட்களில் இராஜாஜி சாலை) வழியாக அசோக் லேலண்டு ஆள் பிடிக்கிற பஸ் ஒன்றிரண்டு வரும். பார்க்கிறதுக்கு தாட்டியா இருக்கறவங்களை எல்லாம் நீ வா / அல்லது வரியா வேலைக்கு - என்று கேட்டு பஸ்ஸில்

ஏற்றிக்கொண்டு வந்து இங்கே விடுவார்கள். "

"துரை யாராவது ஒருவர் இங்கிலீசுல தஸ் புஸ்ஸுன்னு சொல்லுவாரு, கொஞ்சம் விவரம் தெரிந்த உதவியாளர், ஒவ்வொருவரும் அவரவர்கள் உடல்வாகுக்குத் தகுந்த மாதிரி, என்ன வேலை செய்யணும் - ஆஸ்டின் மோட்டார் பாகங்களை எப்படி இணைக்கவேண்டும் என்று சொல்லிக்கொடுப்பார்.



எல்லோரும் கேட்டுப்போம். அதன்படி மோட்டார் பாகங்களை இணைப்போம்.

டீ நேரத்துல டீ. பன்னு. ரொட்டி, பிஸ்கட் எல்லாம் செலவில்லாம கிடைக்கும். சாப்பாடு நேரத்துல நல்ல சாப்பாடு. எட்டு மணி நேரம் வேலை முடிந்து வீட்டுக்குப் போகும்பொழுது ஆளாளுக்கு அவங்கவங்க செஞ்ச வேலைக்குத் தகுந்தாற்போல் கையில் நாலணா /ஆறணா/எட்டணா பத்தணா ஏதாவது கொடுப்பார்கள்!



அதை செலவு செய்ய ஒரு வாரம் ஆகும்! சில பேருங்க ஒரு வாரத்துக்கு ஒருமுறைதான் பீச்சு ரோடு பக்கம் வந்து, பயில்வான் போல நெஞ்சை நிமிர்த்தி, ஆள் பிடிக்கிற பஸ் வரும்பொழுது போஸ் கொடுப்பாங்க. ஒரு நாள் சம்பாதித்ததில் ஒரு வாரம் ஜாலியாக செலவழித்து, அடுத்த வாரம் ஒருநாள் வருவார்கள்!

ஆள் பிடிக்கிற பஸ்ஸில் வருகின்ற

காண்டிராக்டருக்கு சம்திங் கொடுத்து, அடிக்கடி வேலைக்கு வந்தவர்களும் உண்டு!

இப்போ உங்க ட்ரைனிங் ஆபீசராக இருக்கானே --- (ஹி ஹி பெயர் எல்லாம் சொல்லக்கூடாது!!!) அவன் பொன்னேரியிலிருந்து ட்ரைன் பிடிச்சு வருவான். சும்மா வரமாட்டான், கையில ரெண்டு மூணு எளநீ வாங்கிகிட்டு வருவான். சும்மா சொல்லக்கூடாது தஸ் புஸ்ஸுனு இங்கிலீஷ் பேசுவான்!
துரைமாருங்க கிட்ட அவன் இங்கிலீசுல பொளந்து கட்டுவான்.

துரைங்களுக்கு எல்லோருக்கும் இவனைப் பார்த்தா ஒரு இது! இப்போ பாரு அவன் ஆபீசர், நான் ஒரு சாதாரண தொழிலாளி! "



The entire factory, staff and workers, turned out in 1949 to deliver the first A 40 assembled by Ashok Motors.

உண்மையோ, பொய்யோ - இது அவருடைய வார்த்தைகளில், அவருடைய பார்வையில், அந்தக் கால அசோக் லேலண்டு!

===

படங்கள் : நன்றியுடன் இணையத்திலிருந்து சுட்டவை.

===

எதிர்காலத்தில், இன்னும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஆசை. பார்ப்போம்!

இத்துடன் அலேக் அனுபவங்கள் முதல் தொகுப்பு நிறைவடைகிறது

kggouthaman@gmail.com

https://engalblog.blogspot.com

cell : 9902281582 (messages only. Can’t respond to voice calls)